# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 24 °C
மழைக்கு சாத்தியம்

சுடர் 30 | கதிர் 117 | வள்ளுவர் ஆண்டு 2046 | பங்குனி 9, திங்கட்கிழமை 23.03.2015


## நாளை மறுதினமே அரச அதிபர் பதவியேற்பார்

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்.மாவட்ட அரச அதிபராக ந.வேதநாயகன் நாளைமறு தினம் புதன்கிழமையே பதவி யேற்பார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. முன்னதாக இன்று பதவியேற்பார் என்று தெரிவிக் கப்பட்டிருந்த போதும், ஜனாதி பதி தலைமையில் மீள்குடிய மர்வு ஆரம்பச் செயற்பாடு இடம்பெறுவதன் காரணமா கவே, அரச அதிபர் பதவியேற்பு பிற்போடப்பட்டுள்ளதாகதெரிவிக் கப்படுகின்றது.

பக்.24

# உருவானது புதிய தேசிய அரசு


## சு.க. எம்.பிக்கள் 26 பேர் நேற்று அமைச்சர்களாகப் பதவியேற்றனர்

கொழும்பு, மார்ச் 23
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆத ரவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய தேசிய அரசு நேற்று உருவா னது.சுதந்திரக்கட்சியின் 26 நாடாளு மன்ற உறுப்பினர்கள் நேற்று ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன முன் னிலை யில் சத்தியப்பிரமாணம் செய்து அமைச்சர்களாகப் பதவி யேற்றனர்.
ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் 11 பேருக்கு அமைச்சுப் பதவிகளும், 5 பேருக்கு இராஜாங்க அமைச்சுப்

பக்.24



## இந்திய மீனவர் 53 பேர் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாணம் மற்றும் தலை மன்னார் கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந் திய மீனவர்கள் 53 பேரை, அவர்களது 10 படகுகளுடன் இலங்கைக் கடற்படையினர் நேற் றுக் காலை கைது செய்துள்ள னர்.
இராமேஸ்வரம் மற்றும் நாகை மாவட்டங்களைச் சேர்ந்த இந் திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண் டிருந்தபோது இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப் பட்டனர். நெடுந்தீவுக்கு அண்

# வடமாகாண சபையுடன் முரண்படத் தயாரில்லை

## இப்படிச் சொல்கிறார் ஜனாதிபதி மைத்திரி



யாழ்ப்பாணம், மார்ச் 23
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடனோ அல் லது வட மாகாணசபையுடனோ எவ்விதத்திலும் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள அரசு தயா ராக இல்லை என்று திட்டவட்டமா கத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரனுடன் பேச்சு நடத்தி, மத் திய – மாகாண அரசுகளின் செயற் பாடுகளை வரையறுத்து செயற் படுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
மத்தியும் – மாகாண சபையும் இணைந்து செயற்படுவது தொடர் பில் சிந்திக்க வேண்டும் என்றும் அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய நேர்காண லிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.
"வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன்

பக்.24

## 'பீல்ட் மார்ஷல்' ஆனார் பொன்சேகா



கொழும்பு, மார்ச் 23
இலங்கையின் முன்னாள் இரா ணுவத் தளபதியும், ஜன நாயக கட்சித்தலைவருமான ஜெனரல் சரத் பொன்சேகா, ஜெனரல் பதவியிலிருந்து இலங்கை வர லாற்றில் முதன்முறையாக இரா ணுவ அதிகாரி ஒருவருக்கு வழங்கப்படும் பீல்ட் மார்ஷல் பதவிக்கு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவால் நியமிக்கப் பட்டுள்ளார்.
கொழும்பு ஜனாதிபதி செயல கத்துக்கு முன்னால் அமைந் துள்ள விமானப் படைத்தளத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற நிகழ் வின்போது அவருக்கு இப் பதவி உத்தியோகபூர்வமாக வழங் கப்பட்டது. இதன்மூலம் இலங் கையின் முதல் பீல்ட் மார் ஷல் என்ற சிறப்பையும் சரத் பொன்சேகா பெற்றுக்கொண் டார்.

பக்.24

# தோலகட்டி பகுதிக்குள் செல்லவிடாது விக்கியை திருப்பி அனுப்பியது ராணுவம்

### முதலமைச்சர் வடக்கு எல்லைக்குள் தடுக்கப்பட்ட இரண்டாவது சம்பவம் இது

யாழ்ப்பாணம், மார்ச் 23
மீள்குடியமர்வுக்கு விடுவிக்கப்பட்டதாகக் கூறப் பட்ட வயாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவினுள் அடங்கும் தோலகட்டி கிராமத்திற்குச் செல்வதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முயற்சித்த


பக்.24



## நிறைவேற்று அதிகாரத்தை வைத்திருப்பது ராணுவமே!

### கொழும்பு அரசு பெயரளவில்தான் இயங்குகிறது என்கிறார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், மார்ச் 23
இங்கு இராணுவமே நிறைவேற்று அதிகா ரத்தை வைத்துக் கொண்டிருப்பது போலவும், அரசு பெயரளவில் மாத்திரமே இயங்குவதா கவுமே உள்ளது. இராணுவத்தின் கட்டளையை ஜனாதிபதியும் – பிரதமரும் கேட்கின்றனரா? அல்லது ஜனாதிபதியினதும் – பிரதமரதும் கட்டளையை இராணுவம் கேட்கின்றதா என பது புரியவில்லை –இவ்வாறு வடக்கு மாகாண முதல மைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



வயாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு முழுமை யாக விடுவிக்கப் படுவதாகத் தெரி வித்து, மக்கள் அழைத்துச் செல்லப்பட்டு ஏமாற்றப்பட்டனர். இந்த நிலையில், வயா விளான் கிழக்குப் பிரதேசத்துக்கு முதலமைச் சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று மாலை சென்றார். அங்கு நின்ற ஒரு தொகுதி மக் களுடன் முதலமைச்சர் கலந்துரையாடினார்.
"கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர், சில வாரங்களில் வயாவிளான் முற்று முழுதாக மீள்குடியேற்றம் செய்யப்படும்

பக்.24

## நிபுணர் குழு அறிக்கை தெளிவாக இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 23
சுன்னாகம் நிலத்தடி நீர் மாசு தொடர்பில் வெளியிடப்பட்டிருக் கும் அறிக்கை தெளிவானதாக இல்லை என்று மக்கள் கூறுகின்ற னர் – இவ்வாறு தூய நீருக்கான பாதிக்கப்பட்டோர் ஒன்றியம் தெரி வித்துள்ளது. அவசரமாக அறிக் கையிடுவதன் நோக்கம் புரிய வில்லை. சினற்று நீரை பயன் படுத்தலாமா? எதிர்கால விளை வுகளுக்கு பொறுப்புக் கூறுவார் களா? என்று மக்கள் கேள்வி எழுப் புகின்றனர். விசேட செயலணி பொறுப்புடன் தெளிவானபதிலை வெளியிடாவிடின் மக்கள் வீதியில் இறங்கிப் போராடவேண்டிய நிலை ஏற்படும் என அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பக்.22

### பனிப்போருக்குப் பின்னர்

## விக்கி–ரணில் இன்று நேரடியாகச் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23
கடந்தசிலவாரங்களாகவடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனுக்கும், பிரத மர் ரணில் விக்கிரமசிங்கவுக் கும் இடையில் பனிப்போர் இடம் பெற்று வருகின்றது. இந்த நிலையில் வலளாயில் இடம் பெறும் மீள்குடியமர்வு நிகழ் வில், பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மற்றும் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இருவ ரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ளவுள்ளனர்.
வலி.வடக்கு மீள்குடியமர்வு செயற்பாட்டை உத்தியோக பூர்வமாக ஆரம்பிப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இன்று யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளனர்.

பக்.24

## விசாரணை அறிக்கை செப்ரெம்பரில் நிச்சயம்

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிப்பு

ஜெனிவா, மார்ச் 23
செப்ரெம்பர் மாத ஐ.நா. அமர் வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னராக, இலங்கை தொடர் பான போர்க் குற்ற விசாரணை அறிக்கை வெளியாகும். எத்த கைய அழுத்தங்களை,எவர் கொடுத் தாலும் அவற்றைத் தாண்டி – மீறி, செப்ரெம்பர் மாதம் அறிக்கை வெளி யாகும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. – இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன்

பக்.24

# சிறைகளில் வாடும் இளைஞர்களை விடுவிக்கும் எண்ணம் அரசுக்கில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

சிறையில் வாடும் எங்கள் தமிழ் இளைஞர்களுக்கு கடந்த அரசும் பொது மன்னிப்பு வழங்கவில்லை. தற்போது இந்த அரசும் பொதுமன்னிப்பு வழங்குவதாகத் தெரியவில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயம். தமிழினத்தை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று அன்று தந்தை செல்வா சொன்னார். இன்று இவர்களின் விடுதலைக்கும் கடவுளைத்தான் பிரார்த்திக்க வேண்டி இருக்கின்றது. – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

'நாங்கள்' அமைப்பால், கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஒழுங்கமைக்கப்பட்ட உதவித் திட்ட வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"உங்களுக்காக நாங்கள். அதனைத்தான் இந்த 'நாங்கள்' அமைப்பினர் கூறியிருக்கின்றனர். அதற்கு செயல்வடிவமும் கொடுத்திருக்கின்றார்கள். இந்த அமைப்பின் தலைவர் தனது உரையில், தடைகள் பல வந்ததாகவும், அதனை படிக்கல்லாக மாற்றியதாகவும் குறிப்பிட்டார். தடைகள் வராவிட்டால் எங்களுக்கு கஷ்டங்கள் தெரியாது. எங்களை நோக்கி தடைகள் வருகின்றது என்றால், நாங்கள் அந்தளவு தூரத்துக்கு வளர்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதுதான் அர்த்தம்.

மக்களின் மீள் வாழ்வுக்கு உதவுவதற்கு இந்த அமைப்பை நீங்கள் ஆரம்பித்திருக்கின்றீர்கள். இன்னும் உங்களுக்கு தடைகள் வரலாம். அதனையும், இதே போன்று படிக்கல்லாகத் தாண்ட வேண்டும். நாம் இன்னொருவனை தோற்கடித்துப் பெறுவதற்குப் பெயர் வெற்றி அல்ல. இதனை சுகிசிவம் தெளிவாகவே விளக்கியுள்ளார். நாம் எப்போதும், எங்களின் முழு சக்தியையும் திரட்டி, சகல முயற்சிகளையும் எடுக்க வேண்டும். அவ்வாறுதான் இலக்கை அடைய வேண்டும். அதுவே உண்மையான வெற்றி."– என்றும் அவர் தெரிவித்தார்.

"நான் இந்த நிகழ்வுக்கு வருவதற்கு முன்னர், கொழும்பில் நின்றிருந்த போது, யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமாகிய மாவை.சேனாதிராசாவுடன் மகசின் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தேன். கடந்த தடவை அங்கு சென்ற போது, 8 பேருக்கு மாத்திரமே தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் சிறைத்தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் இப்போது போன போது 30 பேர் வரையில் தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் விடயத்தை விசாரித்தேன். அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை ஒப்புக்கொண்டால், இரண்டு மூன்று வருடங்களில் விடுவிக்கப்படுவர். எனவே குற்றங்களை ஒப்புக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள். அதனை நம்பி அவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதுவரை வழக்கில்லாமல் பத்து பதினைந்து வருடங்கள் சிறைக்குள் இருந்து விட்டு, இப்போது தீர்ப்பு மூலம் மேலும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் வரையில் சிறையில் இருக்கும் நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இதில் இளம் பொறியியலாளர் ஒருவர் பத்து ஆண்டுகள் வரையில் இதுவரை சிறையில் இருந்தார். அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதால் அவருக்கு மேலும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக, ஒருவர் மீது பல்வேறு குற்றங்களைப் பதிவு செய்து அவர்களது வாழ்வை நிரந்தரமாகவே சிறைவைக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த ஒருவரிடம் ஏன் இவ்வாறு செய்தீர்கள் என்று கேட்டபோது, குற்றத்தை ஒப்புக்கொண்டால் 5 வருடம் சிறைத் தண்டனை. அதனை முடித்து விட்டு, நான் சாகின்ற காலத்திலையாவது மனைவி – பிள்ளைகளுடன் இருக்கலாம் என்றார். இதைக் கேட்கும் போதே எவ்வளவு கொடுமையாக இருக்கின் றது.

பத்து பதினைந்து வருடங்கள் காரணம் எதுவுமில்லாமல் சிறையில் அவர்களது இளமைக் காலத்தை தொலைத்து விட்டார்கள். இனித் தீர்ப்பு என்ற பெயரில் இன்னொரு பத்து பதினைந்து வருடம். அவர்களது வாழ்வே சிறைதானா? இவர்களை சிறைக்கு அனுப்பிய, இவர்களுக்கு கட்டளை பிறப்பித்த தலைவர்கள் இன்று நாடாளுமன்றத்தில் சொகுசாகவும், முன்னாள் முதலமைச்சர்களாகவும் இருக்கின்றனர். அவர்களுக்கு வழக்கும் இல்லை. சிறையும் இல்லை. பொது மன்னிப்பும் சுகவாழ்வும். ஆனால் இவர்களுக்கு எதுவுமில்லை. கடந்த அரசும், இவர்கள் மீது கருணை காட்டி பொதுமன்னிப்பில் விடுவிக்கவில்லை. தற்போது இந்த அரசும் இவர்களை பொதுமன்னிப்பில் விடுவிப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

தந்தை செல்வா, தமிழினத்தைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னார். ஆனால் இன்று தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு கடவுளை பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை"– என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ந–5)

# போரால் நலிவுற்றுள்ள மாணவருக்கு உதவிகள்



யாழ்ப்பாணம், மார்ச் 22

போரில் தாய் தந்தையை இழந்த, போரின் பாதிப்புகளிலிருந்து இன்னும் மீளமுடியாது பொருளாதார ரீதியாக நலிவுற்றுள்ள, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை செல்லும் 144 மாணவர்களுக்கு, அவர்களின் கற்றல் செயல்பாடுகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கற்றல் உபகரணங்களும், 15 முன்பள்ளிகளுக்கு மனவளக்கலைக்கான கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு 'நாங்கள்' இயக்கத்தின் கிளிநொச்சி மாவட்ட செயல்பாட்டாளர் மு.தாஸ் ஒழுங்கமைப்பில், யாழ்ப்பாணம் மாவட்ட தலைமைச் செயற்பாட்டாளர் செ.பிரதாப் தலைமையில கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி யாழ்ப்பாணம் மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டு உதவிகளை வழங்கினார்.

உருத்திரபுரம் புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் அருள்சகோதரி மார்க்ரெட், கிளிநொச்சி மத்திய கல்லூரி [illegible] அதிபர் ரு.சிம்மேந்திரன், உமையாள்புரம் வித்தி யாலய அதிபரும் – முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட பெண்கள் பரா மரிப்பு இல்லத்தின் (இரத்தினபுரம்) பணிப்பாளருமாகிய திரு.அருளா னந்த சிவம், இவர்களுடன் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள், வடக்கு, கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் – இளைஞர் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ந–21)

# ஜனாதிபதி வரும் நிகழ்வு கண்துடைப்பு நாடகமே

## நிலங்களைப் பெற்றுத்தருமாறு வயாவிளான் மக்கள் வடக்கு முதலமைச்சரிடம் மனு

யாழ்ப்பாணம், மார்ச் 23

ஜனாதிபதி இன்று கலந்துகொள்ளும் நிகழ்வு ஒரு கண்துடைப்பு நாடகம். இவ்வாறான நிலையில் எதிர்காலத்தில் ஒரு சிறு துண்டு காணியாவது மீள கையளிக்கப்படுமா? என்ற சந்தேகம் எமக்கு இருக்கின்றது. எனவே, எமக்காக வாதாடி எமது நிலங்களை எமக்குப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.– இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் வயாவிளான் மக்கள் சார்பில் மனுக் கையளிக்கப்பட்டுள்ளது.

வயாவிளான் மக்கள் மற்றும் அருட் தந்தையர்கள் வடக்கு மாகாண முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் இந்த மனுவைக் கையளித்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் இங்கு வந்திருந்தபோது, வயாவிளான் கிழக்கு ஜே/244 கிராம சேவையாளர் பிரிவு விடுவிக்கப்பட்டது. இதற்குரிய பதிவுகளும் முன்னெடுக்கப்பட்டது. மேலும் 20 ஆம் திகதி காணிகளைப் பார்வையிடலாம் என்றும், 23 ஆம் திகதிக்குப் பின்னர் குடியமரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

25 ஆண்டுகளுக்குப் பின்னர் எமது நிலங்களைக் காணச் சென்ற எமக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஜே/244 கிராம சேவையாளர் பிரிவினுள் ஒட்டகப்புலம், திக்கமுனை, வடமூலை, தோலகட்டி போன்ற பகுதிகள் அடங்கும். மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்படுவார்கள் என்ற பகுதியினுள், முட்கம்பி வேலிகள் போடப்பட்டு படைமு காம் கள் பலப்படுத்தப்படுவதையே நாம் கண்டோம்.

மேலும் மக்களுடைய வீடுகளுக்கு ஊடாக இராணுவத்தின் முட்கம்பி வேலிகள் ஊடறுத்துச் செல்கின்றது. ஆரம்ப பாடசாலைகள், மக்களின் வழிபாட்டுத் தலங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்றவை இராணுவத்தின் கட்டுப்பாட்டி னுள் வருகின்றது. தெல்லிப்பழை பிரதேச செயலகம், தெல்லிப்பழை மருத்துவமனை, வயாவிளான் மகா வித்தியாலம் ஆகியவற்றுக்கு நாம் பல மைல்கள் தூரம் சுற்றியே போக வேண்டியிருக்கும். அத்துடன் போக்குவரத்து இராணுவ முகாம்களின் ஊடாகவே இருக்கும்.

எனவே ஜே/244 கிராம சேவகர் பிரிவும், ஜே/252 கிராம சேவகர் பிரிவும் முழுவதுமாக விடுவிக்கப்படுகின்ற நிலையிலேயே மக்கள் இந்தப் பிரதேசத்தில் குடி[illegible]ர முடியும். அதாவது ஒட்டகப்புலத்திலிருந்து வயாவிளான் சந்தி வரைக்குமான பிரதேசத்திலிருக்கும் இராணுவ முகாம்கள், முட்கம்பிகள் அகற்றப்படுகின்ற நிலையிலேயே மக்கள் இங்கு குடியமர முடியும்.

விடுவிக்கப்படும் காணிகளை உத்தியோகபூர்வமாக கையளிக்க ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் வரவுள்ளனர். நாங்கள் இலவு காத்த கிளிகளாகி விடுவோமோ என்ற அச்சம் இப்போது எழுந்துள்ளது. இவையாவும் வெறும் அரசியல் கண்துடைப்பு நாடகங்களாகவே தோன்றுகின்றது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உறுதியோடு குரல் கொடுத்து வரும் நீங்கள், எமது குரலாக ஒலிக்க வேண்டும். ஜனாதிபதியின் நிகழ்வில், எமது காணி உரிமைக்காக நீங்கள் குரல் கொடுக்க வேண்டும் – என்று முதலமைச்சரை குறித்த மனுவில் கேட்டுக் கொண்டுள்ளனர். (ந–5)

# வலி.வடக்கு பிரதேச சபை வயாவிளானில் துப்புரவு

வயாவிளான் மற்றும் பலாலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில், வலி.வடக்குப் பிரதேச சபையால் துப்புரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வயாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு முழுமையாக விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு மக்கள் கடந்த வெள்ளிக்கிழமை அழைத்துச் செல்லப்பட்டனர். ஆனால் வயாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு முழுமையாக விடுவிக்கப்படவில்லை. ஒரு பகுதி மாத்திரம், அதுவும் மக்கள் குடியிருப்பு அல்லாத பிரதேசம் விடுவிக்கப்பட்டிருந்தது. பலாலி தெற்கு கிராம சேவையா ளர் பிரிவிலும் ஒரு பகுதி விடுவிக் கப்பட்டிருந்தது.

கடந்த 25 வருடங்களாக மக்கள் பாவனையில் இல்லாமல் இருந்த பிரதேசம் காடுமண்டியிருந்தது. அத்துடன் வீதிகள், குச்சொழுங்கைகள் என்பன இருந்த இடம் தெரியாமல் அழிவடைந்து போயிருந்தன. இந்த நிலையில், வயாவிளான் கிழக்கு மற்றும் பலாலி தெற்கு பிரதேசத்திலுள்ள பற்றைக் காடுகளை துப்புரவு செய்யும் நடவடிக்கைகளை வலி.வடக்குப் பிரதேச சபை ஆரம்பித்துள்ளது.

வலி.வடக்குப் பிரதேச சபையால் பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன், மக்களுக்கு அவசியமான பாதைகள் உடனடியாக துப்புரவு செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந–5)

# பாடசாலை கட்டடங்கள் அமைக்க ரூ. 488 மில்லியன் உடன் தேவை

## வடக்கு மாகாண சபையின் அறிக்கை கூறுகின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடக்கு மாகாணத்தில் பாடசாலைக் கட்டடங்கள் அமைப்பதற்கும், ஆசிரிய விடுதிகளை நிர்மாணிப்பதற்குமாக 488 மில்லியன் ரூபா உடனடித் தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் கொழும்பு அரசிடம், வடக்கு மாகாண சபையால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. – இவ்வாறு வடக்கு மாகாணத்தின் கல்வித்துறை தொடர்பான, மாகாண சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு 817 பாடசாலைகள் இயங்கின. தற்போது ஆயிரத்து 20 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. 2010 ஆம் ஆண்டு, 21 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை காணப்பட்டது. தற்போது 16 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலைமை காணப்படுகின்றது. தரம் ஒன்றுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும் நடவ்டிக்கையில் 2010 ஆம் ஆண்டு 19 ஆயிரத்து 547 பேராகக் காணப்பட்டது, தற்போது 17 ஆயிரத்து 450 ஆகக் குறைந்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்துக்கு தெரிவாகும் மாணவர் வீதம், 2010 ஆம் ஆண்டு 54 சதவீதமாகக் காணப்பட்டது. அது தற்போது 64 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதே போன்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் மாணவர் சதவீதமும் 2010 ஆம் ஆண்டு 57 சதவீதமாகக் காணப்பட்டது. தற்போது 65 சதவீதமாக அதிகரித்துள்ளது. – என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பகுதியாக பூரணப்படுத்தப்பட்ட – பூரணப்படுத்தப்படாத 68 கட்டடங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு 318 மில்லியன் ரூபா தேவை. மடு, துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா வடக்கு கல்வி வலயங்களில் ஆசிரியர் விடுதிகள் 17 அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு 120 மில்லியன் ரூபா தேவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


மீள்குடியமர்வு நடந்த இடங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலைகளில் கைகழுவுதல் வசதிகளை ஆரம்பிப்பதற்கு 50 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. முழுமையாக 488 மில்லியன் ரூபா உடனடியாகத் தேவையாவுள்ளது.– என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந–5)

COMPUTING | 0777 692318
JAFFNA

13 லட்சங்கள்
WOW!
கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்

கிரிக்கெட் கொண்டாட்டம்
2015 | மார்ச் | 23 திங்கட்கிழமை

# மிஷ்பா 3000



பாகிஸ்தான் அணியில் தலைமைப் பொறுப்பில் சிறந்து விளங்கிய மிஷ்பா தலைமைத்துவ இன்னிங்ஸிலும் மேலும் ஒரு சாதனையை படைத்துள்ளார்.
பாகிஸ்தான் அணியின் தலைவராக விளையாடிய மிஷ்பா 3003 ஓட்டங்களை சேர்த்துள்ளார். இந்த சாதனை மைல் கல்லை எட்டும் இரண்டாவது பாகிஸ்தான் அணித் தலைவர் என்ற பெருமை அவருக்கு கிடைத்துள்ளது. மிஷ்பா இதுவரை ஒருநாள் ஆட்டங்களில் எந்தவொரு சதத்தையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக, இம்ரான் கான் தலைவராக 3247 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதுவரை பல அணிகளை சேர்ந்த 16 அணித்தலைவர்கள் மட்டுமே இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர். (ரி)

## 7 அரையிறுதிகள்

நடப்பு உலகக்கிண்ண தொடரில் அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ள ஆஸ்திரேலிய அணி உலகக் கிண்ண அரங்கில் 7வது முறையாக அரையிறுதிக்கு முன்னேறிய அணி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
உலகக்கிண்ண வரலாற்றில் ஆஸ்திரேலிய அணி 1975, 1987, 1996, 1999, 2003, 2007, 2015ஆம் ஆண்டுகளில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளதுடன் அவற்றில் நான்கு தடவைகள் கிண்ணத்தை தனதாக்கியது. 1999, 2003, 2007 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக கிண்ணங்களை தனதாக்கியமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# இந்தியாவை வீழ்த்துவோம்

## அறிக்கை விட்டார் அதிரடி வீரர் மக்ஸ்வெல்



உலகக் கிண்ண தொடர் தொடங்கும் முன்பாக, ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆட்டங்களில் ஒரு வெற்றியை பெறக்கூட முடியாமல் இந்திய அணி தட்டித்தடுமாறியது. அதை அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன், இவ்வாறு ஆணவத்தோடு பேட்டியளித்துள்ளார் ஆஸ்திரேலியாவின் அதிரடி சகலதுறை வீரர் மக்ஸ்வெல்.
இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் எதிர்வரும் 26ஆம் திகதி, சிட்னியில் நடைபெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மோதவுள்ளன. இந்திய அணி நடப்பு உலகக்கிண்ண தொடரில் எந்த ஒரு ஆட்டத்திலும் தோற்காமல், அரையிறுதி வரை முன்னேறியுள்ளது. அதனையடுத்து இந்தியாவுடன் மோதும் அரையிறுதி குறித்து கருத்துத்தெரிவிக்கையிலேயே மக்ஸ்வெல் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இந்திய அணியை வெற்றிகொள்வதென்பது இலகுவான காரியம். பலமான அணியான எங்களுக்கு முன்னால் இந்திய அணி அவ்வளவு சாவாலானது அல்ல. ஆஸியின் தொடர்வெற்றிகளை இந்திய அணி எளிதில் மறந்திருக்க மாட்டார்கள். ஆஸி என்றதும் இந்தியா மனதளவில் சற்று தடுமாறியிருப்பார்கள். இதனால் இந்த அரையிறுதியில் ஆஸி ஆதிக்கம் செலுத்தும். என்றார். (ரி)

## அசாத்தியப் பிடியெடுப்பு



நான்காவது காலிறுதியில் மே.தீவுகளின் அதிரடி வீரர் சாமுவேல்சை எல்லைக்கோட்டுடன் வைத்து வெற்றோரி பிடியெடுத்தவிதம் சமூக வலைத்தளங்களில் பரபரப்பாக பரவி வருகின்றது.
394 என்ற எட்டமுடியாத இலக்கினை சாத்தியமாக்கும் நோக்கில் சாமுவேல்ஸ் 15 பந்துகளில் 27 ஓட்டங்களை குவித்து அதிரடியாக சென்றுகொண்டிருந்தார். குறுகிய நேரத்திலேயே நான்குகளும் ஆறுகளும் அவரது துடுப்பில் பட்டு எகிறின. இந்நிலையில் போல்ட் பந்தை சிக்சருக்கு தூக்கியடித்தார் சாமுவேல்ஸ். அந்த பந்து சிக்சருக்கு சென்றுவிடும் என்று ரசிகர்கள் நினைத்திருந்த நேரத்தில், வெற்றோரியின்

பக்கம் 04

## இரண்டு விரல்களில் இரட்டைச்சதம்



நடப்பு உலகக்கிண்ண தொடரின் நான்காவது காலிறுதியில் இரட்டை சதமடித்த குப்திலுக்கு இடது காலில் மூன்று விரல்கள் கிடையாது. பெருவிரலும், அதற்கடுத்த விரலும் மட்டுமே உள்ளது. என்ற வெளிவராத செய்தி தற்பொழுது காட்டுத்தீயாய் பரவி வருகின்றது.
குப்திலின் 13ஆவது வயதில் இயந்திர பளுதூக்கியில் சிக்கியதில் காலின் 3 விரல்கள் நசுங்கின. அதை சரி செய்வதற்கு கடுமையாக முயற்சித்தபோது தோல்விதான் மிஞ்சியது. அதனால் அவருடைய 3 விரல்களும் அகற்றப்பட்டன. விரல்களை இழந்த துக்கத்தால் மனம் உடைந்தபோதும், காயம் குணமடைந்த பிறகு நடக்கத் தொடங்கிய குப்தில், தன்னால் எந்தப் பணியை

பக்கம் 04

# இந்தியா நியூஸிலாந்து இறுதியில் மோதும்

பலம்மிக்க இந்தியாவை ஆஸ்திரேலிய அணியால் அசைக்க முடியாது. முதலாவது அரையிறுதியில் நியூஸிலாந்தும் இரண்டாவது அரையிறுதியில் இந்தியாவும் வெற்றி பெறும் இறுதியாட்டத்தில் இந்தியா மற்றும் நியூஸிலாந்து அணிகள் கிண்ணம் வெல்லும் என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் முன்னணி வீரரும், தொலைக் காட்சி வர்ணணையாளருமான ரமீஸ் ராஜா.
இது தொடர்பாக ரமீஸ்ராஜா தெரிவித்ததாவது முதலாவது அரையிறுதியில் சொந்த மண் பலம் நியூஸிலாந்துக்கு மிகவும் சாதகமாக உள்ளது. இதனால் தென்னாபிரிக்

பக்கம் 04

## அரையிறுதியில் நொறுக்குவார் ஹோக்லி



நடப்பு உலகக்கிண்ண தொடரில் விராட் ஹோக்லி சரியாக ஓட்டங்களை குவிக்காதது தொடர்பாக டோனி கவலை ஏதுவும் தெரி விக்கவில்லை. மாறாக அரையிறுதியில் அடித்து நொறுக்குவார் என்று தெரிவித்துள்ளார்.
சமீப காலமாக ஹோக்லி சுமாரும் இல்லாமல் சுப்பரும் இல்லாமல் இடையே நிண்டு திண்டாடிக்

பக்கம் 04

# எல்லையற்ற நட்புறவே வெற்றிக்கு காரணம்

ஒருநாள் ஆட்டங்களில் நடப்பு உலகக்கிண்ண தொடரின் காலிறுதி வெற்றியுடன் டோனி தனது 100வது தலைமைத்துவ வெற்றி யைப்பதிவு செய்தார்.
உலகக்கிண்ண தொடரின் காலிறுதியில் பங்களாதேஷை இந்தியா வீழ்த்தியது. டோனியின் தலைமையின் கீழ் ஒருநாள் ஆட்டங்களில் இந்தியா பெறும் 100வது வெற்றியாகவும் இது பதிவுசெய்யப்பட்டுள்ளது. 177ஆவது ஒருநாள் ஆட்டங்களில் டோனி தனது தலைமையின் கீழ் 100ஆவது வெற்றியைப்பெற்று சாதனை புரிந்துள்ளார்.
ஆஸ்திரேலிய அணித்தலைவர்களாக இருந்த ரிக்கி பொண்டிங் 165 ஒருநாள் ஆட்டங்களில் ஆஸியை வெற்றிபெறச் செய்துள்ளார். அவருக்கு அடுத்த இடத்தில் ஆலன் பார்டர் 107 ஆட்டங்களில் தன் தலைமையின் கீழ் ஆஸ்திரேலியாவுக்காக வெற்றிபெற்றுத் தந்துள்ளார். இவர்களுக்கு அடுத்து டோனி 100 வெற்றிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.



ஆஸ்திரேலியர் அல்லாத அணித் தலைவர் ஒருவர் பெற்றுள்ள அதிகப்படியான வெற்றிகள், ஆசிய அணித்தலைவர்களில் அதிகப்படியான வெற்றிகளைப் பெற்றவர், ஓய்வு பெறாத அணித்தலைவர் பெற்றுள்ள அதிகப்படியான வெற்றிகள் என பல தலைமைத்துவ சாதனைகளை டோனி இந்த வெற்றியின் மூலம் படைத்துள்ளார்.
தொடர் வெற்றிகள் குறித்து டோனி தெரிவிக்கையில் வீரர்களுக்கும், பயிற்சியாளர்களுக்குமே இந்த வெற்றிகள் உரித்தானது. நம் அணியிலிருந்து அதிக ஓட்டங்களை எடுத்தவர்கள் பட்டியலில், அதிக வீரர்கள் இல்லை ஆனால் அனைவரும் சராசரியாக விளையாடுகின்றனர். இந்த வெற்றிகளுக்கெல்லாம் டோனி

பக்கம் 04

03 ஆம் பக்கத் தொடர்ச்சி....

## சுழலில் ஆஸி. சுழலும்

சுழல் பந்துவீச்சை வீசுவதிலும் எதிர் கொள்வதிலும் தொடர்ந்து தடுமாறிவரும் ஆஸ்திரேலிய அணியை அந்த அணியின் முன்னாள் தலைவர் சப்பேல் எச்சரித்ததுடன் ஆலோசனைகளும் கொடுத்துள்ளார்.
அது தொடர்பாக இயன் சப்பல் தெரிவித்ததாவது ஆஸ்திரேலிய அணியில் தரம் வாய்ந்த சுழற்பந்து வீரர் இல்லாதது பின்னடைவாக இருக்கிறது. அதேநேரம் இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் மோதும் இரண்டாவது அரையிறுதி சுழல் பந்துவீச்சுக்கு சாதகமான சிட்னி மைதானத்திலேயே நடைபெற இருக்கின்றது. சுழல் பந்துவீச்சில் ஆஸ்திரேலியா எந்தளவு பலவீனமாக உள்ளதோ அதற்கு மாறாக இந்திய அணி சுழலில் பலமாக உள்ளது. இந்திய அணியின் சுழலுக்கு ஆஸ்திரேலியா ஈடுகொடுப்ப தென்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆஸ்திரேலியா அரையிறுதியில் வெல்லவேண்டுமானால் இருக்கும் வேகப்பந்து வீச்சாளர்கள் இயலுமானவரை பந்தை திருப்பங்களுடன் வீச வேண்டும். இல்லையென்றால் ஆஸி இறுதி ஆட்டத்தை மறக்க வேண்டிவரும் என்றார். (ரி)



## அதிரடி தொடரும்



உலகக்கிண்ண தொடருடன் கிறிஸ் கெயில் ஓய்வு பெறுவது தொடர்பாக சில் செய்திகள் வெளிவந்த நிலையில் வாந்திகளை நிராகரித்த கெயில், தொடர்ந்து விளையாடவுள்ளதாக தெரிவித்துள்ளார்.
உலகக்கிண்ண தொடரில் நான்காவது காலிறுதி ஆட்டத்தில் மே. தீவுகள் அணி 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்திடம் தோல்வி கண்டு அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது. இந்த தோல்விக்கு பின்னர் ஓய்வு பெறுவது தொடர்பாக ஏதேனும் முடிவு உள்ளதா என்பது பற்றி தீவுகளின் அதிரடி ஆட்டக்காரரான 35வயது கிறிஸ் கெயில் அளித்த பேட்டியில், காயத்தால் நான் அவதிப்பட்டு வருவது உண்மைதான். ஆனாலும் நான் எந்த வடிவிலான கிரிக்கெட் ஆட்டத்திலும் இருந்து ஓய்வுபெறும் திட்டம் இல்லை. அடுத்த ஆண்டு நடைபெறும் ரி–20 உலகக்கிண்ண தொடரிலும் மே.தீவுகளாக விளையாட விரும்புகிறேன். என்னை ஓய்வுபெறச் சொல்லி எந்தவித அழுத்தங்களும் என்மீது திணிக்கப்படவில்லை. என்னால் தொடர்ந்து விளையாட முடியும் என்றே கருதுகின்றேன். ஓய்வு பெறும் திட்டம் இருந்தால் முன்கூட்டியே தெரிவிப்பேன் என்றார். (ரி)

## செல்வது கூட்டமாய் வருவது சிங்கிளாய்

நடப்பு உலகக்கிண்ண தொடரின் மூன்றாவது காலிறுதியில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்து தொடரைவிட்டு வெளியேறிய பாகிஸ்தான் அணி வீரர்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக தனித்தனியாக நாடு திரும்புகின்றனர்.



முதல் கட்டமாக சில வீரர்கள் நாட்டுக்கு புறப்பட்டனர். அதில் அப்ரிடி, சர்பிராஸ் உள்ளிட்ட சில வீரர்கள் இருந்தனர். இரண்டாவது கட்டமாக சில வீரர்கள் இன்று பாகிஸ்தானை வந்தடைவார்கள். பயிற்சியாளர் வக்கார்யுனிஸ், மற்றும் யுனிஸ்கான ஆகியோர் தற்பொழுது நாடு திரும்பவில்லை. அவர்களின் கோரிக்கைகளுக்கேற்ப அவர்கள் குடும்பத்துடன் ஆஸியில் செலவிடுவார்கள். ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் அவர்கள் நாடு திரும்புவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. (ரி)

## இரண்டு விரல்களில் இரட்டைச் சதம்

யும் செய்ய முடியும் என்பதை உணர்ந்தார். அது முன்பைவிட கடுமையாக உழைக்கத் தூண்டியது. அதன் காரணமாக புதிய உத்வேகத்தையும், நம்பிக்கையையும் பெற்ற அவர் தனது இலட்சியத்தை நிறைவேற்றும் நோக்கில் கிரிக்கட் வீரராக உருவெடுக்க ஆரம்பித்தார்.
சாதாரண கிரிக்கட் வீரர் கிடையாது நியூஸிலாந்தின் நம்பிக்கை நட்சத்திரம் அவரே. தீவுகளுக்கெதிரான காலிறுதியில் வேகப்பந்து வீச்சுக்குப் பெயர்போன தீவுப்பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சுக்களை அடித்து நாசம் செய்து இரட்டைச்சதத்தை பதிவுசெய்தார். இதன் மூலம் சாதனைக்கு ஊனம் தடையாக இருக்காது என்பதை அவர் நிரூபித்துள்ளார். அவருக்கு இரண்டு விரல்கள் மட்டுமே இருப்பதால் "டூ டோஸ்" (இரண்டு விரல்) என்ற பட்டப் பெயர் சொல்லி அவரை அழைக்கிறார்கள். இரண்டு விரல்களை வைத்துக்கொண்டு சரியாக நடக்கக்கூட தள்ளாடும் நிலையில் ஒரு நாள் ஆட்டங்களில் நியூஸிலாந்து சார்பாக அதிக ஓட்டங்களை எடுத்த வீரர். ஒருநாள் ஆட்டங்களில் நியூஸிலாந்து சார்பாக முதல் இரட்டைச்சதம் அடித்த வீரர். ஒருநாள் ஆட்டங் களில் இரண்டாவது கூடிய ஓட்டத்தைப் பெற்ற வீரர். உலகக் கிண்ண தொடரில் அதிகூடிய ஓட்டத்தைப் பெற்ற வீரர். என்ற பற்பல சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார் குப்தில். (ரி)



## அரையிறுதியில் நொறுக்குவார் ஹோக்லி

கொண்டிருக்கிறார். இது ரசிகர்களின் எதிர்பார்ப்புகளுக்கு இணங்கவில்லை என்பதால் ஹோர்க்லியின் தடுமாற்றம் குறித்து டோனியிடம் வினவியபோது ஹோக்லி தடுமாறுகின்றார் என்று நான் நினைக்கவேயில்லை. அவர் ஆதிக்கம் செலுத்தும் ஒரு வீரன். தனது பாணியில் ஆடுவதே அவருக்குப் பிடித்தமானது. அவர் மோசமாக விளையாடியதாக ஒரு போதும் கருத முடியாது என்பதை உறுதியாகக் கூறுகிறேன். ஒவ்வொரு முறை அவர் களமிறங்கும் போதும் சதம் அடிப்பார் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. நாம் டெஸ்ட் தொடரை தொடர்புபடுத்தி அவரது துடுப்பாட்டத்தைப் பார்க்கிறோம் என்று நான் நினைக்கிறேன். அவர் பயிற்சியில் சரியான முறையில் உள்ளார், அவர் பெரிய ஆட்டங்களுக்கான வீரர், பெரிய தினத்தன்று பெரிய ஆட்டத்தில் நிச்சயம் சிறப்பாக விளையாடுவார். அரையிறுதியில் அடித்து நொறுக்குவார் என்றார். (ரி)

## அசாத்திய பிடியெடுப்பு

சூப்பர் பிடியெடுப்பு பதிவானது. பந்து தன்னை தாண்டி போகும் போது காற்றில் பறந்து அதை இடது கையால் பிடியெடுத்து ஆட்டமிழப்பாக மாற்றினார். இதற்காக சில வினாடிகள் அவர் காற்றில் பறந்தபடி நிற்க வேண்டியதாயிற்று. இதை பார்த்த நியூஸிலாந்து ரசிகர்கள் ஆனந்த கூத்தாடினர். இத்தனைக்கும் வெற்றோரி 18 அல்லது 20 வயது வீரர் கிடையாது. 36 வயதான மூத்த வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)


## எல்லையற்ற நட்புறவு

என்ற வசனத்தை நீங்கள் பயன்படுத்தத் தேவையில்லை. நான் செய்தது எனது வீரர்களுடன் கொண்டிருந்த எல்லையற்ற நட்புறவு மட்டுமே. நட்போடு சேர்த்து தீவிரத்தையும், நம்பிக்கையையும் விதைத்தேன் அனைத்தும் சாதகமாக திரும்பின– என்றார். (ரி)

## கெயிலா இது

நடப்பு உலகக்கிண்ண தொடரின் நான்காவது காலிறுதியில் குப்தில் இரட்டைச்சதம் கடந்து இறுவரை ஆட்டமிழக்காது களத்தில் நின்றார். குப்தில் இரட்டைச்சதம் அடித்ததும் கெயில் குப்திலை வாழ்த்தியமை குப்திலின் மனதை மிகையாக கவர்ந்துள்ளது. இதனால் கெயில் தொடர்பாக குப்தில் புகழ்ந்து தள்ளியுள்ளார்.
நான் முறியடித்தது கெயிலின் சாதனையை ஆனால் சற்றும் அதைப் பற்றி கவலைப்படாத கெயில் முதல் நபராக வந்து என்னை வாழ்த்தியது எனக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி தந்தது. என்றார். (ரி)

## இந்தியா நியூஸிலாந்து



காவை நியூஸிலாந்து வெற்றி கொண்டு இறுதிக்கு முன்னேறும். இரண்டாவது அரையிறுதியில் இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன. இதில் ஆஸ்திரேலியாவிற்கு சொந்த மண் பலம் சாதகமாக இருந்தாலும். இந்தியாவிற்கும் ஆஸ்திரேலிய ஆடுகளங்கள் பழக்கப்பட்டுவிட்டன. இதைவிட துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று அனைத்திலும் இந்திய அணி ஆஸ்திரேலியாவை விட பலமாகவே உள்ளது. இதனால் ஆஸியை வீழ்த்தி இந்தியா இறுதிக்கு முன்னேறும். இறுதியில் இந்தியா மற்றும் நியூஸிலாந்து அணிகள் பலப்பரிட்சை செய்யும் என்றார். (ரி)


நடப்பு உலகக் கிண்ணத் தொடரின் தென்னாபிரிக்காவுடனான காலிறுதியில் சங்ககார ஒரு கட்டத்தில் 90 பந்துகளில் 40 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தார். இதனால் கடுப்பான அணித்தலைவர் மத்தியூஸ் சங்ககாரவை பேசுவதைப் போல் நகைச் சுவையாக சமூக வலைத்தளங்களில் பதிவான ஒரு பதிவே இது.




## வெட்கம்

நடப்பு உலகக்கிண்ண தொடரின் நான்காவது காலிறுதியில் தீவுகளின் பந்துவீச்சை நியூஸிலாந்து ஊதித் தள்ளியது. மே.தீவுகளின் கட்டுக்கோப்பற்ற பந்துவீச்சுக்கு அந்த அணியின் முன்னாள் நட்சத்திரமும் தலைவருமான லாரா கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
இது தொடர்பாக லாரா தெரிவித்ததாவது இதுவரை நடந்த தொடர்களிலேயே மேற்கிந்தியத்தீவுகளின் குப்பையான பந்துவீச்சென்றால் நடப்பு உலகக்கிண்ண தொடரின் பந்துவீச்சுத்தான். நியூஸிலாந்து வலிமையான அணிதான். ஆனால், தீவுகள் தனது வலிமையை வெளிக்காட்டவே இல்லை, ஆட்டம் கடினமாக மாறிய நிமிடத்திலேயே மேற்கிந்திய தீவுகள் சுருண்டு விட்டது. தீவுகளின் பந்துவீச்சைப் பார்க்கையில் வெட்கமாக உள்ளது என் றார்.
முன்னாள் ஆஸ்திரேலிய அணித் தலைவர் இயன் சப்பல் இது குறித்து தெரிவிக்கையில் ஒரு காலத்தில் தீவுகள் அனைத்து அணிகளுக்கும் பலத்த அடி கொடுக்கும் வலிமையான அணியாக இருந்தது. ஆனால் இன்று... அவர்களின் வெளியேற்றத்தை பார்க்கையில் வருத்தமாக இருக்கிறது. என்றார். (ரி)

# நினைத்தது நடந்தது



நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதிக்கு தகுதிபெறும் அணிகள் என்று தான் கணித்த அனைத்தும் தெரிவாகியிருப்பதாக தெரிவித்த கங்குலி அரையிறுதி ஆட்டங்களில் எந்த அணிகள் வெற்றிபெறும் என்றும் புதிய கணிப்பை வெளியிட்டுள்ளார்.

நான்காவது காலிறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்து வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்ற நிலையில் கங்குலி தெரிவித்திருப்பதாவது:– நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதிக்கு தகுதிபெறும் என்று நான் கணித்த அணிகள் அனைத்தும் தெரிவாகியுள்ளன. தென்னாபிரிக்கா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கெதிரான அரையிறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்காவும், இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதியில் இந்தியாவும் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெறும் என்றும், இறுதியாட்டத்தில் இந்தியா–தென்னாபிரிக்கா மோதும்' என்றார். (ரி)

# அரையிறுதி ஆட்டங்களுக்கான நடுவர்கள் யார்?



நடப்பு உலகக்கிண்ண தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை மற்றும் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இந்த அரையிறுதி ஆட்டங்களுக்கான நடுவர்களை சர்வதேச கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இதன்படி நாளை நடைபெறும் முதலாவது அரையிறுதியில் தென்னாபிரிக்கா மற்றும் நியூஸிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டத்துக்கான நடுவர்களாக இயான் கோல்ட் (இங்கிலாந்து), ராார்ட் டக்கர் (ஆஸ்திரேலியா), செயல்படவுள்ளனர். எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும் இரண்டாவது அரையிறுதியில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டத் துக்கான நடுவர்களாக தர்மசேனா (இலங்கை) கெட்டில் பரோ (இங்கிலாந்து) செயல்படவுள்ள னர். (ரி)

# இந்தியாவை எதிர்கொள்ளத் தயார்



நடப்பு உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன. இந்த நிலையில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்ளும் இந்திய அணி, ஆஸியிடம் சமீபத்தில் பெற்ற தோல்விகளின் அச்சுறுத்தலை நினைவில் கொண்டிருக்கும் என்று ஸ் ரீவோவ் தெரிவித்துள்ளார்.

நடப்பு உலகக்கிண்ண தொடருக்கான ஆஸ்திரேலிய அணியின்பல ஆலோசகர்களில் ஒருவராக இணைந்துள்ள ஸ் ரீவோவ் இந்த அரையிறுதி ஆட்டம் குறித்து கூறியதாவது: ஆஸ்திரேலியாவை எதிர்த்து விளையாடு வது இந்திய அணிக்கு மனரீதியாக கடுமையாக இருக்கும்.

கடந்த 2 மாதங்களாக இந்திய அணியை ஆஸ்திரேலியா சீரான முறையில் வெற்றி பெற்றுள்ளது. இந்தத் தோல்விகளை இந்திய அணி மறந்திருக்க மாட்டார்கள். இது இந்திய அணிக்கு மனரீதியான பாதிப்பை ஏற்படுத்தும்.

இதனைக் கூறும் போதே இன்னொன்றையும் கூறிவிடுகிறேன், இந்திய அணி நல்ல திறனில் இருக்கிறது. நன்றாக விளையாடி வருகின்றது. அந்த அணியின் துடுப்பாட்ட வரிசை எந்த இலக்கையும் விரட்டும் திறன் கொண்டது.

நல்ல தொடர் வெற்றியில் இந்தியஅணி இருந்து வருகிறது. இரு அணிகளுக்குமே அச்சுறுத்தலான ஆட்டம் இது. இரு அணிகளுக்குமே நம்பிக்கை இருக்கும். ஆனால், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தாமல் வெற்றி பெற முடியாது.

ஆஸ்திரேலிய அணியுடனே நேரத்தைச் செலவிடுகின்றேன்.

உண்மையான ஆட்டச் சூழலை பிரதிபலிக்கும் பயிற்சி முறைகளைமேற் கொண்டு வருகிறோம். பெரிய வாய்ப்புக்கு அணி தயாராகவே உள்ளது. இந்தியாவை எதிர் கொள்ள ஆஸி தயார் என்றார். (ரி)


## தினம் ஒரு பரிசுப் போட்டி 35

ஒருநாள் ஆட்டங்களில் இரட்டைச் சதத்தை விளாசிய முதல் நியூசிலாந்து வீரர் யார்?

..........................................................

பெயர் : ..................................................

தே.அ.இல. : ..........................................

முகவரி : ..................................................

..............................................

தொலைபேசி இல.: ..................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (24.03.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

தலா 5,000/= 20 பேருக்கு

## பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

................................

பெயர்: ....................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

## போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்த வர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

## BCAS 5 லட்சம் ரூபாவுக்கான பரிசுக் கூப்பன்

### மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..........................

பெயர்: ....................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

......................

தொலைபேசி

......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2½ லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1½ லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

**லக்கி பான்சி கவுஸ்**
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்**
பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா**
350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கனன் போட்டோ**
165 பிரதான வீதி.பருத்தித்துறை.
**சூரியா பாமசி**
புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்**
85 பருத்தித்துறை, வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்**
3ஆம் சந்தி, கெருடாவில்.
**தர்மலிங்கம்**
கோவில் ஒழுங்கை, உடுப்பிட்டி.
**கலைச்சோலை**
இல 3 நவீன சந்தை, வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்**
ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்**
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்**
பலாலி,வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்**
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்**
பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி.
**ஓம் கணேசா**
இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்**
103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்**
14. விதானையார் வீதி, சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்**
இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே**
செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்**
சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்**
பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்**
சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்**
பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்**
சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை**
பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ**
கே.கே.எஸ் .வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்**
நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்**
ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி**
ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்**
அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை**
வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை**
மல்லாவி.
**கோமதி நெற்கபே**
வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை**
24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்**
ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்**
31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்**
பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்**
தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்பிசிஎஸ்)** பூநகரி.
**டிலசிகா**
124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்**
விசுவமடு.
**வரணா புக்சொப்**
755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்.**
குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை**
பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்**
வரணி.
**விநாயகர் களஞ்சியம்**
அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்**
வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,**
நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்**
காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

**மேடம்:** நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதிர்ப்புகள் அகலும். கடினமான வேலைகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள். கடன் பிரச்சனை தீரும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் தேவை.

**இடபம்:** மனதில் தைரியம் உண்டாகும். எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் ஏற்படும். எதிலும் முன்னேற்றம் காணப்படும். உங்கள் இஷ்டத்திற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும்.

**மிதுனம்:** அதிகமாகச் சிரத்தை எடுத்து மேலிடத்திற்கு விடயங்களைச் சொல்ல வேண்டியதாயிருக்கும். முன்னேற்றத்துக்கு வழி காண்பீர்கள். வீண் முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது.

**கடகம்:** உங்களிடம் ஆலோசனை கேட்டு உங்களை நாடி சிலர் வரக்கூடும். உத்தியோகத்தில் உயர்வு பெற எடுக்கும் முயற்சிகள் நல்ல பலன் தரும். சக ஊழியர்களின் ஆதரவும் கிடைக்கும். மன அமைதி உண்டாகும்.

**சிங்கம்:** நன்மைகள் உண்டாகும். பணவரத்து இருக்கும். மனதில் தைரியம் உண்டாகும். எதிலும் தயக்கமோ, பயமோ ஏற்படாது. தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். வாக்குவன்மையால் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** கடின உழைப்பும் முயற்சிகளில் வெற்றி பெறும் திறனும் அடைவீர்கள். நீண்ட நாள்களாக போட்டிருந்த திட்டம் முழுவதுமாகச் செயற்பட வாய்ப்பு உள்ளது. எதிர்த்து செயற்பட்டவர்கள் ஒதுங்கி விடுவார்கள்.

**துலாம்:** நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். வேண்டியவர்களுடன் மனஸ்தாபம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும்.

**விருச்சிகம்:** உத்தியோக மாற்றம் ஏற்படலாம். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம் கவனம் தேவை. வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கை தேவை.

**தனுசு:** மற்றவர்கள் நலனை அக்கறையுடன் கவனிப்பீர்கள். வீண் அலைச்சல் உண்டாகும். கவனம் தேவை. புத்திக் கூர்மையுடன் செயற்படுவது எதிர்கால முன்னேற்றத்திற்கு உதவும். எந்த ஒரு செயலையும் யோசித்துச் செய்வது நல்லது.

**மகரம்:** இனிமையான பேச்சின் மூலம் எல்லாவற்றையும் நல்ல முறையில் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுடன் வீண் விவாதம் ஏற்படலாம், கவனம் தேவை. செய்தொழிலில் லாபம் அதிகரிக்கும் உடல் ஆரோக்கியம் பெறும்.

**கும்பம்:** எச்சரிக்கையுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். நீங்கள் அவசரமாக எதையும் செய்யக்கூடாது. முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும்.

**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயல் திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாகச் செய்து முடிப்பார்கள். கஷ்டமில்லாத சுக வாழ்க்கை உண்டாகும். உங்களது செயல்களுக்கு குடும்பத்தினரின் ஒத்துழைப்பு இருக்கும்.


## கழிவு நீரில் பியர்

உலக நாடுகளில் தண்ணீரை மறுசுழற்சி செய்து பியர் தயாரிப்புக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டு வருகின்றது. உலகில் குடிதண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டே இவ்வாறான நவீன நடவடிக்கைகளில் இறங்கவுள்ளனர்.


இதன் முதற்கட்டமாக கலிபோர்னியா நகரில் இந்த மறுசுழற்சி முறையினை செயல்படுத்தவுள்ளனர். நகர மக்கள் பயன்படுத்திய தண்ணீரை பல அடுக்காக சுத்தப்படுத்தி, அதனை பிரபலமான பியர் நிறுவனங்களுக்கு வழங்க உள்ளனர்.

இது பியர் ரசிகர்களுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தினாலும், உலக மக்கள் இந்தத் திட்டத்துக்கு வரவேற்பு அளித்துள்ளனர். மறுசுழற்சி செய்யப்பட்ட தண்ணீரில் தயாராகும் பியர்களில், அதன் சுவை குறைபடாமல் இருக்க பல கட்ட ஆய்வுகளை நிகழ்த்தி வருகின்றனர். மறுசுழற்சி என்பது நல்ல விடயம்தான். ஆனால் சாக்கடை தண்ணீரில் 'பியர்' என்பது, கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது.







## இப்படியும் சில மனிதர்கள்

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள ஓர் இடத்தில், மனிதர் ஒருவர் நிர்வாணமாக இருந்து அயலில் உள்ளவர்களை அச்சுறுத்தி வருகின்றார்.

அட்ரியன்னா ஹரிஸ் என்பவரின் வீட்டுக்கு எதிரே உள்ள வீட்டிலேயே இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. இது குறித்து அவர் குறிப்பிடுகையில், நாம் இந்தச் சம்பவத்தினால் பெரும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளோம். கடந்த 10 வருட காலமாக எமது அயல் வீட்டில் உள்ள நபர் இவ்வாறு நிர்வாணமாக நின்று வருகின்றார். இந்த நபர் கிழமை நாள்களி லேயே இந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

நாம் இது தொடர்பாக 2005 ஆம் ஆண்டிலிருந்து 30 தடவைகளுக்கு மேல் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருப்போம். ஆனால் அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இந்த நபரால் எனது மகள் வீட்டை விட்டு வெளியில் வருவதற்கே பயப்படுகின்றார் என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், குறித்த நபர் நிர்வாணமாக நின்றதைத் தவிர, வேறு எவ்வித சட்டவிரோதமான செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை. சட்டத்தின் படி, அவர்களுக்குச் சொந்தமான வீட்டில் யாரும் நிர்வாணமாக இருக்கமுடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனராம். இதனால் அயலவர்களின் சங்கடம் இன்னமும் தீரவில்லை.

## ரிலாக்ஸா வாசியுங்க...

'என்னங்க! இதுவரைக்கும், இரண்டு பேரா இருந்து வந்த நாம, இனிமேல் மூன்று பேரா ஆகப் போறோம்.

**கணவன் :** 'அடி கள்ளி... எங்கிட்ட சொல்லவே இல்லையே.... எத்தனை மாசம் ?'

**மனைவி :** 'அதில்லைங்க. எங்கம்மாவும் நம்ம கூடவே வந்து தங்கப் போறாங்க'

**காதலன்:** எனக்கு முதல் எதிரி, உங்க அப்பாதான்...!

**காதலி:** அப்பாதான் நம்ம கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாங்களே...!

**காதலன்:** அதனால்தான் சொன்னேன்...!



## ஆச்சிக்கு விருது!



ஆயிரம் திரைப்படங்களுக்கு மேல் நடித்து சாதனை படைத்த ஆச்சி மனோரமாவுக்கு 2015 ஆம் ஆண்டிற்கான சக்தி விருதுகளை வழங்கி கௌரவப்படுத்தியுள்ளது புதிய தலைமுறைத் தொலைக்காட்சி. பெண்களைக் கௌரவப்படுத்தும் நோக்குடன், புதிய தலைமுறை தொலைக்காட்சியினால் விருது வழங்கல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் சாதனை, புலமை, துணிவு, தலைமை, கருணை, திறமை ஆகிய பொருளில் சக்தி விருதுகள் வழங்கப்பட்டன. இதற்காக நியமிக்கப்பட்ட நடுவர்களின் துணையோடு சாதனைப் பெண்கள் தேர்வு செய்யப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர்.

உடல்நலம் குறித்து பல வதந்திகள் கிளம்பினாலும் உற்சாக பெண்மணியாய் காட்சியளித்தார் ஆச்சி மனோரமா. அத்துடன் விருதையும் மகிழ்ச்சியுடன் வாங்கிச் சென்றார்.

# இலங்கை மீதான பிரேரணை தொடர்பில் ஐ.நாவில் அழுத்தம் தர ஒரு நாடு அமெரிக்கா மட்டுமே

## நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க சபையில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

"ஐ.நாவில் சீனா, ரஷ்யா முதலான நாடுகள் இருந்தாலும் அழுத்தம் கொடுக்கக்கூடிய ஒரேயொரு நாடு அமெரிக்காதான். இதற்கு அந்த நாட்டு ஜனாதிபதி பேசத் தேவையில்லை. வெளி விவகார அமைச்சர் ஜோன் கெரியின் ஒரு 'கோல்' (தொலை பேசி அழைப்பே) போதும். ஜெனிவாவில் இதை நான் நேரில் கண்டேன்."

– இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் அமைச்சரும், மனித உரிமை விவகாரங்களுக்கான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட தூதரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த சமரசிங்க சபையில் தெரிவித்தார்.

செப்ரெம்பர் மாதம் வரை ஐ.நா. அறிக்கை பிற்போடப்பட்டிருக்காவிட்டால் சர்வதேச ரீதியில் இலங்கை பெரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, செப்ரெம்பர் மாத கூட்டத்தொடருக்கு முன்னதாக இலங்கை அரசு சர்வதேசத்துக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய பெரிய நடவடிக்கையை முன்னெடுத்திருக்க வேண்டும் என்றும் தெரி வித்தார்.

அத்துடன், சர்வதேச விவகாரங்களைக் கையாளுவதில் தமது அரசின் இயலாமையை ஒப்புக் கொண்ட அவர், எதிர் வரும் செப்ரெம்பர் மாத கூட்டத் தொடரில் தமது அரசே பங்கேற்கும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் புதன்கிழமை இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தின் ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"மார்ச் மாத கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவிருந்த இலங்கை தொடர்பான ஐ.நா. அறிக்கையை செப்ரெம்பர் மாதம் வரை பிற்போடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதை நாம் பாராட்ட வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு இந்தியாவிலும், பிரிட்டனிலும் பெரும் வர வேற்புக் கிடைத்தது. பிரிட்டிஷ் மகாராணி 30 நிமிடம் வரை ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியிருந்தார். அந்தநாட்டின் பிரதமர், ஜனாதிபதி மைத் திரியை வெளியே வந்து வரவேற்றார். இவற்றை நாம் பார்த்தோம். இது எமக்குப் பெருமையாக உள்ளது. உள்ளக விசாரணைக்கு நாம் ஐ.நாவிடம் கால அவகாசம் கோரினோம். பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால், உங்களால் அது முடிந்துள்ளது.

மார்ச் மாதத்தில் ஐ.நாவின் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தால் இலங்கை பெரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டிருக்கும். இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பெரிய பிரேரணைகளைக் கொண்டுவர இருந் தனர்.

ஐ.நா. என்பது மனித உரிமைகள் விவகாரத்தைக் கையாளும் இடம் மட்டுமல்ல, அரசியல் தீர்மானங்களும் எடுக்கும் இடமாகும். அங்கு அரசியல் அழுத்தங்களின் அடிப்படையிலேயே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

2009ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை நாம் வென்றெடுத்தோம். ஆனால், அதன் பயனைப் பெற்றுக் கொள்ள எம்மால் முடியாமல் போனது. அதனால்தான் 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் எமக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நாட்டின் ஆட்சி மற்றும் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியாமல் போனது.

சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் எம்முடன் இருந்தாலும் அவற்றால் எமக்கு ஒரு வாக்கைக்கூடப் பெற்றுக் கொடுக்க முடிய வில்லை. ஐ.நாவில் அழுத்தம் கொடுக்கக்கூடிய ஒரே நாடு அமெரிக்காதான். இதற்கு அந்நாட்டு ஜனாதிபதி பேசத் தேவையில்லை. வெளி விவகார அமைச்சர் ஜோன் கெரியாலேயே அந்த அழுத்தத்தைக் கொடுக்கமுடியும். இதனை நான் ஜெனிவாவில் நேரில் கண்டேன். அப்படியான நிகழ்வு 2012 ஆம் ஆண்டு நடந்தது.

போரை முடிவுக்குக்கொண்டு வர இந்தியா, அமெரிக்கா, சீனா, ரஷ்யா முதலான நாடுகள் எமக்கு உதவி புரிந்தன. இதனை மறக்காது அந்தநாடுகளையும் இணைத்துக் கொண்டு செயற்பட்டால்தான் சாதக மான பிரதிபலன்களை நாம் பெற முடியும்.

செப்ரெம்பர் மாதத்துக்குள் நாம் பெரிய வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும். செப்ரெம்பர் மாத ஐ.நா. கூட்டத்தொடரில் பங்கேற்பது நீங்களா? நாங்களா? நாங்கள்தான் போக வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். செப்ரெம்பர் மாதத்துக்குள் முக்கிய நடவடிக்கைகளைச் செய்து முடிக்க வேண்டும். அவற்றைச் செய்தே ஆகவேண்டும். எவராவது தவறு இழைத்திருந்தால் அவர்களைத் தண்டிப்பதற்கும் உண்மையைக் கண்டறிவதற்கும் எமக்குப் பொறுப்புள்ளது. அது நாட்டின் நடப்புக்கு மிக முக்கியமாகும். நல்லிணக்கத்தை ஏற்படுத்தி சர்வதேசத்தின் நம்பிக்கையை வெல்ல வேண்டும்" – என்றார். (வ)

## யாழ்.பல்கலைக்கழக கலைவாரம் ஆரம்பம்



யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் இந்த வருடக் கலைவார நிகழ் வுகள் யாழ். ல்கலைக்கழக வளாகத்தில் தமிழர் பாரம்பரிய வாத்தியங்கள் முழங்க சிலம் பாட்டம் ஒயிலாட்டம் போன்றவற்றுடன் வெள்ளிக்கிழமை கோலாகலமாக ஆரம்ப மாகியது.

கலைப்பீட மாணவர் ஒன்றி யத்தின் ஏற்பாட்டில் ஆரம் பிக்கப்பட்ட இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீட பீடாதிபதி பேரா சிரியர் வி.பி.சிவநாதன் கலைப் பீட மாணவர் ஒன்றிய பெரும் பொருளாளர் கலாநிதி கே.கஜ விந்தன் மற்றும் உடற்கல்வி அலகு பணிப்பாளர் கே.கணேசநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான கலைவார நிகழ்வுகளில் முதல் நிகழ்வாக விரிவுரையாளர்களுக்கும் இறுதிவருட மாணவர்களுக் குமான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியும் இடம்பெற்றது. நிகழ்வில் கலைப்பீட பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு இரண்டு வாரங்களுக்குத் தொடரும் என்று ஒன்றியம் தெரிவித்துள்ளது. (வ–4)

## பேஸ்புக் மோசடிகள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்

### அமைச் சர் பீலிக்ஸ் பெரேரா சபையில் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 23

'பேஸ்புக்' ஊடாக இடம்பெற்று வருகின்ற மோசடிகள், குற்றச் செயல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக் குமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தார் முன்னாள் சமூக சேவைகள் அமைச் சரான பீலிக்ஸ் பெரேரா.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க் கிழமை நடை பெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச்சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத் தின் கீழ் கட்டளை மீதான விவாதத்தில் உரை யாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

"உலக சனத்தொகை 700 கோடியாக இருக்கின்ற நிலையில் அதில் 100 கோடியானோர் பேஸ்புக் பாவனையாளர்களாக இருக்கின்றனர். இன்று நாளாந்தம் பேஸ்புக்கில் பல மோசடிகள் இடம்பெறுகின்றன. குற்றச்செயல்கள் அதிகரிக்கின்றன. பழகிய விடயங்களைக் காட்டி மிரட்டல் விடுக்கப்படுகிறது. இதனால் உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்களும்கூட இடம் பெறுகின்றன. முன்பெல்லாம் பாடசாலைப் பருவத்தில் முரண்பாடு ஏற்படுமாயின் சண்டை பிடித்து அடித்துக் கொள் வோம். ஆனால், தற் போது (பேஸ்புக் ஹெட்டேக்) முகநூலில்தாக்குதல் இடம்பெறுகின்றது.

எனவே, முக நூலில் (பேஸ்புக்) இல் இடம் பெறும் மோசடிகள், குற்றச் செயல்கள் தொடர்பிலும் அவ தானம் செலுத்துமாறு நீதி அமைச்சரிடம் கேட்டுக்கொள்கிறேன். உரிய நடவடிக்கை இல்லையேல் அது சமூகசீரழிவுக்கு வித்திடும்" – என்றார். (வ)

## ச.ச.நிலைய செயற்பாடுகள் குறித்த விவரங்கள் திரட்டல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடமாகாணத்தில் இயங்கும் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பான விவரங்கள் வினாக்கொத்து ஒன்றின் மூலம் சகல பிரதேச சபைகள் மட்டத்திலும் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

2014 ஆம் ஆண்டை அடிப்ப டையாக வைத்து இந்த விவரங்கள் சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களின் முழுவிவரங்களும் தற்போது சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரால் சேகரிக்கப்பட்டு வருகின் றன. பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக் கைக்கு அமைவாக வட மாகாண சனசமூக நிலையங்களை பிரமாண அடிப்படை.யில் மதிப்பிடுதல் 2015 என்னும் தலைப்பின்கீழ் வினாக் கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டு சகல சனசமூக நிலையங்களுக்கும் அவை அனுப்பப்பட்டு அதன் தரவுகள் தற்போது மேற்படி பிரதேச சபையினரால் சேகரிக் கப்பட்டு வருகின்றன.

சனசமூகநிலை்யம் தொடர்பான தரவுகள், வருடாந்தப் பொதுக் கூட்டம் 2014 தொடர்பான விவரங்கள், நிர்வாக சபை தொடர்பான தெரிவுகள், அது தொடர்பான விவரங்கள், சங்கத்தின் நிதி நிலைமைகள், வருடாந்தக் கணக்கு அறிக்கைகள், சொத்துக்கள் விவரங்கள், சங்கத்தின் சொத்துக்கள், காணி, கட்டடம், தள பாடங்கள் போன்ற விவரங்களும் சங்கங்களின் கடந்த ஆண்டு சார்பான அபிவிருத்திச் செயற்பாடுகள், நூலகப் பகுதிகள், சங்கங்களால் மேற் கொள்ளப்பட்ட ஒப்பந்த வேலைகள், தொடர்பான விவரங்கள் மக்கள் பங்களிப்புடனான செயற்றிட்டங்கள் தொடர்பான முழுவிவரங்கள், முன்பள்ளிகள் போன்றவற்றின் செயற்பாடுகள், விளையாட்டுக் கழகங்களின் செயற்பாடுகள், கலை, கலாசாரச் செயற்பாடுகள் விழாக்கள் போன்ற பல விவரங்கள் அவ் வினாக்கொத்தில் கோரப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தி யோகத்தரால் ஆவணங்கள் ரீதியாக பரிசோதிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு உறுதிப் படுத்தப்பட்டு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் மேற்கொள்வார் என்றும் கூறப் பட்டது. (வ–122)


**தேவை**

"கணக்காளர் நிறுவனம்" ஒன்றுக்கு கணக்காளர், பயிலுநர்கள் தேவை. பட்டதாரிகள், AL வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு : 021 222 2478
077 314 5345

**வான் விற்பனைக்கு**

NISSAN VANEHE
5 DOOR 54 - XXX
நல்ல நிலையில் உள்ளது.
தொடர்பு இலக்கம்:
077 068 7972

**தேவை**

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள திருமண மண்டபத்துக்கு வேலையாள்கள் தேவை.
01. முகாமையாளர்
02. தொழில்நுட்ப உதவியாளர்
03. உபசரிப்பாளர்கள் (58026) (45.3.7)
தொடர்பு: 021 222 8875/ 077 932 6147

**TO LET**

A two storeyed building in a prime location along somasundaram Avenue, Chundikuly, Jaffna available for letting. Organisations preferred. Suitable for residential cum official occupations.

Contact T.P. 077 476 7119
(58050)(3.7.8)

**காணி உடன் வீடு விற்பனைக்கு**

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோயிலடி, மண்குணியன் வளவு, சுருட்டுக் கொட்டிலடியில் மூன்றுபரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 021 222 7213

**தேவை**

நல்லூர், கந்தர்மடம், பிறவுண் வீதியினை அண்மித்த பிரதேசத்தில் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.
வீடும் காணியும் அல்லது காணி விற்பனைக்கு குறித்த பிரதேசத்தில் இருப்பினும் தொடர்புகொள்ளவும்.
075 210 2485
(58047) (45.3.7)

**ஸ்ரீ பருத்தியான் திருமண சேவை**

மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு மூல நட்சத்திரம் 7இல் சூரியசெவ்வாய் கிரக பாவம் 32 உள்ள மணமகளுக்கு அரச உத்தியோகம் உள்ள மணமகனை எதிர்பாக்கின்றோம்.
தொடர்பு : 077 321 8675
Paruththiyan40@gmail.com
பதிவு இலவசம்

**கும்பாபிஷேகம் பிற்போடல்**

25.03.2015 புதன்கிழமை நடைபெறவிருந்த தாவளை இயற்றாலை ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் மதுரை வீரன் ஆலய கும்பாபிஷேகம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம். கும்பாபிஷேகம் நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

தலைவர்: பா.செல்லத்துரை (ஆலய பூசகர்)
(சி.17181)(45.3.7)

**யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி, பழைய மாணவர் சங்கம் 100 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்**

தலைவர் : க. கணேசமூர்த்தி
இடம் : கல்லூரி பேச்ஸ் மண்டபம்
காலம் : 26.04.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 04 மணி

சகல பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்களும் பிரேரணைகளும் 06.04.2015 ஆம் திகதிக்கு முன்பதாக செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இணுவில் வீதி,
மானிப்பாய்.

அ. ஜெபநேசன்
செயலாளர்

குறிப்பு: பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு விழா எதிர்வரும் ஜூலை 2015 கொண்டாட இருப்பதால் பழைய மாணவர்களிடமிருந்தும் ஆக்கங்களும் ஒத்துழைப்பும் கோரப்படுகின்றன.

விழா ஏற்பாட்டுக்குழு

# ஆறாத்துயருடன் ஆறு மாதங்கள்



அமரர் தயாபரன்
**சிவதர்ஷன்**
(உரிமையாளர் -சிவதயா பிறிண்டேர்ஸ்)

தோற்றம் 27.09.1990 — மறைவு 23.09.2014

காலத்துயர் கலந்து கண்ணீரில் குளித்தபடி நாட்களைத் தொலைக்கின்றோம் - நாதியற்றும் தவிக்கின்றோம். இதயமற்ற அரக்கர்கள் "இனியன்" உன்னை அழித்திட்டார் இனியுமவன் பிறப்பாரோ ? இதை அவர்க்குத் தீர்ப்பளிப்பார். வாழும் வயதினிலே வாகோசி நீறுமவனே! வாழ்நாள் முழுவதும் வரமாறாய் நீ உயிர்ப்பாய் காலம் வென்று வரும் காலியனே நீ துயில்க!...... நாமும் உன் நினைவில் நாமிருப்போம் இறைவாக்க.

குடும்பத்தினர்.
தயாவெளியீடு, வெற்றி இலக்கு
077 396 5214
தயா அச்சகம்,
575, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

# நெஞ்சில் துயருடன் பகிரும் நினைவு அஞ்சலி

7 ஆம் ஆண்டு — 13 ஆம் ஆண்டு





உலகத்தில் 05.08.1924 — விண்ணகத்தில் 23.03.2008

உலகத்தில் 05.06.1927 — விண்ணகத்தில் 15.04.2002

அமரர் அருட்திரு D.R அம்பலவாணர் (ஓய்வுபெற்ற தென்னிந்திய திருச்சபை ஊழியர்)

திருமதி E.R அம்பலவாணர் (ஓய்வுபெற்ற ஆசிரியை)

" நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்,
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் வாழ்வான் "

மகன் - நிமால் அம்பலவாணர்
[தென்னிந்திய திருச்சபை - புங்குடுதீவு]
பேரன் - ஹரன் ராஜநிமலன்
[மாணவன் - பரியோவான் கல்லூரி]

# ஓராண்டு நினைவலைகள்

அமரர்
**கணபதிப்பிள்ளை செல்வராசா**
(ஐயனார் கோயிலடி மல்லாகம்)



தோற்றம் 14.08.1938


மறைவு 23.03.2014

சென்ற ஆண்டு இதே திங்களில் இதே திகதியில்
எங்கள் அதிகாலை கிழக்கு அமாவாசையானது
மணிவிளக்கு ஒளியிழக்க இருள் கவிந்தது
அப்பா, தாத்தா என்றும் என்றென்றும்
நிலைத்திருக்கும் உங்கள் நினைவுகள்
பலித்திடும் உங்கள் கனவுகள்

ஐயனார் கோயிலடி,
மல்லாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன்னம்பலம் சிவமணி**
(மணி - அரசு வாட்டன்)
வேலணை மேற்கு
6 ஆம் வட்டாரம்

தோற்றம் 05.03.1959

மறைவு 26.03.2012

திதி :பூர்வ பக்ஷ சதுர்த்தி

நீங்கள் எங்களை விட்டு மறைந்து மூன்று ஆண்டுகள் ஆனதுவோ மூன்று நிமிடங்கள் போல் இருக்கின்றது. என் மேல் பாச மழை பொழிந்த என் அன்பு அப்பாவின் அன்பு முகத்தைப் பார்க்க பேச ஆசையாக இருக்கின்றது என்று உங்கள் மகள் அழுதழுது துடிக்கின்றாள். அவளை எப்படித் தேற்றுவேன். குல விளக்காய் எல்லோருக்கும் ஒளி தந்து இன்று எங்களை அனாதரவாக விட்டு எங்கு சென்றீர்கள். எங்கள் உலகமே நீங்கள் தான் என்று எண்ணியிருந்தோம். இன்று நீங்கள் இல்லாத இந்த உலகம் எங்களுக்கு நரகமாகிவிட்டதையா?

சீக்கிரமாக நாங்கள் உங்களிடம் வந்து சேரவேண்டும் எனக் கண்ணீரோடு காத்திருக்கின்றோம். அதன் பின்பு உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென சிவமணிப் பிள்ளையாரிடம் பிரார்த்திக்கின்றோம்.

6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிகழகத்தின் உறுப்பினரும், மாவட்டச் செயலக புலன்விசாரணைப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் மகேந்திரன் செல்வகாந் அவர்களின் தந்தையாரான


அமரர் **பழனித்துரை மகேந்திரன்**

அவர்கள் 20.03.2015 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு, எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(51686)(4.3.7) யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிகழகம்.

# நினைவஞ்சலி

2ஆம் ஆண்டு — ஓம் — 39ஆம் ஆண்டு
பாலையடிப் பிள்ளையார் துணை



அன்னை மடியில்:. 05.08.1926
ஆண்டவன் அடியில்:. 23.02.2013

அன்னை மடியில்:. 08.12.1936
ஆண்டவன் அடியில்:. 30.11.1976

**அமரர். உயர்திரு. சின்னர் சிதம்பரப்பிள்ளை.**
(ஓய் பெற்ற, முள்ளைநாள் கரைச்சி வடக்கு பல. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் பொறிக்கடமைக் கிளை முகாமையாளரும், முள்ளைநாள் கரைச்சி கிச (பெரிய பரந்தன்) உறுப்பினரும் (V.C - Member)

**அமரர். திருமதி. பொன்னம்மா சிதம்பரப்பிள்ளை.**

எங்கள் குடும்பத்தின், கிராமத்தின் ஒளிவிளக்குகளாய் திகழ்ந்து, அன்போடும், பண்போடும் பேணிப் பாதுகாத்து, எமை நல்வழி நடத்தி, உயர் கல்வி புகட்டி, வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த அன்புத் தெய்வங்களே...

நீவிர் செய்த பொதுப்பணியும், கோவில் திருப்பணியும் தமிழ்ப் பணியும் தொடருமைய! இது உறுதியப்பா!!
ஓம் சாந்தி ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

பின் குறிப்பு: இவர்களின் நினைவாக பரந்தன் - பூநகரி வீதியில், கிளி/பரந்தன் அ.த.க. பாடசாலைக்கு (குஞ்சுப்பரந்தன்) முன்பாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து தரிப்பு நிலையம், 23.03.2015 அன்று காலை 10 அளவில் பாலையடிப் பிள்ளையாரின் அருளாசியோடு, மேற்படி பாடசாலையில் நினைவஞ்சலிப் பிரார்த்தனையுடன் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் அயலவர்கள், ஆர்வலர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம். குடும்பத்தினர். பெரிய பரந்தன், பரந்தன்
தகவல்: Dr. சிவதர்சினி சாயிராம் (பேர்த்தி) 0772 619571

# ஈரவிழிகளின் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**கமலசேகரம் சதீஸ்சேகர் (சதீஸ்)**

அன்னை மடியில்
06*03*1973

ஆண்டவன் அடியில்
23*03*2013

கடந்த 23.03.2013 கனடாவில் அகால மரணமடைந்த எங்கள் அன்புச் செல்வத்தை ஆழ்ந்த மனத்துயருடன் 2 ஆவது ஆண்டாக நினைவு கூருகின்றோம்.

என் மகனே நீ பிறந்தாய்! அன்பு கொண்டு நிறைந்தேன் நான்
வளர்பிறை போல் வளர்ந்தாய்! ஆல் போல் வாழ்வாய் என நான் இருந்தேன் .
ஆனால் அடியற்ற மரமாய் நீ வீழ்ந்தாயோ?
உன்னை என்னைப் பிரித்த விதி எதுவோ?
சதி செய்து உன்னை முடித்த பகை எதுவோ?
நூல் விட்ட பட்டமாய் அசைகின்றேன் உன் நினைவால்
அந்நிய தேசம் சென்றாய்- அன்று
இருபது ஆண்டுகள் உன்னைப் பிரிந்தேன் நான்
நாளை வருகிறேன் என்றாய் கண் குளிரக் காத்திருந்தேன்
காற்றில் வந்தது ஓர் செய்தி
நீ நம்பிய உறவுகள் உன் பிரிவைச் சொல்லவில்லை
நாம் பிறந்த மண்ணே உன் பிரிவைச் சொன்னது
பெற்றவர் உடன் பிறப்புக்கள்- நாம் கதி கலங்கித் தேம்பி அழ- இன்று
ஈராண்டுகள் ஓடியதோ என்மகனே! மீண்டும் ஒரு பிறப்பு வேண்டுமையா!
உன்னை மடி தூக்கி நான் சுமக்க

155 ஆம் கட்டை,
ஏ9 வீதி, கிளிநொச்சி.

மறக்க முடியாத நினைவுகளுடன்
பெற்றோர்,
சகோதரர்கள்.

## மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் வெளியீடு

கொழும்பு, மார்ச் 23
மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் தேசிய அறிக்கை 2014 வெளியீடு இன்று திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்பு 7, ரேஸ்கோஸில் அமைந்துள்ள விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் காலை 8.30 முதல் ந.ப 12.30 வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முக்கிய விருந்தினர்களாக கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டிசில்வா, ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட வதிவிடப் பிரதிநிதி சுபினை நந்தி, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சித்திராங்கனி வாகிஸ்வர, இலங்கை கொள்கை கற்[...]ள் நிறுவன சிரேஷ்ட வருகை நிபுணர் விமல் நாணயக்கார ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் குழு நிலைக் கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது. (வ-10)

## கும்பாபிஷேகம்

தென்மராட்சி, மார்ச் 23
எழுதுமட்டுவாழ் தெற்கு ஒட்டுவெளி கிராவில் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.14 மணிக்கு இடம்பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

அடியவர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நா[...] காலை 8 மணி தொ[...]கம் மாலை 5 மணி வரை இடம்பெறும். கும்பாபிஷேகக்கிரியைகள் சிவஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (வ-9)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், மார்ச் 23
வண்.வடமேற்கு பிரப்பம்பதி திருத்தலத்தில் ஸ்தல விருட்சத்தில் எழுந்தருளி இருக்கின்ற செல்வ விநாயகப் பெருமான் தான்தோன்றி ஞான வைரவப் பெருமான் ஆலய பாலஸ்தான கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை [...]30 மணிக்கு நடை[...]பெறவுள்ளது. (வ)

## பெருந் திருவிழா

சுழிபுரம், மார்ச் 23
பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோயில் வருடாந்த பெருந்திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெற்று தேர், தீர்த்தத்துடன் நிறைவு பெறும். தினமும் நண்பகல் அன்னதானம் நடைபெறும். பிரதமகுருவாக பிரம்மஸ்ரீ சி.வ.இராஜேஸ்வரக் குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார். (வ-28)

## ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்து

தென்மராட்சி,மார்ச் 23

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அலையும் கட்டாக்காலி ஆடு,மாடுகளை அவற்றின் உரிமையாளர்களைக் கட்டி வளர்க்குமாறு சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகள் பொது மக்களுக்கும் வாகனங்களுக்கும் இடையூறு விளைவிப்பதாக முறைப்பாடுகள் கிடைப்பதை அடுத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் கட்டாக் காலியாக அலையும் கால்நடைகள் நகரசபை ஊழியர்களால் பிடிக் கப்பட்டால் தண்டப்பணம், பராமரிப்புக் கட்டணம், பிடிகூலி போன்றவை செலுத்த வேண் டிய நிலை கால்நடை வளர்ப் போருக்கு ஏற்படும் என்றும் இது தொடர்பான தீர்மானம் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (வ-9)

## பயிற்சி நெறிகளில் இணையலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் மாபிள் பதித்தல் செய்முறை, மோட்டார் சைக்கிள் திருத்தும் செய்முறை, அழகுக் கலைப் பயிற்சி, தன்னியக்க இயந்திர திருத்துநர் போன்ற நெறிகளை செயலாக்க வுள்ளது.

இதன்படி மாபிள் பதித்தல் செயன்முறை லங்கா ரைல்ஸ் நிறுவனத்தால் நடத்தப் படவுள்ளது. இந்த செயன்முறை முல்லைத் தீவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்புப வர்கள் தொழிற் பயிற்சி அதிகார சபையுடன் தொடர்பு கொள்ளு மாறு உதவிப் பணிப்பாளர் இரா.அகிலன் கேட்டுக்கொண்டுள்ளார். (வ-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

கரவெட்டி பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையான பிரதேச மட்டப் போட்டிகளை நடத்துவது தொடர்பான கலந்துரையா ட நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு நடை பெறவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு கழகத் தலைவர்கள், செயலாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ தெரிவித் துள்ளார். (வ-10)

## இளைஞர் கழக தெளிவூட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 23

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட சம்மேள னத்தால் '2015ஆம் ஆண்டு இளைஞர் கழகத் தெளிவூட்டல்' தொடர்பான நிகழ்வு நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடத்தப் படவுள்ளது.

யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் உள்ள மாவட்டக் காரியாலயத்தில் இந்நிகழ்வு இடம்பெறும் என்று மாவட்ட சம்மேளன செயலாளர் தெரி வித்துள்ளார். (வ-10)

## பொங்கல் வேள்வி

சுழிபுரம், மார்ச் 23

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் வேள்வி நாளை செவ்வாய்க் கிழமை காலை முதல் நடை பெற்று மறுநாள் புதன்கிழமை அதிகாலை மடை மாற்று வழிபாடு நடைபெறும். எட்டாம்நாள் வேள்வி எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய் நடை பெறும். (வ-28)

## திருமலை ஆதிகோண நாயகர் ஆலய கும்பாபிஷேகம்

மூதூர், மார்ச் 23

தெட்சண கைலாசம் என்று சிறப்புப் பெற்ற திருகோண மலை, தம்பலகாமம் ஸ்ரீ ஹம்ஸஹ மனாம்பிகை எனும் மாதுமை அம்பாள் சமேத ஸ்ரீ ஆதிகோண நாயகர் ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்சவிம்ஸத் குண்ட பஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.23 நிமிடம் முதல் முற்பகல் 11.8 நிமிடம் வரையுள்ள இடப லக்ன சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடை பெறவுள்ளது.

குளக்கோட்டு மன்னரால் நிறுவப்பபட்ட ஸ்ரீ ஹம்ஸஹமனா எனும் மாதுமை அம்பிகை உடனுறை ஸ்ரீ ஆதி கோணநாயக சுவாமிக்கும் ஸ்ரீவிநாயகர், முருகப்பெருமான், கதிர்காம சுவாமி, உற்சவ ஆதிகோணேசர், சூரியன், சந்திரன், சமயகுரவர்கள், நாகதம்பிரான், நவக்கிரகங்கள், பைரவர் உட்பட பரிவார மூர்த்திகளுக்கு இன்றும் நாளையும் எண்ணெய்க்காப்பு முற்பகல் 10 மணிமுதல் மாலை 3 மணிவரை இடம் பெறும். (வ-40)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 23

புங்குடு தீவு இராஜேஸ்வரி தமிழ்க் கலவன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அதிபர் க.சிறிதரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற வுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தின ராக தீவக வலயக்கல்வி பணிப்பாளர் தி.ஜோண் குயின் ரஸ் கலந்துகொள்வார். (வ)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

முருகேசு சத்தியசீலன்



(SLPS-1)

எமது பாடசாலை அதிபர் மு.சத்தியசீலன் அவர்கள் கொழும்பு றோயல் கல்லூரியில் 10.03.2015 அன்று நடைபெற்ற அதிபர்களுக்கான பதவிஉயர்வு வழங்கும் நிகழ்வில் இலங்கை அதிபர் சேவை தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பட்டங்கள் பதவிகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: ஆசிரியர்கள், மாணவர்கள்

யா/சரவணை நாகேஸ்வரி ம.வி.

(56686)(4.3.7)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



ந. கலைநாதன்

(B.A, Dip.in.Edu. SP.Tr.Sc&Maths,S.L.P.S 1)

எமது பாடசாலையின் முதல்வர் நல்லையா கலைநாதன் அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு பேருவகை அடைகின்றோம். அதிகஷ்ட பிரதேசத்தில் இயங்கிவரும் எமது பாடசாலையின் உயர்விற்காக பதினைந்து வருடங்களாக அதிபராகப் பணியாற்றும் இவரது சேவை மேலும் உயர உளமார வாழ்த்துகிறோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்.

யா/ புங்குடுதீவு

ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயம்

(57993)(3.7.8)



அகவை எழுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

ஏழாலை வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் நீண்ட காலம் சமயத் தொண்டாற்றிய சிவத்திரு

வ.குமாரசுவாமி ஐயா

அவர்களை அகவை 70 இனைக் காணும் இந்நாளில் பல்லாண்டு காலம் வாழ்கவென தேவஸ்தானத்தின் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ஏழாலை வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்



வாரியார் வாரிசு அருள்ஞான வித்தகர் சிவானந்தவாரிதி சிவத்திரு வ.குமாரசாமி ஐயா அவர்களை அகவை 70 இல் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



மானிட வாழ்வில் மகத்தான பணியை மானசீகமாய் எமக்குணர்த்தி தாயாய், தந்தையாய், நல்லாசானாய் நல்லறிவு பல தந்து தீமை செய்பவர்களுக்கு கூட நன்மையே செய்யவும் ஏழ்மையிலும் நேர்மையாய் இருக்கவும் வறுமையிலும் பரோபகாரம் செய்யவும் அன்பே சிவம் என எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தவும் இறை இன்பமே பேரின்பமென இறை இன்பத்தோடு எம் வாழ்வு தொடரவும் எமக்கு நல்வழி காட்டி எம் வாழ்வை மலரச் செய்து இன்று (23.03.2015) திங்கட்கிழமை அகவை 70 இல் காலடிபதிக்கும் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கு சிவத்திரு வ.குமாரசாமிஐயா அவர்களை இன்னும் பல ஆண்டுகள் எம்மோடு உடல், உள சுகத்துடனும் மகிழ்வுடனும் வாழ்ந்து எமக்கும் சைவ உலகத்துக்கும் ஆறுதல் தரவேண்டுமென எல்லாம்வல்ல பரம்பொருளாம் குருநாதனையும் செல்வச்சந்நிதி வேலனையும் களபாவோடை ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாளையும் அகமுருகிப் பிரார்த்தித்து அவர் தாள் பணிந்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

"அருள்பவனம்," சூராவத்தை, சுன்னாகம். (58022) (4.3.8)

சகோதரன், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

உயர்திரு காசிநாதர் குணசிங்கம்

(S.L.P.S.I)



10.03.2015 இல் கொழும்பு ராஜகீய வித்தியாலயத்தில் இடம்பெற்ற பதவி உயர்வு வழங்கும் வைபவத்தில் 15.11.2010 ஆம் திகதி தொடக்கம் தரம் I அதிபர் சேவை நியமனத்தைப் பெற்ற எமது வித்தியாலய முன்னை நாள் அதிபர் கா. குணசிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்



பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி செல்வராணி செல்லையா (Hinduism. Trd, BA, Dip in Ed, SLPS-1)



எமது பாடசாலையில் 21.04.1997 தொடக்கம் இன்றுவரை அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அதிபர் அவர்கள், 10.03.2015 இல் கொழும்பு இராஜகிரிய வித்தியாலயத்தில் இடம் பெற்ற பதவியுயர்வு வழங்கும் நிகழ்வில் 02.07.2008 தொடக்கம் தரம் 01 அதிபர் சேவை நியமனத்தைப் பெற்றமைக்காக அதிபர் திருமதி செல்வராணி செல்லையா அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,

யா/ சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க. பாடசாலை.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் முன்னைநாள்

அதிபர் க.திருக்குமரன்

(B.A, Sptr. primary, PGDE, Dip. in.Sc.mag, SLPS-I)

அவர்கள் 2011.03.25 முதல் இலங்கை அதிபர் சேவை வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்த்தப்பட்டமையை முன்னிட்டு அவரை வாழ்த்துகின்றோம்.

கல்வியுலகில் கலங்கரை விளக்கமென நல்ல பல பணிசெய்து நல்லாசிரியனாய் சொல்லில் வல்லவனாய் தூய நற்சேவை செய்து வல்லமை மிக்க வளம் மிகுந்த அதிபராகி இன்று அதிபர் சேவையின் அதியுயர்தரம் அடைந்து முல்லைக்குப் பெயர் கொடுத்த முத்தான திருக்குமரன் எதிலும் சிறந்து இன்னும் உயர்நிலையடைய மனதார வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆசிரியர் நலன்புரிசங்கம்.

மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் முல்லைத்தீவு

(58025)(4.3.7)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

கணபதிப்பிள்ளை உதயகுமாரன்

(SLPS-1) J.P



சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் எமது நண்பன் கணபதிப்பிள்ளை உதயகுமாரன் அவர்கள் 10.03.2015 அன்று கொழும்பு இராஜகிரிய வித்தியாலயத் தில் இடம்பெற்ற அதிபர் சேவை பதவிஉயர்வு வழங்கும் வைபவத்தில் 2010.11.14 தொடக்கம் தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றமைக்காக அவர்களை உளமார வாழ்த்து வதுடன், அவர் மென்மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/அளிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயத்தின் அதிபர் குலசேகரம்பிள்ளை ஜெகதீஸ்வரன் (SLPS-1)

அவர்கள் கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்களுக்கான பதவிஉயர்வு வழங்கும் வைபவத்தில் அதிபர்சேவை தரம் 1 இற்கு பதவிஉயர்வுபெற்றதையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம்

மு/அளிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயம் யோகபுரம். (56237)(4.3.6)

## சிரமதானத்தில் பொலிஸார்

51 ஆவது பொலிஸ் தினத்தை யொட்டி பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸார் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டார்கள். பருத்தித்துறை பொலிஸார் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையிலும், நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் கரவெட்டிப் பிரதேச அரச மருத்துவமனையிலும சிரமதானப் பணிகளை மேற் கொண்டனர். இதன் போது மருத்துவம னயில் உள்ள பற்றைகள், புல்,பூண்டுகள் மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டன. இப்பணிக்கு குறித்த மருத்துவமனைகளைச் சேர்ந்த சுகாதார ஊழியர்களும் போதிய ஒத்துழைப்பை வழங்கினர். (வ-173)

## கூறுவிலை கோரல்

வடக்கு மாகாண சபையின் கௌரவ அவைத் தலைவர், கௌரவ பிரதி அவைத் தலைவர் மற்றும் கௌரவ உறுப்பினர்களுக்கு 2015 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் பின்வரும் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு கூறுவிலை கோரப்படுகின்றது.

- கணினிகள்
- போட்டோப்பிரதி இயந்திரங்கள்
- அலுவலக மேசை, கதிரைகள்
- அலுவலக கோவை அலுமாரிகள் (Filling cabinet)
- அலுவலக அலுமாரிகள் (Office cupboards)
- பிளாஸ்ரிக் கதிரைகள் (Plastics chairs)
- கணினி மேசை, கதிரைகள்
- தொலை நகலிகள்(Fax machine)
- ஒளிப்படக்கருவிகள்(Camera)
- சொகுசு இருக்கைகள் (Sofa set)
- பிறிண்டர்கள் (Printers)
- ஸ்கானர்கள் (Scanner)

கூறுவிலை கோரல் படிவங்களை A9 வீதி, கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் நிதிக்கிளையில் மீளளிக்க முடியாத வைப்புப் பணம் 1000 /= செலுத்தி அலுவலக நேரத்தில் 23.03.2015 தொடக்கம் 16.04.2015 வரை பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண சபை.

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான குறுகிய கால பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- Nail art
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) மெஹந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,





மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B) பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)




புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.03.2015
புதன்கிழமை காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

குதூகலிக்கும் செய்தி
புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு



புதியதோர் உதயம் தட்டாதெரு சந்தியில்
"சிறிகுமரன் ரெக்ஸ்"

நிகழும் மங்கலகரமான ஜயவருடம்
இன்று (23.03.2015) திங்கட்கிழமை
காலை 9.30 மணிக்கு
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட
சிறிகுமரன் ரெக்ஸ்
எனும் புதுக்கடையை இறைவன் திருவருள்
துணை கொண்டு திறக்கவிருப்பதால்
அத்தருணம் வடிக்கையாளர்கள்
அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.



உரிமையாளர், ஊழியர்கள்.
இல. 770, கே.கே.எஸ். றோட்,
தட்டாதெருசந்தி, யாழ்ப்பாணம்.

## தூய நீருக்கான விசேட செயலணி
### யாழ் மாவட்டம்

நிலத்தடிநீரில் எண்ணெய்மாசு தொடர்பாக ஆராய்வதற்கு வடமாகாண சபையால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு சுன்னாகம் மின்நிலையத்தை மையப்படுத்தி எட்டுத் திசைகளிலும் 200 மீற்றர் இடைவெளியில் 2 கிலோமீற்றர் தூரத்துக்கான மாதிரி வலையமைப்பு ஒன்றை உருவாக்கி, மேற்கொண்ட தமது முதற்கட்ட ஆய்வின் அறிக்கையை தூய நீருக்கான விசேட செயலணியிடம் சமர்ப்பித்துள்ளது. இதில் பின்வரும் முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

1) சுற்றுவட்டத்தினுள் எடுக்கப்பட்ட நீர்மாதிரிகளில் 85 சதவீதமான மாதிரிகளில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பென்சீன், தொலுயின், ஈதையில் பென்சீன், ஓதொ சைலின், பரா சைலின் மற்றும் மெற்றா சைலின் போன்ற நஞ்சுகள் முற்றாக இல்லை. மிகுதி 15 சதவீதமான மாதிரிகளிலும் நியம அளவிலும் பார்க்க 200 மடங்குகள் குறைவான அளவிலேயே காணப்பட்டுள்ளது.

2) சுற்று வட்டத்தினுள் எடுக்கப்பட்ட நீர் மாதிரிகளைக் கொழும்பில் உள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் பரிசோதித்தபோது ஈயம், கட்மியம், ஆர்சனிக், வனேடியம், நிக்கல் போன்ற ஆபத்தான உலோக நஞ்சுகள் இருப்பது கண்டறியப்படவில்லை.

**தூய தண்ணீர் தனிமனித உரிமை**
**அதைக் காப்பது எங்கள் அனைவரதும் கடமை**

தொடர்பு இல : 021 300 3840

**தூய நீருக்கான விசேட செயலணி**
157, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
(சுன்னாகம் ஸ்ரேசன் கிளினிக் அருகாமை)

## ஜிமெயில் ஊடாக பணம் அனுப்ப புதிய வசதி





இணைய உலகில் அசைக்க முடியாத அரசனாகத் திகழும் கூகுள் நிறுவனம் ஜிமெயில் என்ற மின்னஞ்சல் சேவையை வழங்கி வருவது அறிந்ததே.

இந்தச் சேவையை உலகில் பெரும் அளவிலானோர் பயன்படுத்தி வரும் நிலையில் இதன் ஊடாக பணம் அனுப்பும் வசதி முதன் முறையாக அறிமுகம் செய்யப்படுகின்றது.

அதற்கமைய இன்னமும் சில வாரங்களில் நண்பர்கள் மற்றும் குடும்பத்தவர்களுக்கு பணம் அனுப்ப முடியும்.

எனினும் இந்தச் சேவை முதன் முறையாக ஐக்கிய இராச்சியத்தில் மட்டுமே அறிமுகம் செய்யப்படுகின்றது.

## இராட்சத வளையங்களுடன் புதிய கிரகம்




சனிக் கிரகத்தைப் போன்று வளையங்களுடன் கூடிய புதிய கிரகமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விண்வெளியில் கொட்டிக் கிடக்கும் நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் சமீபத்தில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள புதிய கிரகம் ஒன்று சனிக் கிரகத்தைப் போன்றே வளையங்களுடன் உள்ளது. இதற்கு ஜெ 1407 பி எனப் பெயரிட்டுள்ளனர்.

இது குறித்து விஞ்ஞானிகள் கூறுகையில், இந்த வளையம் 30 அடுக்கு வளையங்களால் உருவாகியுள்ளது. இது சனிக் கிரகத்தின் வளையத்தை விட 200 மடங்கு பெரியது.

இந்தக் கிரகத்தைச் சுற்றி 12 கோடி கி.மீற்றர் சுற்றளவு பரந்து விரிந்து கிடக்கிறது என்றும், இதன் மீது படர்ந்திருக்கும் ஒளி தான் வளையம் போன்று காட்சி அளிக்கிறது எனவும் தெரிவித்துள்ளனர்.

## புதிய வசதிகளை அறிமுகம் செய்யும் டுவிட்டர்

மில்லியன் கணக்கான பயனர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள பிரபல சமூகவலைத்தளமான டுவிட்டர் இரு புதிய வசதிகளை அறிமுகம் செய்துள்ளது. அதற்கமைய வீடியோ எடிட்டிங் மற்றும் குழுக்களுக்கிடையிலான சட்டிங் ஆகிய வசதிகளையே அது அறிமுகம் செய்துள்ளது.

இந்த வசதிகளை டுவிட்டர் கணக்கு வைத்திருக்கும் அனைத்துப் பயனர்களும் பயன்படுத்த முடியும்.




அதேவேளை வீடியோக்களின் நீளம் ஆகக் கூடியது 30 செக்கன்கள் உடையதாக மட்டுமே இருக்க முடியும். இந்தப் புதிய வசதிகளின் காரணமாக வருங்காலத்தில் டுவிட்டர் பாவனையாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்.



# அமெரிக்கா தாக்கினால் திருப்பித் தாக்குவோம்

## வடகொரியா எச்சரிக்கை

லண்டன்,மார்ச் 23
எந்த நேரத்திலும் எங்களால் அணு ஏவுகணைகளை வீச முடியும் எனத் தெரிவித்துள்ள வடகொரியா, அமெரிக்கா தாக்கினால் திருப்பித் தாக்குவோம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில், கொரியா தீபகற்பத்தின் வட பகுதியில் அமைந்துள்ள வட கொரியா, தனது அயல் நாடான தென்கொரியாவுடன் தொடர்ந்து மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. எனவே வடகொரியாவின் சவாலைச் சமாளிப்பதற்காக, அமெரிக்காவுடன் தென் கொரியா கூட்டுச் சேர்ந்துள்ளது.

கொரியாத் தீபகற்பத்தில் வட கொரியாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இரு நாடுகளும் இணைந்து அடிக்கடி கூட்டு இராணுவப்பயிற்சிகளை நடத்தி வருகின்றன. இது வடகொரியாவுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் நீண்டதூர ஏவுகணைகளையும், அணு ஆயுதங்களையும் அடிக்கடி வடகொரியா சோதித்துப் பார்த்துள்ளது. அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து கடந்த 1993 ஆம் ஆண்டு விலகிய வடகொரியா, இறுதியாக கடந்த 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 3 அணுகுண்டுகளைச் சோதித்தது. எனினும் அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் நீண்டதூர ஏவுகணைகளை வடகொரியா இன்னும் சோதனை செய்யவில்லை. ஆனால் இந்த ஏவுகணைகளைத் தயாரிக்கும் திறன் அந்த நாட்டுக்கு இருப்பதாக, தென்கொரியாவில் முகாமிட்டுள்ள அமெரிக்காவின் இராணுவ அதிகாரி ஏற்கனவே தெரிவித்திருந்தார்.



இந்த நிலையில் தங்களால் எந்த நேரமும் அணு ஏவுகணைகளை வீச முடியும் என வடகொரியா தெரிவித்துள்ளது. இது குறித்து இங்கிலாந்துக்கான வடகொரியா தூதர் ஹியுன் ஹக்பாங், தெரிவிக்கும் போது; அணு ஆயுதத் தாக்குதல் என்பது அமெரிக்காவுக்கான ஏக போக உரிமை அல்ல. அணு ஏவுகணைகளை வீச வடகொரியாவால் எப்போது வேண்டுமானாலும், எந்த நேரத்திலும் முடியும் எனவும், 'நாங்கள் போரை விரும்பவில்லை. ஆனால் அமெரிக்கா எங்களைத் தாக்கினால், நாங்கள் திருப்பித் தாக்குவோம். அது வழக்கமான போரென்றால் அதற்கும், அணு ஆயுதப்போர் என்றால் அந்த ரீதியான போருக்கும் நாங்கள் தயார்' எனவும் தெரிவீத்துள்ளார்.

இதற்கிடையே ஜப்பான் மற்றும் தென்கொரியாவில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படைகளைக் குறிவைத்து நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை வடகொரியா தயாராகவைத்திருப்பதாகஅமெரிக்க அதிகாரிகள் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (14)

## மார்புக்கு வெளியே இதயம் அதிசயப் பெண் குழந்தை



டில்லி,மார்ச் 23
இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் பிறந்த பெண் குழந்தை ஒன்றுக்கு மார்புக்கு வெளியே இதயம் உள்ளதால் உயிரைக் காப்பாற்றுவதற்கு அறுவை சிகிச்சை செய்ய வைத்தியர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

மத்தியப்பிரதேசத்தில் உள்ள லட்கோன் கிராமத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவருக்கு கடந்த வாரம் பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. பிறந்த அந்தக் குழந்தைக்கு இதயம், மார்புக்குள் இல்லாமல், மார்புக்கு வெளியே காணப்படுவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், குழந்தையின் இதயம் நன்றாக துடிப்பதாகக் கூறிய மருத்துவர்கள், குழந்தையின் இதயத்தை மார்புக்கு உள்ளே வைத்து, உயிரை காப்பாற்ற சிகிச்சை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (14)

## மோடிக்கு மீண்டும் உருவாகும் ஆலயம்

அலகாபாத், மார்ச் 23
குஜராத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒரு ஆலயம் கட்டப்பட்டது. இது குறித்து பல சர்ச்சைக் கருத்துகள் எழுந்ததால் மோடியே அந்த ஆலயத்தை இடிக்க உத்தர விட்டார். அதன்படி அந்த ஆலயம் இடிக்கப்பட்டது.

இந்த நிலையில் உத்தரப்பிரதேச மாநிலம், அலகாபாத்–வாரணாசி நெடுஞ்சாலையில் மோடிக்கு மற்றொரு ஆலயம் கட்டப்படவுள்ளது. அலகாபாத் மாவட்டத்தில் உள்ள ஜலால்பூர் என்ற கிராமத்தில் ஸ்ரீகிருஷ்ண் சேனா அமைப்பின் மூலம் கட்டப்படும். இந்த ஆலயத்தில் கிருஷ்ணர் சிலையும்,



கோப்புப் படம்


பிரதமர் மோடியின் சிலையும் அமைக்கப்படவுள்ளன. சுமார் ரூ.1 கோடி செலவில் கட்டப்படும் இந்த ஆலயம் இன்னும்; 6 மாதங்களுக்குள் திறக்கப்படும் என கிருஷ்ண சேனா அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (14)

## நடிகர் ஷாருக்கான் மீது வழக்கு

மும்பை, மார்ச் 23
குழந்தைகள் முன்பு வெறுக்கத்தக்கப் பேச்சு விவகாரம் தொடர் பாக நடிகர் ஷாருக்கான் மீது வழக்குப் பதிவுசெய்யஉத்தரவிடப்பட்டுள்ளது. ஐ.பி.எல். கிரிக்கெட் அணிகளில் ஒன்றான 'கொல்கத்தா நைட் ரைடர்ஸ்' அணியின் உரிமையாளர் நடிகர் ஷாருக்கான் ஆவார். கடந்த 2012 ஆம் ஆண்டு கொல்கத்தா மும்பை அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. இதில், கொல்கத்தா அணி வென்றது. இதனால் வெற்றிக்களிப்பில் ஷாருக்கான் மைதானத்துக்குள் நுழைந்தார். அதன்போது அவருக்குச் சிறப்பு அழைப்பு விடுத்த குழந்தைகளும் சென்றனர். இந்தநிலையில் ஷாருக்கானை மைதானத்தை விட்டு வெளியே செல்லுமாறு பாதுகர்வலர்கள் வலியுறுத்தினர். இதனால் அவருக்கும் பாதுகாவலர்களுக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டது.

அந்த சமயத்தில், ஷாருக்கான் வெறுக்கத்தக்க மற்றும் இழிவான சொற்களைப் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் முன்பு வெறுக்கத்தக்க வகையில் பேசியதால் அவர்களது மனநிலைமை பாதிக்கப்படும் என்று, அமீத்மரு எனும் சமூக ஆர்வலர் ஷாருக்கான் மீது குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு அதிகாரியிடம்முறைப்பாடுசெய்துள்ளார். (14)



அமெரிக்காவின் மெக்சிகோ நகரில் நீருக்கு அடியில் உள்ள பூங்காவில் அழகாக நிற்கும் சிலைகள்.(14)

## பாகிஸ்தானால் சிறை பிடிக்கப்பட்ட 57 இந்திய படகுகள் விடுவிப்பு

இஸ்லாமாபாத், மார்ச் 23
பாகிஸ்தான் கடல் எல்லைப் பகுதியில் அத்துமீறி மீன்பிடிக்கும் மீனவர்கள் கைது செய்யப்படுவதோடு, அவர்களின் படகுகளும் அந்த நாட்டுக் கடலோர காவல் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

அவ்வாறு சிறைப் பிடிக்கப்பட்ட 57 இந்தியப் படகுகள் பாகிஸ்தான் அரசால் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து பாகிஸ்தான் வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், சிறைபிடிக்கப்பட்ட படகுகளை விடுவிக்க கடந்த மே மாதம் முடிவு செய்யப்பட்டது. இதற்கிடையே இந்தியாவில் இருந்து கடந்த வாரம் கராச்சி வந்த 8 பேர் அடங்கிய இந்திய மீனவர் குழு, இந்தியப் படகுகளை விடுவிப்பது தொடர்பாக பாகிஸ்தான் கடலோரக் காவல்படையினருடன் ஆலோசனை நடத்தியது. இதன்முடிவில் இந்தியப் படகுகளை விடுவிக்க பாகிஸ்தான் சம்மதம் தெரிவித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (14)

## தூக்குத் தண்டனையை நிறுத்துங்கள்

### பாகிஸ்தானுக்கு ஜேர்மனி கண்டனம்

பாகிஸ்தானில் பெஷாவர் பாடசாலையின் தாக்குதலுக்குப் பின்னர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த தூக்குத் தண்டனை மீதான தடை விலக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தொடர்ந்து குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை வி[illegible]கப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் ஒரே நாளில் 12 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஜேர்மன் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் உலக நாடுகளில் தூக்குத் தண்டனை நிறைவேற்றக்கூடாது என்று வலியுறுத்தி வருகின்றன. பாகிஸ்தானில் தொடர்ந்து தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவதை கருத்தில் கொண்ட ஜேர்மன், பாகிஸ்தான் தூதரை அழைத்து தூக்குதண்டனையைநிறுத்திவைக்குமாறு மனுக் கொடுத்துள்ளது.

இதுகுறித்து ஜேர்மன் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சக அதிகாரி தெரிவிக்கும் போது; பாகிஸ்தானில் நிறைவேற்றப்பட்டு வரும் தூக்குத் தண்டனையை ஜேர்மன் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. தூக்குத் தண்டனை மனித இனத்துக்கு எதிரானது. இது மிகக்கொடூரமானதண்டனைஉலகநாடுகளில்இருந்தே இந்தத் தண்டனையை இரத்து செய்ய ஜேர்மன் போராடிவருகிறது–என்றார். (14)

## அரசியல் ஊழல்களுக்கு பாப்பரசர் கண்டனம்

வத்திக்கான்,மார்ச் 23
அரசியல் ஊழல்களை வெளிப் படையாகக் கண்டித்துள்ளதுடன் குற்றக் கும்பல்கள் தங்களின் குற்றங்களுக்காக ஆழமாக வருந்த வேண்டும் என்றும் பாப்பரசர் பிரான்ஸிஸ் தெரிவித்துள்ளார்.
தென் இத்தாலியிலுள்ள நெப் பிள்ஸ் நகருக்கான பயணத்தின் போதே பாப்பரசர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.
சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களின் பிடியில் இருக் கும் வறிய மக்கள் வாழும் நெப் பிள்ஸ் நகருக்கு பாப்பரசர் அண்மை யில் பயணத்தை மேற் கொண்டி ருந்தார். இந்தப் பகுதி கமோராக் குழுவினரின் ஆதிக்கத்திலுள்ளது.
குற்றம் இழைப்பவர்கள் அனை வரும் அன்பானவர்களாகவும், நீதி யுள்ளவர்களாகவும் மாற வேண் டும் எனவும் எளியவர்களையும், ஏழைகளையும், இளைஞர்களை யும் சுரண்டும் குற்ற அமைப்புக் களுக்கு எதிராகக் கிளர்ந்தெழு மாறும் அங்குள்ளவர்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (14)

## ஜப்பான், தென்கொரியா, சீன வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு



பிஜீங்,மார்ச் 23
தென்கொரியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் வெளி யுறவு அமைச்சர்கள் கடந்த 3 வருடங்களில் முதற் தடவையாக நேரடிச் சந்திப்பில் ஈடுபட்டுள்ளனர்.
இந்தச் சந்திப்பின் பின்னர் கூட்ட றிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள வெளியுறவு அமைச்சர்கள் மூன்று நாடுகளின் தலைவர்களும் பங் கெடுக்கின்ற மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்யவுள்ளதாக உறுதிய ளித்துள்ளனர்.
இந்த மாநாட்டை ஒழுங்கு செய் வதற்கு முன்னதாக, இரண்டாம் உலகப்போரின் 70ஆவது ஆண்டு நிறைவின்போது ஜப்பான் என்ன சொல்லதிட்டமிட்டுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்காகச் சீனா காத்திருக்கும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இரண்டாம் உலகப்போரின் போது யப்பான் வலிந்து படையெடுப்புக்கு வந்ததாகக் கருதும் சீனாவும் தென்கொரியாவும், ஜப்பான் அதற் காகப் பரிகாரம்காணமறுக்கின்றமை தொடர்பில் கோபத்துடன் இருப்ப தாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.(14)



சீனாவின் நெடுஞ்சாலை ஒன்றில் மீன்களை ஏற்றிச் சென்ற லொறியின் கதவு திடீரெனத் திறந்து கொண்டதால், வீதியெங்கும் மீன்கள் சிதறி வீசப்பட்டன. அவற்றை அள்ளி எடுத்துச்சென்றனர் மக்கள். (14)

## 39 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்தவருக்கு ரூ. 6 கோடி



வொஷிங்டன்,மார்ச் 23
அமெரிக்காவில் நீண்ட காலச் சிறைத் தண்டனை அனுபவித்த முதல் நபரான ரிக்கி ஜாக்சன் என்ப வருக்கு நஷ்டஈடாக 6 கோடி ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது.
ஓஹியோ மாகாணத்தின் க்ளீவ் லாந்தை சேர்ந்த ரிக்கி ஜாக்சன் தான் செய்யாத கொலைக்கு 39 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்து விட்டு, கடந்த வருடம் விடுதலையானார். ஜாக்சன், ஒரு வரைக் கொலை செய்ததாகக் கடந்த 1975 ஆம் ஆண்டு வைலி பிரிட்ஜ் மேன் மற்றும் அவரது சகோதரர் ரோனி ஆகியோருக்கு 39 வரு டங்கள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது. இந்த வழக்கில் 12 வயதான எட்டி என்ற சிறுவன் மூவரும் கொலை செய்ததை நேரில் பார்த்த தாக சாட்சியம் அளித்ததைத் தொடர்ந்தே இந்தச் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டது. இவ்வாறு சாட்சியம் அளித்து 40 வருடங்களுக் குப் பின்னர் மனம் திறந்தார் எட்டி, கொலை நடந்ததைத் தான் பார்க்க வில்லை எனத் தெரிவித்துள்ளார்.
இதனையடுத்து 20 வயதில் சிறைத் தண்டனை பெற்ற ஜாக்சன் 39 வருடங்களுக் குப் பின்னர் விடுவிக் கப்பட்டார். ஜாக்சனுக்கு தவறாக தண்டனை அளிக்கப்பட்டு விட்டது என்றும், அவருக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கோரி வழக்கறிஞர் மைக்கேல் பெர்ரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத் தார். அந்த வழக் கில் கடந்த வாரம் ஜாக்சனுக்கு 1 மில் லியன் டொலர் நஷ்ட ஈடு வழங்க உத்தர விடப்பட் டுள்ளது. (14)

## சிரியாவில் தீவிரவாதிகள் தாக்குதல்; 103 பேர் சாவு



பெய்ரூட்,மார்ச் 23
ஈராக் மற்றும் சிரியாவில் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து அந்த நாடுகளில் தாக் குதல் நடத்தி வருகின்றனர். தீவிர வாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா மற்றும் பல்வேறு நாடு களின் படைகள் ஈடுபட்டுள்ளன.
இந்த நிலையில் சிரியாவில் உள்ள மத்திய ஹாம்ஸ் மற்றும் ஹமா மாகாணங்களில் கடந்த வெள் ளிக்கிழமை பொலிஸ் சோதனைச் சாவடிகளைக் குறி வைத்து ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள் ளனர். இதன் போது 70 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.
வடகிழக்கு சிரியாவில் குர்திஷ் இனமக்கள் அதிகம் வாழும் ஹசாகா நகரில் பாரம்பரிய புத்தாண்டை மக்கள் கொண்டாடிக் கொண்டிருந் தனர். இதன்போது தற் கொலைப் படைத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதால் குழந்தைகள், பெண் கள் உட்பட 33 பேர் உயிரிழந் துள்ளதுடன்; பலர் படுகாயமும் அடைந்துள்ளனர்.' இந்தத் தாக்கு தலுக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகள் தான் காரணம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (14)

## தீயாய் பரவும் எபோலா

### மூன்று நாள்களுக்கு மக்கள் முடக்கம்


ப்ரீடவுன், மார்ச் 23
மேற்கு ஆபிரிக் நாடான சியாரா லியோனுக்கு அனைத்து நாடுக ளும் பெரு முயற்சி செய்து மருந்து களையும் மருத்துவக் குழுக்களை யும் அனுப்பி வைத்த பின்னரும் கொடிய எபோலா வைரஸை ஒழிக்க முடியவில்லை.
காட்டுத்தீ போல் பரவி வரும் எபோலாவைக் கட்டுப்படுத்தும் வகையில், சியாரா லியோன் ஜனா திபதி எர்னெஸ்ட் கொரோமா 3 நாள்களுக்கு நாட்டிலுள்ள அனைத்து மக்களும் தங்களின் வீடுகளில் இருக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.
எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக் கம் தொடர்ந்து 3 நாள்கள் இந்த தேசிய அளவிலான முடக்கம் செயல் படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
பலரது உயிரைக் காவு கொண்ட எபோலாவால் நாட்டின் பொருளா தார வளர்ச்சியும் மக்களின் வாழ்க் கையும் கேள்விக் குள்ளாகி யிருப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(14)

## தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட 70 பேரின் சடலங்கள் மீட்பு

நைஜீரியாவில் போகோ ஹாரம் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். வடமேற்கு நைஜீரியாவில் பல நகரங்களைத் தங்கள் வசம் வைத்துள்ளனர். அவற்றை மீட்க நைஜீரிய இராணுவத்துக்கு அண்டை நாடுகளான சாட் மற்றும் நைஜர் நாடுகள் உதவுகின்றன.
அண்மையில் டமாசக் என்ற நகரம் மீட்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அங்கு இராணுவத்தினர் தீவிர சோதனை நடத்தியுள்ளனர். இதன் போது அங்குள்ள பாலைவனப் பகுதியில் 70 இற்கும் மேற்பட்டவர்களின் சடலங் கள் மீட்கப்பட்டுள்ளன. அந்தச் சடலங்களில் பலரது தொண்டைகள் அறுக்கப் பட்டும், தலை துண்டிக்கப்பட்டும் இருந்துள்ளன. இந்தச் சடலங்கள் எவருடை யவை என்பது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(14)

## ண்ணீர்ப் பயன்பாட்டில் மாற்றம் தேவை வலியுறுத்துகிறது ஐ.நா.

நியூயோர்க்;,மார்ச் 23
தண்ணீர் வளத்தைப் பயன்படுத்து வதில் திடமான மாற்றத்தைக் கொண்டு வருதல் வேண்டும். இல்லையென்றால் இன்னும் 15 வருடங்களில், உலகம் 40 சதவீத தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர் கொள்ளும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.
மழை வீழ்ச்சிப் போக்கில் மாற்றம், நிலத்தடி நீர் இருப்பு குறைவது, மற்றும் மக்கள் தொகை அதி






கரிப்பு ஆகியவற்றை இதற்குக் காரணிகளாகச் சுட்டிக்காட்டி யுள்ளது ஐ.நா சபை.
இந்தத் தண்ணீர்த் தட்டுப்பாடு, விவசாயம் மற்றும் தொழிற் துறை ஆகியவற்றையும் பாதிக்கும் என எச்சரித்துள்ளது.
தண்ணீரை மேலும் பாதுகாப்பது மற்றும் கழிவு நீரை மீள் சுழற்சி செய்து பயன்படுத்துவது போன்ற வற்றை வலியுறுத்தியுள்ளதுடன் தண்ணீர் கொள்கைகளை மறு பரிசீலனை செய்யுமாறு அரச மற்றும் சமூகங்களுக்கும் இந்த அறிக்கையின் ஊடாக ஐ.நா அழைப்பு விடுத்துள்ளது. (14)

# உணவு கையாளும் நிறுவனங்களில் பின்பற்றப்பட வேண்டிய உணவுச் சுகாதார நடைமுறைகள்

ஆ.ஜென்சன் றொனால்ட்,
பொது சுகாதார பரிசோதகர்





உணவானது நமது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. உணவினூடாகவே உடலுக்குத் தேவையான சக்தியும் உடற் கலங்களின் வளர்ச்சி, விருத்தி மற்றும் புதுப்பித்தலுக்குத் தேவையான அனைத்துப் போசணைகளும் கிடைக்கின்றன.

எனவே உணவானது அதன் போசணைத் தன்மையில் நிறைவாகவும், அதனை உள்ளெடுப்பவருக்கு நோயாக்கிகளைக் காவாததாக பாதுகாப்பானதாக இருப்பதே உணவுச் சுகாதாரமாகும்.

இந்த உணவுச் சுகாதார நடைமுறையானது அதன் மூலப்பொருளின் உற்பத்தியிலிருந்து பராமரிப்பு, சேமிப்பு முடிவுப்பொருளாக்கும் படிமுறைகள், பின்னரான சேமிப்பு என மனிதநுகர்வு வரை கைக்கொள்ளப்பட வேண்டியதாகின்றது.

இதிலும் விசேடமாக எமது வாழ்நிலையின் தேவைக்கேற்ப உணவகங்களை நாடி எமது போசணைத் தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத்தில் பல மக்கள் உள்ளனர். எனவே இந்த மக்களின் போசணைத் தேவையை பாதுகாப்பான உணவை வழங்குவதன் ஊடாகவே உணவு கையாளும் நிறுவனங்கள் பூர்த்திசெய்து தமது வருவாயைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவர்களது தொழில் தர்மமாகும்.

**நிறுவனங்களின் அமைப்பு**

உணவு கையாளும் நிறுவனங்கள் சிறிய பெட்டிக் கடை வகையானதோ, பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டல் வகையானதோ எல்லாவாற்றுக்குமே அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஒன்றாகவே இருக்க வேண்டும்.

அதாவது உணவு உற்பத்திப் பிரிவு,உணவுக் களஞ்சியப் பிரிவு, உணவு பரிமாறும் பிரிவு என்பவற்றுடன் கழிவுகளைப் பாதுகாப்பாக இறுதி அகற்றலுக்கு உட்படுத்தும் முறை அல்லது பொறி என்பன அடிப்படையாக இருக்கவேண்டும்.

இவையாவும் நிரந்தர மூலப் பொருள்களால் உருவாக்கப்பட்டிருப்பதோடு இலகுவாக சுத்தம் செய்யக் கூடிய விதத்திலும் அமைக்கப்பட்டிருத்தல்வேண்டும்.



**சமையல் அறைப்பகுதி**

உணவு உற்பத்தி செய்யும் இடமே சமையல் அறையாகும். இதற்கு மிகப் பிரதானமாக புகைபோக்கி அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் தேவைக்கேற்ற எண்ணிக்கையில் வளி வெளியேற்றும் விசிறிகள் (Exhause)பொருத்தப்பட்டு அவை சமையல் வேளைகளில் இயக்கப்பட வேண்டும். இதனால் புகை, தூசு, அதிகவெப்பம் என்பனவற்றை சமையலறையினுள்ளே கட்டுப்படுத்தமுடிகின்றது. சமையலறையின் கதவுகள் இயல்பாக மூடியவையாக (Automatic door ) அமைக்கப்படுவதோடு ஜன்னல் வெளிகளுக்கு "ஈ" புகாத (fly proof)வலை இடப்பட்டிருக்க வேண்டும்.



சமையலறையின் சுவர் அழுத்தானதாகவும்எண்ணெய் வர்ணம்/மாபிள் இடப்பட்டதாக கழுவிச் சுத்தமாக்கப்படக் கூடிய வகையிலும் அமைக்கப்பட வேண்டும். தரை அழுத்தமானதாகவும் கழுவிச் சுத்தமாக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். உட்கூரை (Seiling) அழுத்தமானதாக, துடைக்கக் கூடியதாக பூரணமாக இடப்பட்டிருக்க வேண்டும். சமையலறையில் போதியளவு மூடியுடன் கூடிய (துவாரங்கள் அற்ற) குப்பைக் கூடைகள் பேணப் பட வேண்டும் அவை கிரமமாக குப்பைகள் அகற்றப்பட்டு தொற்று நீக்கிகளால் ( Lysol, Detol) சுத்தமாக்கப்படவேண்டும்.

சமைத்த உணவுகளை உடனடியாகச் சேமித்து வைக்கும் மூடியுடைய பெட்டி/அலுமாரி ஏற்படுத்தப்பட்டுப் பேணப்படவேண்டும். சமையலறையினுள்ளே சவர்க்காரத்துடன் கூடிய கைகழுவும் வசதி குழாய் நீர்மூலம் ஏற்படுத்தப்படுவதோடு ஏனைய உணவுப் பொருள்கள்,பாத்திரங்கள் கழுவும் வசதிகளும் குழாய் நீர் மூலம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சமையல் அறையில் வேலை செய்யும் அனைவரும் சுத்தமான மேலாடை( Apron) அணிந்திருப்பதோடு உணவு கையாளும் நிலைய ஊழியர்கள் யாவரும் மருத்துவ பரிசோதனை செய்து தாம் உணவை மாசாக்கக்கூடிய நோய்க் காவிகளாக இல்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இதற்காக மலபரிசோதனை மற்றும் குருதியில் SAT பரிசோதனை என்பன அடிப்படையில் செய்யப்படுகின்றன. இதனுடன் தோல் மற்றும் சுவாசநோய்கள் பற்றியும் பரிசோதிக்கப்பட்டு மருத்துவ சான்றிதழ் பெறப்படவேண்டும்.

தேநீர் தயாரிக்கும் இடத்தில் குவளைகளைக் கழுவுவதற்கு குழாய் மூலமாக ஓடும் நீரே பயன்படுத்தப்படவேண்டும். இவை சுத்தமானவையாக இருக்கவேண்டும் நீர் மூலமானது (குடிதண்ணீர்) பக்றீரியாவியல் பகுப்பாய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதில் மலத்தொற்றுக்கான கிருமிகள், நோயாக்கிகள் இல்லை என்பது கிரமமாக அறிக்கைப்படுத்தப் படவேண்டும். *(தொடரும்)*

உணவு கையாளும் நிறுவனங்கள் சிறிய பெட்டிக் கடை வகையானதோ, பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டல் வகையானதோ எல்லாவாற்றுக்குமே அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஒன்றாகவே இருக்க வேண்டும்.
அதாவது உணவு உற்பத்திப் பிரிவு, உணவுக் களஞ்சியப் பிரிவு, உணவு பரிமாறும் பிரிவு என்பவற்றுடன் கழிவுகளைப் பாதுகாப் பாக இறுதி அகற்றலுக்கு உட்படுத்தும் முறை அல்லது பொறி என்பன அடிப்படையாக இருக்கவேண்டும்.


## அடிடாஸ் எனேர்ஜி பூஸ்ட் ரன்னிங் ஷூவுடன் நிறுத்தாமல் ஓடுங்கள்



உலகப்புகழ்பெற்ற விளையாட்டு வர்த்தக நாமமான அடிடாஸ் இலங்கையிலுள்ள உடற்பயிற்சி ஆர்வலர்களுக்காக அண்மையில் அதன் அதிநவீன எனேர்ஜி பூஸ்ட் ஓட்டத்துக்கான சப்பாத்துகளை (Energy Boost running shoes) அறிமுகம் செய்துள்ளது.

இந்த புதிய ஷூஆனது, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது என்பதுடன், உயர் செயற்திறன் மற்றும் நீண்ட கால பாவனை ஆகியவற்றுக்காக அறியப்படும் இந்தப் புத்தமைவு சப்பாத்தானது தனக்கென ஒரு நற்பெயரையும் பெற்றுள்ளது.

தனித்துவமிக்க இந்த ஓட் டத்துக்கான சப்பாத்துகளைத் தயாரிப்பதற்கு அடிடாஸ், உலகின் முன்னணி இரசாயன கம்பனிகளில் ஒன்றான பி.ஏ.எஸ்.எவ் உடன் இணைந்தது. இவ்விரு நிறுவனங்களின் பங்குடைமையில் சொலிட் க்ரானுலர் பதார்த்தம் ஒன்று வெடிக்க வைக்கப்பட்டு அது ஆயிரக்கணக்கான சிறு சக்தி கேப்ஸ்யூல்ஸாக உடைக்கப்படும் செயற்பாடு கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்விரு நிறுவனங்களின் இணைவின் ஊடாக பி.ஏ.எஸ்.எவ் ஆனது ஷூ ஒன்றில் முன்னெப்போதுமில்லாத அதியுயர் சக்தித் திரும்பலை அளிக்கும்.

விருதுகள் வென்ற இந்த ரன்னிங் ஷூக்கள் ரன்னர்ஸ் வேர்ள்ட் 2013 இல் எடிட்டர்ஸ் சொய்ஸ் விருதினைப் பெற்றதுடன், நிலையான அதன் செயற்திறனுக்காக உலகப்புகழ் பெற்றுள்ளது.

இந்த எனேர்ஜி பூஸ்ட் ரன்னிங் ஷூஆனது எல்லாக்கால நிலைகளுக்கும் பொருத்தமானது என்பதால், கோடை, குளிர், பனிக்காலம் என எந்நேரத்திலும் உபயோகிப்பதற்கு ஏற்றது.

அடிப்பாகமானது அழுக்கை விரைந்து எடுப்பதுடன், அடிப் புறத்தின் நடுப்பகுதியானது உங்கள் பாதங்களைக் கௌவிப் பிடித்து, அதிசிறந்த சௌகர்யத்தை தருகின்றது. உங்கள் பாதங் களை கௌவி அரவணைத்துக்கொள்ளும் இந்த சப்பாத்தானது, அடிடாஸ் தெரிவிப்பதைப்போன்று உங்கள் ஒவ்வொரு அடிகளுக்கும் ஸ்ப்ரிங் போன்ற அசைவை தருவதையொத்த வசதியை அளிக்கின்றது.

ஏனைய ஓட்டத்திற்கான சப்பாத்துகளைப் போலல்லாது அடிடாஸ் எனேர்ஜி பூஸ்ட் ரன்னிங் ஷூ ஆனது பளிச்சிடுபவையல்ல, குறைந்த எடை கொண்ட இந்த சப்பாத்துகள் மென்மையான அதேநேரத்தில் மிகுந்த உறுதியுடையன. இந்த எனேர்ஜி பூஸ்ட் ரன்னிங் ஷூதொகுப்பானது சௌகர்யமானது, சிறப்பான செயற்திறனை வெளிப்படுத்துகின்றது என்பதுடன், சிறிய காயங்களிலிருந்து உங்களைப் பாதுகாக்கும்.

இப்போது நீங்கள் அடிடாஸ் எனேர்ஜி பூஸ்ட் ரன்னிங் ஷூஉடன் தடையின்றி உங்கள் ஓட்டத்தை தொடரலாம். இலங்கையில் அடிடாஸுக்கான ஏக முகவர்களாக எச்.எஸ். குளோதிங் விளங்குகின்றது.








எனேர்ஜி பூஸ்ட் ரன்னிங் ஷூ தொகுப்பினை நாடளாவிய ரீதியில் முக்கிய இடங்களில் அமையப்பெற்றுள்ள பிரத்தியேக அடிடாஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

அடிடாஸ் காட்சியறைகள் மிகச்சிறந்த செயற்திறனை வெளிப்படுத்தும் விளையாட்டுக் காலணிகளை நாட்டின் தொழின்முறை விளையாட்டு வீரர்களுக்கும், விளையாட்டு ஆர்வலர்களுக்கும் பல்வகை நிறங்கள், அளவுகள் மற்றும் வடிவமைப்புகளில் அளிக்கின்றது. (த)

# வாசகர் திருமுகம்



## விளக்கம் தருவார்களா?

பிரசித்திபெற்ற ஆலயமாகிய அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேகம் சித்திரை 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில் ஆலய நிர்வாகத்தினருக்கும் சிவாச்சாரியர்களுக்குமிடையே பஞ்சமுக விநாயகப் பெருமானைப் பிரதிஷ்டை செய்வது தொடர்பான கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

தற்போது நவக்கிரக பதத்தில் தெற்கு நோக்கிய வண்ணம் பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். இதனால் சிவாச்சாரியர்களுக்கு பல துன்ப நிகழ்வுகள் நடைபெற்றுள்ளதாக சிவாச்சாரியர்கள் கூறி, பஞ்சமுக விநாயகப் பெருமானை வேறு இடத்தில்பிரதிஷ்டைசெய்யவேண்டுமெனக் கூறுகின்றனர். ஆலய நிர்வாகத்தினரோ தற்போதுள்ள இடத்திலிருந்து வேறு இடத்துக்கு பஞ்சமுக விநாயகப் பெருமானை மாற்றவோ அல்லது கிழக்கு நோக்கிய வண்ணம் வைக்கவோ- பிரதிஷ்டை செய்யவோ கூடாது என மறுக்கின்றனர்.

இந்தப் பஞ்சமுக விநாயகப் பெருமான் எழுந்தருளியாக தேர்த்திருவிழாவுக்கு மட்டும் தேருக்கு எழுந்தருளுவார்.

இந்தப் பிணக்கு நீதிமன்றம்வரை செல்லக்கூடிய நிலையில் இழுபறியில் உள்ளது. கும்பாபிஷேகமும் தடைப்படலாம்.

எனவே இந்தப் பிரச்சினை தொடர்பாக வேத சிவாகம விற்பன்னர்களும், இந்துசமய அமைப்புக்களைச் சார்ந்தவர்களும் ஆகம ரீதியான விளக்கத்தை பகிரங்கமாக நடுவு நிலைமையில் நின்று விளக்கம் தருவார்களா?

வெறுமனே விழாக்களையும் பட்டி மண்டபங்களையும் விளம்பரத்துக்காக நடத்தும் இந்து சமய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் ஆலயங்களை நீதிமன்றுக்குப் போகாமல் தடுப்பார்களா? இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைத் தருவார்களா?

*க.சிவசுப்பிரமணியம்,*
*கும்பிழாவளைப் பிள்ளையார்,*
*கோயிலடி, அளவெட்டி.*

## வீதி புனரமைக்கப்படுமா?

கிளிநொச்சி மாவட்டத்தின்இயக்கச்சி சந்தியில் இருந்து- (ஏ-9அருகில்) வெற்றிலைக்கேணி (சுண்டிக்குளம்) செல்லும் பிரதான வீதியானது நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் உள்ளது. இந்த வீதியானது இயக்கச்சிச் சந்தியில் இருந்து நான்கு கிலோ மீற்றர் சென்று பிரிந்து, ஒருவீதி வெற்றிலைக்கேணிக்குச் செல்கின்றது. மற்றையவீதி கட்டைக்காடு ஊடாக சுண்டிக்குளம் வரை கிட்டத்தட்ட 35 கிலோ மீற்றர் தூரம் செல்கின்றது. இதில் இயக்கச்சி சந்தியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை திருத்தி "தார்" ஊற்றி விட்டு மிகுதியைத் திருத்தாமல் விட்டுள்ளனர்.

தற்போது இந்த வீதி கிண்டி விடப்பட்டுள்ளது. இதனால் இந்த வீதியால் செல்லமுடியவில்லை. ஒரே தூசாக உள்ளதால் வீதியின் கரையோரத்தில் உள்ள மக்கள் வசிப்பதும் கஷ்டமாகவுள்ளது.

*இயக்கச்சியூரான்*

கேலிச் சித்திரம்



நன்றி: மவ்பிம

# இனியும் வேண்டாம் ஏமாற்று அரசியல்

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வயாவிளான் கிழக்கு பகுதியில் மீள்குடியமரவென அழைத்துச் செல்லப்பட்ட மக்கள், ஏமாற்றத்துடன் திரும்பியிருக்கிறார்கள்.

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக தமது வாழ்விடங்களை இழந்து, உறவினர்கள், அயலவர்கள் வீடுகளிலும் அகதி முகாம்களிலும் தமது வாழ்க்கையை ஓட்டிய இந்த மக்கள், மீண்டும் தமது சொந்த மண்ணை காண்பதற்காக சென்ற போது ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி முழுமையாக மீள்குடியமர்வுக்கு மக்களிடம் கையளிக்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தமது வாழ்விடங்களை நீண்ட காலத்தின் பின்னர் பார்ப்பதற்காக ஆவலுடன் சென்றிருந்த மக்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. இதனால் கோபம் அடைந்த மக்கள், படையினருடனும் அரச அதிகாரிகளுடனும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சொந்த நிலங்களும் வீடு வாசல்களும் விடுவிக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் 25 வருடங்களுக்கும் மேல் காத்திருந்த இந்த மக்களை மீண்டும் ஏமாற்றி அரசியல் நாடகம் ஆடியுள்ளது அரசு. மக்களின் வாழ்விடங்களில் இருந்து விட்டு விலக விருப்பமில்லாத படைகள் அங்கு, முட்கம்பிகளையும் கற் தூண்களையும் கொண்டு தமிழர் நிலங்களுக்கே எல்லையிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டதை எவ்வாறு பொறுத்திருப்பது. எங்கள் நிலங்களுக்கே எல்லையிடுவதற்கு இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது என்று, பொரிந்து தள்ளினார்கள் மக்கள். அவர்களது கோபம் நியாயமானதுதான். நீண்ட நெடுங்காலத்தை மிகுந்த வேதனையுடனும் ஆறாத வடுக்களுடனும் அகதிவாழ்வில் கழித்துவிட்டு, இப்போது சொந்த இடம் திரும்பும் அதீத ஆசையுடன் சென்றால், அங்கும் படையினர் தமது வித்துவத்தனத்தை விடுவதாக இல்லை. அந்த மக்களின் விவசாய நிலங்களில் செழிப்பான விவசாயச் செய்கையில் ஈடுபடும் படைகளுக்கு அந்த வளமான நிலங்களை விட்டுக்கொடுப்பதென்பது வேப்பங்காய் கசப்புத்தான். தமது தேவைகளுக்காகவும் வருமானத்துக்காகவும் வயாவிளான் மக்களின் நிலங்ளைப் பயன்படுத்தி பெரும் எடுப்பில் விவசாயம் செய்யும் படையினர் மீளக் குடியமர்வதற்கு அனுமதித்த பகுதிகளோ ஒன்றுக்கும் உதவாதவை. அந்தப் பகுதிகளில் மக்களின் குடியிருப்புக்களே இல்லை. நன்கு திட்டமிட்டே படையினர் இவ்வாறு வயாவிளான் கிழக்கு மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள்.

இந்தப் பகுதி மீள்குடியமர்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதற்கு இன்று யாழ்ப்பாணம் வருகிறார் ஜனாதிபதி மைத்திரிபால. தமிழரின் மீள்குடியமர்வையும் அரசியலாக்கி, ஆதாயம் தேடும் செயற்பாடுகளிலேயே சிங்கள அரசுகள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன. அதேபோன்றதுதான் இன்று நடைபெறும் நிகழ்வும்.

ஆயினும், இன்று வரும் ஜனாதிபதிக்கு வயாவிளான் கிழக்கு மக்கள் சரியான ஒரு செய்தியை வழங்கவேண்டும். அதற்காக அவர்கள் ஒன்றுபடவேண்டும்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளோ மீள்குடியமர்வுக்கு ஏற்றவையல்ல. அந்தப் பகுதிகளிலும் சுற்றிவர இராணுவத்தினர். இவ்வாறு ஒரு நெருக்கமான சூழ்நிலைக்குள் மக்கள் எவ்வாறு வசிப்பது. எனவே, பயனற்ற இந்த மீள்குடியமர்வு நிகழ்வில் மக்கள் பங்குபற்றுவதால் என்ன நிகழப்போகிறது. அவர்கள் தமது அரசியல் ஆதாயத்துக்காக இதனைப் பயன்படுத்தப்போகிறார்கள்..

தமிழர்களை இவ்வாறு தொடர்ந்தும் ஏமாற்றும் கலாசாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டிய கட்டாயம் இப்போது எழுந்திருக்கிறது. தமது அரசியல் தேவைகளுக்காக தமிழர்களைப் பயன்படுத்தும் சிங்களத் தலைமை களின் திட்டங்களை தகர்த்தெறிய நாம் ஒன்றுபட வேண்டும். அதற்காக இனிவரும் காலங்களில் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறும் நேரங்களில் எமது கருத்துக்களையும் எதிர்ப்புக்களையும் சரியான முறையில் வெளியிட்டு, தகுந்த பாடம் புகட்டவேண்டும்.

இன்று நடைபெறும் மீள்குடியமர்வு ஆரம்ப நிகழ்விலும் அரசுக்கு ஒரு சரியான பாடத்தை புகட்டக் காத்திருக்கிறார்கள் வயாவிளான் கிழக்கு மக்கள்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ்த் தேசிய கீதம்: அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமை

தேசிய கீதம், தமிழில் பாடப்படுவது பற்றிய தர்க்கம் மீண்டும் கடந்த சில நாள்களாகத் தலை தூக்கி ஓய்ந்துள்ளது.

நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் சிங்களத் தீவிரவாதக் கருத்து வெளியீடுகளுக்கு பேர்போன சிலரால் அது தமிழில் பாடப்படுவதற்குக் கடும் எதிர்ப்பு கிளப்பப்பட்டது. அதைத் தமிழில் பாட அனுமதிக்கப்போவதில்லை என்ற வகையிலும் உரத்து கூக்குரல் இடப்பட்டுள்ளது.

தேசிய கீதம் தமிழிலும் பாடப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் அரசமைப்பில் அங்கீகரிக்கப்படவில்லை என்ற கருத்தையே பெரும்பாலும் முன்வைத்து வாதாடுகிறார்கள். ஆனால் அந்தக் கருத்தை எதிர்ப்பவர்கள், அது அரசமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று ஆதாரத்தோடு வலியுறுத்துகிறார்கள்.

2010 ஆம் ஆண்டு தேசியகீதத்தை தமிழிலும் பாடுவதை ஒழிப்பதற்கான முயற்சி ஒன்றை அப்போதைய மஹிந்த அரசு மேற்கொண்டதாகச் செய்திகள் வந்திருந்தன. அப்போதும் இந்த விடயம் நாடாளுமன்றிலும் வெளியிலும் கடும்சூட்டுடன் விவாதிக்கப்பட்டது. எனினும் அப்படியான முடிவு எதையும் அப்போதைய அரசு எடுக்கவில்லை என்ற அறிவிப்பு வெளிவந்ததுடன் ஓய்ந்திருந்தது.

உண்மையில் ஆனந்த சமரக்கோன் என்ற சிங்களக் கவிஞரால், சிங்களத்தில் இயற்றப்பட்ட அந்தக் கீதம் முது தமிழ்ப் புலவர் மு.நல்லதம்பியால் தமிழ்ப்படுத்தப்பட்டு அன்றைய அரசின் அங்கீகாரத்துடன், அரசமைப்பிலும் உள்ளீர்க்கப்பட்டது. அதன் பின்னர் தமிழ்ப் பிரதேசங்களிலும், தமிழ் அரச வைபவங்களிலும் நாடு முழுவதும் தமிழ்ப் பாடசாலைகளிலும் அந்தக் கீதம் பாடப்பட்டு வந்துள்ளது.

இலங்கை ஜனநாயகக் குடியரசின் (2010 செப்ரெம்பர் 09 ஆம் திகதி வரையான திருத்தங்களுடன்) நாடாளுமன்ற செயலகத்தால் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ள அரசமைப்பின் மூன்றாம் அட்டவணை உறுப்புரை - 7 இல் தேசிய கீதத்தின் சொற்களும் இசைஅமைப்பும் தமிழில் தரப்பட்டுள்ளன. அத்தியாயம் 1 இல் 7 ஆவது அம்சமாக தேசியகீதம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில், இலங்கைக் குடியரசின் தேசியகீதம் "ஶ்ரீலங்கா தாயே" என்பதாக இருத்தல் வேண்டும். அதன்சொற்களும் இசை அமைப்பும் மூன்றாம் அட்டவணையில் தரப்பட்டவாறாக இருத்தல் வேண்டும் - என்றுள்ளது.

மேற்படி வெளியீட்டில் 203 ஆம் பக்கத்தில் தேசிய கீதத்தின் முழுத்தமிழ் வடிவமும் அதற்குரிய ராகம் மற்றும் சுரவரிசையுடன் தரப்பட்டுள்ளன.

"ஶ்ரீலங்கா தாயே" என்று ஆரம்பிக்கும் பாடல் "நல் லெழில் பொலி சீரணி நலங்கள் யாவும் நிறை வான் மணிலங்கா" என்று வாழ்த்தும் முறையாகச் செல்கின்றது.

இவ்வாறு இலங்கைக் குடியரசின் அரசமைப்பில் உள்ளீர்க்கப்பட்டுள்ளதும், ஏற்கனவே நாட்டின் பல பாகங்களிலும் தமிழ் அரச நிகழ்வுகளில் பாடப்பட்டு வருகிறது. தேசிய கீதத்தின் தமிழ் வடிவத்தை இந்த நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றாக அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தமிழ் மொழியைப் பேசுகிறவர்கள் தமது மொழியில் பாடலாகாது என்று கூறுவதற்கு எவருக்கும் உரிமை இல்லை.

அதனைச் செய்ய முனைபவர்கள் இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் ஒன்றை ஒழிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள் என்பது மட்டுமல்ல, கொடுமையான போர் ஒன்று முடி வுற்று அதன் வடுக்கள் மறையுமுன்பே, மிகுந்த அதி காரத்துடன், அந்த மக்களை மீண்டும் உள ரீதியில் புண்படுத்த முனைகிறார்கள். அதுவே அதன் அர்த்தமுமாகும்.

நீண்டகாலப்போரின் பின்னர், நாட்டின் தேசிய நல்லிணக்கம் ஒன்றுக்கு அனைத்துலக மட்டத்திலும் உள்நாட்டிலும் பல்வேறு முயற்சிகள் இடம்பெற்று வரும் நிலையில் பேரினவாதிகள் மீண்டும் குட்டையைக் குழப்புவதற்கு, நல்லாட்சியை நிலைநாட்ட விரும்பும் அரசு இடம்தக்கூடாது.

மேலும், அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமையை வடக்கு, கிழக்கில் அரசின் எடுபிடிகளாகச் செயற்பட்டு -- அதிகாரத்தில் ஏற்கனவே கிடைத்த உரிமையைத் தட்டிப்பறிக்க உடந்தையாக இருக்க முயல்வது துரோகத்திலும் துரோகமாகும். மேலிடத்தில் உள்ளவர்களின் வெறுப்பைத் தேடிக் கொள்ளாமல் இருந்து பிழைக்க விரும்பும் அதிகாரிகள். தமிழ் மக்களுக்குள்ள சட்டரீதியிலான உரிமைகளை மறுதலிக்க முனையக்கூடாது. காலம் மாறியுள்ளது. அரசியல் சூழ்நிலைகளும் ஓரளவு மாறி இருப்பதையும் அனைவரும் கருத்தில் கொள்வது அவசியம்.



# மஹிந்த மைத்திரி

## அண்ணன் தம்பிகளே

■ சரா

இந்த நாட்டில் வாழும் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் எந்த வாக்குறுதிகளுக்காக இந்த அரசைத் தெரிவு செய்தார்களோ, அவற்றை இந்த அரசு கைவிட்டிருப்பது கவலைக்குரியதாகும். மைத்திரிபால சிறிசேன ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவர் என்பதால் அதே சாதாரண பொதுமக்களின் எண்ணக் கருக்கள் அவர்களது வாழ்வாதாரங்கள், அபிலாஷைகள் பற்றி அவர் நன்கறிந்துள்ளதால் தாம் சுதந்திரமாக வாழ் வதற்கு அவர் வகைசெய்வார் என்றே தமிழ்பேசும் மக்களும் ஏனைய மக்களும் அவரை நம்பினார்கள். இதே நம்பிக் கைதான் முஸ்லிம் சமூகத்தினர் மத்தியிலும் இருந்தது. இந்த நாட் டிலுள்ள இந்த இரு சமூகங்களும் நாட்டின் பெரும்பான்மைச் சமூ கத்தை விட ஏராளமான இழப்புக் களை கடந்த காலத்தில் சந்தித் துள்ளன. அந்த இழப்புக்களின் தாக்கங்கள் அவர்களுக்கு ஏற்படுத்திவிட்டுள்ள வலி, வார்த்தைகளால் கூற முடியாதவை. மருந்திட்டு தைலம் தேய்த்து குணமாகக்கூடிய வலி அல்ல அது. மனம் தான் அதற்கு மருந்து. இன்றைய அரசின் வெற்றிக்கு முக்கிய காரணியாக இருந்துள்ள நாட்டின் தமிழ் பேசும் மக்கள் அதிக எதிர்பார்ப்புடன் உள்ளனர். தமிழ்பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சினைகளை முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுமென்றே இழுத்தடித்து வந்தார். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மனம் வைத்தால்ஏதோ விதத்தில் தீர்த்து வைத்திருக்க முடியும். சகல எதிர்ப்புக்களையும் தூக்கியெறிந்து பேராற்றல் வாய்ந்த நிறைவேற்று அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளை நசுக்கிப் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததைப் போன்று 100 நாள்களுக்குள் பேராற்றல் மிக்க அதே நிறைவேற்று அதிகாரத்தை நாட்டின் நல்லிணக்கத்துக்காகப் பயன்படுத்தி தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான ஒரு தீர்வை அவரால் எட்டச் செய்திருக்க முடியும்.

> மைத்திரி–ரணில் அரசின் மீது நம்பிக்கை கொள்வதைப் புதுப்பித்துக் கொண்டார்கள். இலங்கையின் கடந்த 60ஆண்டு கால அரசியல் வரலாற்றில் நாட்டின் அனைத்துக் குடிமக்களையும் சமமாகக் கருதி நல்லாட்சி எந்த அரசினாலும் நடத்தப்படவில்லை.

தேசிய அரசொன்றின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார் என்ற செய்தியுடன் தமிழ் மக்கள் 60 ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட காத்திருப்பதற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொண்டார்கள். மைத்திரி–ரணில் அரசின் மீது நம்பிக்கை கொள்வதைப் புதுப்பித்துக்கொண்டார்கள். இலங்கையின் கடந்த 60ஆண்டு கால அரசியல் வரலாற்றில் நாட்டின் அனைத்துக் குடிமக்களையும் சமமாகக் கருதிய நல்லாட்சி எந்த அரசினாலும் நடத்தப்படவில்லை. 1956...இற்கு முன்னர் இருந்த இலங்கையின் அனைத்து இனங்களும் அன்னியோன்னியமாக சமாதான சகவாழ்வு வாழ்ந்துவந்தனர். அந்நியர் ஆட்சியிலும் கூட இந்த நாட்டின் சகல இனங்களும் பிக்கல் பிடுங்கல்கள் இன்றி அன்னியோன்னியமாகவே வாழ்ந்துள்ளன. இடையிடையே சில இனப்பிரிவுகள் மத்தியில் மோதல்கள் வெடித்திருந்த வரலாறுகளும் உள்ளன. பொதுவாக இலங்கை மக்கள் அனைவரும் ஒற்றுமையாகவே வாழ்ந்துள்ளனர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் நிறையவே உள்ளன.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னரான காலகட்டத்தில் இனச சமூகங்களைப் பிரித்தாளும் முனைப்புகள் இடம்பெற்றன. அவை அவர்களுக்கு மிகப் பெருத்த சாதகத்தை ஏற்படுத்திக் கொடுத்தன. அந்த வகையில் "வெள்ளி நாக்கு" எனத் தமது பேச்சாற்றலுக்கு விருது பெற்றிருந்த "ஒக்ஸ்போர்ட்"வாரிசான எஸ்.டபிள்.யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஐந்து மாபெரும் மக்கள் சக்திகளை இணைத்து "பஞ்சமஹா பலவேகய' என்ற பெயரின் கீழ் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அமைத்து அதிகாரத்தைக் கைப்பற்றி 1956 இல் தனித் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து பெரும்பான்மை இனத்தவரிடையே தம்மை மாபெரும் தலைவராக்கிக்கொண்டார். அன்றுமுதல் தமிழ்பேசும் மக்களுக்குத் தொட்டது சனீஸ்வரனின் பார்வை. இதுதான் மறுக்க முடியாத உண்மை. இந்த வரிசையில் வந்த இந்த நாட்டின் அரசியல் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. எல்லோரும் அண்ணன் தம்பிகளே. தமிழ்பேசும் மக்கள் இவ்விதம் வரும் அரசுகள் மீது தம்மைத் தேற்றிக்கொண்டு நம்பிக்கை வைத்தாலும்கூட, இறுதியில் உண்மை இதுதான். அதன் ஒரு தோற்றப்பாடுதான் மைத்திரி–ரணில் அரசின் அண்மைக்கால தமிழ் பேசும் மக்கள் மீது நடத்திவரப்படும் ஏமாற்று நாடகங்கள். அவர்களது நாடகங்களை அச்சொட்டாக நிறைவேற்றுவதற்கு இராணுவப்பலம் அவசியம் தேவை. யார் என்ன வாதத்தை முன் வைத்தாலும் உண்மை இதுதான். தமிழனுக்கு இலங்கை அரசுகள் மூலம் விடிவு வராது. மஹிந்த–மைத்திரி இவர்கள் இருவரும் கூட அண்ணன் தம்பிகளே.



# இரகசியம்... பரம இரகசியம்...

● சிங்களமூலம் – மவ்பிம
தமிழில் – வீ.எஸ்.ரீ

பிரதமர் மோடியும் நானும் என்ன பேசிக்கொண்டோம் என்பது குறித்து நானும் மோடியும் மட்டுமே அறிவோம் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மோடியுடனான தமது சந்திப்புக்குறித்து ஊடகவியலாளர்களுக்குத்தெரிவித்திருந்தார். உண்மையில் அந்தச் சந்திப்பின் போது மோடி மஹிந்தவிடம் என்ன கூறியிருப்பார்? மஹிந்த மோடிக்கு என்ன கூறியிருப்பார்? அந்தச் சந்திப்புக் குறித்துப் பலரும் ஆச்சரியப்படுகின்றனர். ஏனெனில் மோடி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட வேளையில், இந்திய 'றோ' உளவு அமைப்பு அமெரிக்க சீ.ஐ.ஏயுடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் தம்மைத் தோற்கடித்ததாக மஹிந்த இந்திய ஊடகமொன்றுக்குத் தெரிவித்திருந்தார். அது குறித்து மோடி எதுவும் அறிந்திருக்கவில்லை எனவும், தேர்தலுக்கு முந்திய ஓராண்டு காலமாக அந்த உளவுப்பிரிவுகள் தன்னைத் தோற்கடிக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டதாகவும் மஹிந்த மேலும் தெரிவித்திருந்தார். மஹிந்தவின் அந்தக் கருத்து வெளிப்பாடு, கொழும்பு அரசியல் அரங்கிலும், தூதரகங்கள் மட்டத்திலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. மஹிந்த – மோடி சந்திப்பின்போது இந்திய அதிகாரிகள் எவரும் உடனிருக்கவில்லை. இதனால் அவ்விருவருக்கும் இடையிலான பேச்சு அவ்விருவர் மட்டத்தில் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இதற்கு முன்னரான இவ்விருவருக்கும் இடையிலான சந்திப்பின் போது, மோடி, ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்திருந்தார். அந்தவேளையில் தம்மைச் சந்தித்த சகல அரசியல்வாதிகளிடமும் மோடி தமக்கு ஆதரவாக இருப்பதாக மஹிந்த பெருமையுடன் கூறிவந்துள்ளார். அதற்குக் காரணம் தமது மகனான நாமல் ராஜபக்ஷ, பிரபல பொலிவூட் ஹிந்தி நடிகர் சல்மால்கான் ஊடாக மோடிக்கு நேரடியாகத் தகவல் தெரிவிக்கும் தொடர்பு வழி குறித்து நம்பிக்கை கொண்டிருந்ததேயாகும். இந்திய அரசுடனான தொடர்பு விடயத்தில் இலங்கை வெளியுறவு அமைச்சகம் மீதோ இலங்கையிலுள்ள இந்தியத்தூதரகம் மீதோ மஹிந்த நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. மாறாக தமது மகன் நாமல் மீதே அது குறித்த நம்பிக்கை வைத்திருந்தார். நாமலும், மோடியைத் தொடர்பு கொள்ளத் தமக்கு வாய்த்திருந்த வாய்ப்பை தமது தந்தையாருக்கு வெளிப்படுத்தி பிரபல்யம் பெற நினைத்திருக்கலாம்.

இந்தியாவுடனான உறவை நெருக்கமாகப் பேண அதற்கு முன்னர் மஹிந்த தமது சகோதரரான பஸில் ராஜபக்ஷ மீதே நம்பிக்கை வைத்திருந்தார். மஹிந்தவின் பின்னர் தலைமைத்துவத்தைப் பெற நாமலுக்கும் பஸிலுக்கும் இடையே போட்டி உருவான பின்னர் இந்திய அரசுடனான தொடர்பைப் பேணும் விடயத்தை நாமல் தமது கைகளில் எடுத்துக்கொண்டார். இந்தியா மஹிந்தவுக்கு ஆதரவாகவே செயற்படுகிறதென தமது மகனே கூறும்போது அதனை மஹிந்த நம்பாதிருக்க காரணமேதும் இல்லை.

தேர்தலில் தம்மைத் தோற்கடிக்க 'றோ' அமைப்பு செயற்பட்டதாகக் குற்றம்சாட்டிய அதேவேளை மோடிக்கு அது குறித்து எதுவும் தெரிந்திருக்கவில்லை என மோடியைக் குற்றச்சாட்டிலிருந்து மஹிந்த தவிர்த்தமை இதனால் தானாக இருக்கக்கூடும். மோடியுடனான சந்திப்பின்போது, மைத்திரிபால அரசால் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் ஏற்படுத்தப்படும் இடையூறுகள் – அவதூறுகள் குறித்தும் அவற்றை நிறுத்திக்கொள்ளுமாறு மைத்திரி அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறும் மஹிந்த, மோடியிடம் வேண்டுகோள் விடுத்தாரா என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை. ஏனெனில் அண்மைக் காலமாக மஹிந்த, மைத்திரி அரசு தமது தரப்புக்கு இடையூறு ஏற்படுத்துவதாக ஓலமிட்டு வருகின்றார்.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ கூட, 1980ஆம்ஆண்டில்தமதுபிராஜா உரிமையை இரத்துச்செய்ய ஜே.ஆர். தலைமையிலான அரசு தயாரான போது அவ்வேளைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியிடம் இதுபோன்றதொரு வேண்டுகோளை விடுத்திருந்தார். இந்திரா காந்தியும் சிறிமாவோவின் பிரஜா உரிமையைப் பறிக்க வேண்டாமெனஜே.ஆருக்குஅழுத்தம்கொடுத்த போதிலும் ஜே.ஆர். இந்திராவின் அந்தக் கோரிக்கையைக் கணக்கில் எடுத்தாரில்லை. தமக்கும் இந்திரா காந்திக்கும் இடையே நிலவிய தனிப்பட்ட நெருக்கமான உறவு காரணமாகவே சிறிமாவோ இந்திரா காந்தியிடம் அத்தகைய வேண்டுகோளை விடுத்தார். ஆனால் தற்போது மஹிந்தவுக்கும் மோடிக்குமிடையே அத்தகைய நெருக்கமான உறவேதும் நிலவவில்லை.

அதிகாரிகளின்சமூகமின்றிமஹிந்த – மோடி இருவர் மட்டுமே சந்தித்துப் பேசிக்கொண்டவேளை, மஹிந்த இந்திய 'றோ' அமைப்புக்குறித்து மோடியிடம் குற்றஞ்சாட்டியதாகச் செய்தி உலவியது. இதுபோன்றதொரு முட்டாள் தனமான செயற்பாட்டையே முன்பொரு சமயம் முன்னாள் ஜனாதிபதி பிரேம தாஸவும் மேற்கொண்டார். ராஜீவ்காந்தி பிரதமர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு வி.பி.சிங் இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்ற வேளையில் அவ்வேளைய ஜனாதிபதி பிரேம தாஸ, வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்ணவை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்.

> இந்திய உளவுச் சேயையான 'றோ' அமைப்பின் செயற்பாடுகள் குறித்து பிரதமர் மோடி எதுவும் அறிந்திருக்கவில்லை என்ற மஹிந்தவின் கருத்தை ஏற்கும் அளவுக்கு மோடி ஒரு முட்டாளல்லர்.

அந்த வேளையில் வடக்கு,கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப்படையினர் பொது மக்களுக்குச் செய்யும் அநியாயங்கள் குறித்த சாட்சியங்களாக ஒளிப்படங்களையும் எடுத்துச் சென்ற ரஞ்சன் விஜேயரட்ண பிரதமர் வி.பி. சிங்கைச் சந்தித்து இந்திய அமைதிப்படையினர் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மீது பலாத்காரம் புரியும் ஒளிப்படங்களையும் தமது குற்றச்சாட்டுக்கு ஆதாரமாகச் சமர்ப்பித்தார். அண்டை நாடான இலங்கையின் வெளியுறவு அமைச்சரொரு வர், தமது நாட்டு இராணுவத்தினரின் செயற்பாடுகள் குறித்து தமக்கு முன்பாகவே குற்றம் சுமத்துவதைப்பொறுக்கமுடியாத பிரதமர் வி.பி.சிங் கோபாவேசமுற்றார். தமது கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு தமது இராணுவத்தினர் மீது தமக்குப்பூரண விசுவாசம் உண்டெனக் கூறி விட்டு வி.பி. சிங் அங்கிருந்து வெளியேறியதன் மூலம் ரஞ்சன் விஜேயரத்னவை அவமதித்தார்.

இந்திய உளவுச் சேயையான 'றோ' அமைப்பின் செயற்பாடுகள் குறித்து பிரதமர் மோடி எதுவும் அறிந்திருக்கவில்லை என்ற மஹிந்தவின் கருத்தை ஏற்கும் அளவுக்கு மோடி ஒரு முட்டாளல்லர். இந்திய உளவுச் சேவையான 'றோ' அமைப்பு இந்தியப் பிரதமர் மற்றும் அவரது அரசின் விருப்பத்துக்கேற்ற விதத்திலேயே செயற்பட்டு வருகிறது. 'டி – டே' என்ற பொலிவூட் திரைப்படம் மேற்குறித்த கருத்தை உறுதி செய்யும் வகையில் அமைந்ததொன்று.

'டி – டே' திரைப்படத்தில், பாகிஸ்தானில் ஒளிந்து வாழும், இந்தியாவின் பம்பாய் குண்டு வீச்சுச் சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரியை கைது செய்து இந்தியாவுக்குக் கடத்திவரத் திட்டமொன்றை தயாரிக்கிறார் இந்திய உளவுச் சேவை அதிகாரியொருவர். அந்தத் திட்டத்தை பாகிஸ்தானில் வைத்து நிறைவேற்ற முயல்கையில் அது தோல்வியில் முடியுமானால் பாகிஸ்தான் அரசு, சர்வதேச ரீதியில் அதனைப் பெரிதுபடுத்தி இந்தியாவை அவமரியாதைக்கு உள்ளாக்கிவிடும் என்ற அச்சம் காரணமாக அந்த உளவுச்சேவையின் ஏனைய அதிகாரிகள் அந்தத்திட்டத்தை ஏற்க மறுக்கின்றனர். கடைசியில் இந்தியப் பிரதமரது விசேட பிரதிநிதி ஒருவருடன் அந்த உளவுச்சேவை அதிகாரிகள் கூடி குறித்த திட்டம் குறித்து விவாதிக்கின்றனர். திட்டத்தைத் தயாரித்து குறித்த அதிகாரியை விட ஏனைய அதிகாரிகள் அனைவரும் அதனை நிராகரித்ததால் திட்டத்தைத் தயாரித்த அந்த அதிகாரி குழப்பமடைகிறார்.

பிரதமரது விசேட பிரதிநிதி, அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பான்மையினரின் கருத்தையே ஏற்கிறார். கூட்ட முடிவில் பிரதமரது அந்த விசேட பிரதிநிதி அமைதியாக அந்தத் திட்டத்தைத் தயாரித்து முன்வைத்த உளவுச் சேவை அதிகாரியைத் தமது காரின் அருகில் அழைத்துச் சென்று இரகசியமாக வெளிநாடுகளில் வைத்து எமது இரகசியத் திட்டங்களைச் செயற்படுத்தும் நாடல்ல எமது நாடு. உண்மையில் உம்மால் உமது திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற இயலக்கூடும். அது வெற்றியளிக்காவிட்டால் அது எமது நாட்டின் திட்டமென எமது அரசு ஒத்துக் கொள்ள முன்வராது. அது தனிப்பட்ட ஒருவரால் – உம்மால் மேற்கொள்ளப்பட்டதொன்றெனவே அரசு உலகுக்குத் தெரிவிக்கும். அதனால் நீர்தான் உமது தொழிலை, எதிர்காலத்தை இழக்கநேரிடும் என யதார்த்தத்தை உணர வைப்பதாக அந்தத் திரைப்படக்காட்சிகள் பின்னப்பட்டுள்ளன.

இந்திய நாட்டின் பிரதமருக்குத் தெரியாது 'றோ' அமைப்பின் செயற்பாடுகள் இடம்பெற வாய்ப்பில்லை என்பது இதன்மூலம் தெளிவாகிறதல்லவா? மறுபுறம் 2017 ஆம் ஆண்டில் இடம்பெற வேண்டியிருந்த ஜனாதிபதித் தேர்தலை 2015 ஆம் ஆண்டிலேயே நடத்தி முடிப்பது என முடிவு செய்தது இந்திய 'றோ' அமைப்பல்ல – மஹிந்தவே.

மைத்திரிபாலவுக்கு தமது அரசில் பிரதமர் பதவியை வழங்குவதில்லை எனத்தீர்மானித்தது இந்திய 'றோ' அமைப்பல்ல – மஹிந்தவே.

மோடி இலங்கைக்குவந்து சென்ற பின்னர், தமக்கு முஸ்லிம்களது ஆதரவு வாக்குகள் கிட்டாமல் செய்வதற்காகபொதுபலசேனாஅமைப்பை உருவாக்கியது நோர்வே அரசும் மேற்குலக உளவுச் சேவைகளுமே என மஹிந்த தெரிவித்திருந்தார். பொதுபல சேனா அமைப்பு முஸ்லிம்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டபோது ஹக்கீம், றிஷாத் பதியுதீன் தரப்பினர்கள் பொதுபல சேனா உறுப்பினர்களைக் கைது செய்யுமாறு மஹிந்தவைக் கோரினர். அவ்விதம் மஹிந்த செயற்பட்டிருந்தால் முஸ்லிம் தரப்பினர்கள் மஹிந்தவை ஒருபோதும் கைவிட்டிருக்க மாட்டார்கள். அவ்விதம் பொதுபலசேன உறுப்பினர்களைக் கைது செய்வதில்லையெனத் தீர்மானித்தது இந்திய 'றோ' உளவு அமைப்பல்ல – மஹிந்தவே. அந்த வகையில் நோக்கும்போது மஹிந்தவின் தோல்விக்கு மஹிந்தவே காரணமாகியுள்ளார். மோடி, மஹிந்தவை 15 நிமிடங்கள் வரையான குறுகிய நேரமே சந்தித்துப் பேசியுள்ளார்.

நீங்களே உங்களை நாசப்படுத்திக் கொண்டுவிட்டு, எனது இந்திய 'றோ' உளவு அமைப்பின் மீது குற்றஞ்சாட்டவேண்டாம் என்று கூறி மோடி மஹிந்தவுடனான அந்தச் சந்திப்பின் இறுதியில் மஹிந்தவிடம் கூறியிருப்பாரோ என்பது குறித்து எதுவும் கூற இயலாதுள்ளது.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20–30 | 40 | 30 | 60 | 20 | 40–60 | 30–40 | 20–40 |
| கத்தரி | 60 | 60 | 70–90 | 70 | 50–70 | 70 | 80–100 | 60–80 |
| கரட் | 100–120 | 90–120 | 80–100 | 120–140 | 80–100 | 120 | 100–120 | 70 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 60 | 30 | – | 40–50 | 30 |
| பயிற்றை | 80 | 80 | 70–90 | 100 | – | 80–100 | 80–100 | 50 |
| பாகல் | 100–130 | 90–120 | 120 | 140 | 80–100 | 80 | 100–110 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 50 | 80 | 30–40 | – | 60–80 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 80–100 | 80–100 | 60–100 | 80 | 90–120 | 90 | 60 |
| சி.வெங்காயம் | 50–80 | 60–100 | 50–70 | 70–80 | 50–80 | 70 | 80–100 | 50 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 | 30–50 | 80 | 80–100 | 50 |
| தக்காளி | 30–50 | 40 | 30 | 50 | 30–50 | 80 | 80–100 | 30–50 |
| வாழைக்காய் | 60 | 70 | 50 | 80 | 60–80 | 60 | 80–100 | 30 |
| கீரை | 25 | 50 | 30 | 10 | 25 | 20 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 25 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 50–70 | 60–90 | 40–70 | 60 | 40–60 | 80–110 | 80 | 50–80 |
| புடோல் | 40–60 | 50 | 40 | 60 | 30–40 | 60 | 60–90 | 30–50 |
| கோவா | 40–50 | 45 | 30 | 60 | 30–40 | 50 | 60–80 | 40 |
| வெண்டி | 60 | 50 | 30–40 | 60–90 | 40–60 | 40 | 60–80 | 50 |
| போஞ்சி | 100 | 110 | 120 | 110–150 | 80–100 | 140–160 | 100–140 | 70 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 140–180 | 120–140 | 160–200 | 120–140 | 110–130 |
| தேங்காய் | 60–70 | 50 | 40–60 | 40–60 | 40–60 | 40–60 | 35–60 | 30–50 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 90 | 90 | 100 | 100 | 70 |
| தேசிக்காய் | 70 | 60 | 100 | 60 | 80 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20–40 | 20 | 10 | 10 | 30 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120–150 | 140 | 140 | 140 | 130 | 90–110 |
| இராசவள்ளி | 100–140 | 100 | 100 | 110–130 | 80–100 | – | 90–130 | 110 |
| பனங்கிழங்கு | 04 | 02 | 04 | 04 | 03 | 05 | 05 | 02 |

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 1 | 9 | | | | | |
| 8 | | 4 | 2 | | 3 | | | |
| 9 | | | | 6 | 5 | | 4 | |
| | | 9 | | 8 | | | | 4 |
| 4 | | | 6 | 9 | 7 | | | 3 |
| 6 | | | | 1 | | 9 | | |
| | 3 | | 8 | 5 | | | | 9 |
| | | | 7 | | 9 | 8 | | 6 |
| | | | | | 6 | 1 | 2 | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 3 | 1 | 2 | 8 | 4 | 9 | 5 |
| 5 | 4 | 9 | 6 | 3 | 7 | 2 | 1 | 8 |
| 1 | 8 | 2 | 4 | 5 | 9 | 3 | 7 | 6 |
| 7 | 9 | 1 | 8 | 4 | 3 | 6 | 5 | 2 |
| 8 | 3 | 6 | 5 | 9 | 2 | 1 | 4 | 7 |
| 4 | 2 | 5 | 7 | 1 | 6 | 8 | 3 | 9 |
| 9 | 1 | 4 | 2 | 6 | 5 | 7 | 8 | 3 |
| 3 | 6 | 7 | 9 | 8 | 4 | 5 | 2 | 1 |
| 2 | 5 | 8 | 3 | 7 | 1 | 9 | 6 | 4 |

## நாளை

**பங்குனி-10**
**செவ்வாய்க்கிழமை**
**24.03.2015**

திதி: சதுர்த்தி
மு.ப.08.21 வரை
நட்சத்திரம்: பரணி
மு.ப.07.32 வரை
சுபநேரம்:
10.46–12.16 வரை
இராகுகாலம்:
03.16–04.46 வரை
கார்த்திகை விரதம்


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படா மல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 750 | 600 | 800 | 700 | 700 | 600 |
| நண்டு | 300 | 300 | 300 | 300 | 200 | 400 |
| கணவாய் | 600 | 450 | 600 | 500 | 500 | – |
| பாரை | 450 | 400 | 500 | 500 | 350 | 370 |
| சுறா | 550 | 500 | 600 | 600 | 600 | – |
| சீலா | 350 | 400 | 300 | 400 | 300 | 320 |
| விளை | 400 | 400 | 400 | 500 | 400 | 350 |
| முரல் | 350 | 300 | 350 | 300 | 250 | 300 |
| கும்பிளா | 400 | 250 | 300 | 450 | 350 | 300 |
| கிழாக்கன் | 400 | 500 | 400 | 400 | – | 300 |
| ஓரா | 350 | 250 | 300 | 350 | 300 | – |
| திரளி | 300 | 250 | 200 | 250 | 200 | – |
| நகரை | 150 | 200 | 200 | 300 | – | – |
| சூடை | 150 | 150 | 150 | 100 | 100 | 60 |
| ஒட்டி | 200 | 150 | 250 | 250 | – | – |
| திருக்கை | 130 | 250 | 200 | 250 | 200 | 240 |
| பாலை | 250 | 250 | 300 | 500 | 200 | – |
| வாழை | 150 | 100 | 200 | 300 | 100 | 200 |
| கொய் | 80 | 100 | 60 | 100 | 200 | – |
| மதனம் | 150 | 150 | 150 | 200 | – | 200 |

# அதிக நேரம் அமர்ந்திருந்தால் நீரிழிவு, இருதய நோய் தாக்கும்

அதிக நேரம் அமர்ந்திருப்பவர் களுக்கு இருதய நோய், நீரிழிவு நோய், புற்று நோய் அதிகம் தாக் கம் அபாயம் இருப்பது ஆய்வின் போது தெரிய வந்துள்ளது. சராசரியாக ஒரு மனிதனின் பாதிக்கும் மேற்பட்ட பகல் நேரம் தொலைக்காட்சி முன்போ, கணினி முன்போ உட்கார்ந்த வாறே கழிகிறது. அவர்கள் தின மும் உடற்பயிற்சி செய்தாலும் கூட இருதய நோய், நீரிழிவு, புற்று நோய் தாக்கும் அபாயத் தில் இருந்து தப்பிக்க முடியாது. உடற்பயிற்சி செய்யாதவர் களை யும், மிதமான உடற்பயிற்சி செய்பவர்களையும் இந்த நோய் அதிகம் தாக்குகிறது. அதிக அளவில் உடற்பயிற்சி செய்ப வர்களை இந்த நோய்கள் குறை வாகவே தாக்குகின்றன. எனவே நீண்ட நேரம் அமர்ந்திருக்கும் பழக்கத்தை தவிர்ப்பது நல்லது.



## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



# அன்புதான் வாழ்க்கை

நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான்.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் எமக்குத் தேவையில்லை. வளர்ச்சி அடைவதும் அன்பு செலுத்து வதுமே வாழ்க்கை. அதுவே வாழ்க்கை நியதி.

மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும், பிரம் மச்சரியமும், வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப் படுகின்றன. கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விஷயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணம்ஆகாமல் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கும்.

அனைத்து தேவைகளையும், துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது.

## தவக்காலச் சிந்தனை

# பிற மத சகோதரரை மதித்து வாழ்வோம்

இயேசு உலகினில் அனைவருக்கும் சமாதானம் உண்டாகுக என்று கூறிச்சென்றார். நாம் அனை வரிடமும் சமாதானத்துடன் வாழப்பழகிக் கொள் வோம். நாம் வாழும் சூழலில் இந்து, இஸ்லாம், பௌத்தம் என மூன்று மதங்களைச் சார்ந்த சகோதரர்களும் வாழ்கின்றனர். அவர்களுடன் நாம் எவ்வகையான உறவைப்பேணி வருகின் றோம்? எம்மிடையே உள்ள சிலபேதகர்களின் தவறான பேதகங்களால் பிறமத சகோதரர்கள் குழப்பத்துக்குள்ளாகின்றார்கள். ஆண்டவர் இயேசு நற்செய்தியைப் போதியுங்கள் என்று விவிலியம் கூறுகின்றது. இவர்களோ பிறமத வழிபாடுகளைக் கேலிசெய்கின்றார்கள். மதங் களின் பெயர்களை வைத்துத் தர்க்கம் செய் கின்றனர். சிலர் கைகலப்பிலும் ஈடுபடுகின்றனர். மறைமுகமான கட்டாயமத அழைத்தல்களும் பணத்தைக் காட்டி மதத்தை விலைபேசும் கீழ்த் தரமான செயற்பாடுகளும் ஆங்காங்கே இருக் கத்தான் செய்கின்றன. எல்லா மதங்களும் அன் பையே போதிக்கின்றன. இது எமக்குப் புரியாத தில்லை அப்படி இருந்தும் இவ்வாறான செயல் களில் நாம் ஏன் ஈடுபடுகின்றோம் என்று இந்தச் செயல்களைச் செய்பவர்கள் உணரவேண்டும். நிறத்தாலும், குணத்தாலும், இனத்தாலும், மொழி யாலும் நாம் வேறுபட்டிருந்தாலும் நாம் அனை வரும் ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகள். புனிதமான தவக்காலத்தில் பிறமத சகோதரருடன் எமது அன்பை வலுப்படுத்திக்கொள்வோம்.

அவர்களைப் புண்படுத்தும் வார்த்தைகளை விட்டுவிடுவோம், அனைத்து மத மக்களுடன் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் இணைந்து இயேசுவின் பின்னால் வழிநடப்போம்.

ந.மரியநாயகம்
கொழும்புத்துறை.

# கிழமைகள் பலன்கள்

பிறந்த திகதி, பிறந்த நட்சத்திரம் போன்று ஒருவர் பிறப்பெடுக்கும் கிழமையும் அதிமுக்கியமானது. கிழமைகள், ஒருவரது பண்பு நலன்களுக்கும் அதன் விளைவான அவர்களுடைய செயற் பாடுகளின் பலாபலன்களுக்கும் காரணமாக அமைவது உண்டு.
எண்கணித அடிப்படையில் கிழமைகள், குறிப்பிட்ட கிழமையில் பிறந்த அன்பர்களது குணநலன்கள், அவர்களுக்கான பலாபலன்கள், அவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய பரிகார வழிபாடுகள் குறித்து விளக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி நாமும் அறிவோம்.

**புதன்கிழமை**
இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் நல்ல அறிவாளிகளாகத் திகழ்வார்கள். இயந்திரம், வைத்தியம், சோதிடம், துப்பறியும் கலை, ஓவியம் ஆகியவற்றில் திறமைசாலிகளாக விளங்குவர். இரகசியம் காப்பதில் வல்லவர். மற்றவர்களின் மனதில் உள்ளதைத் துல்லியமாக அறிந்து அதற்கேற்ப செயற்படுவார்கள். பல துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள். மருத்துவர், நீதிபதி, பொறியியலாளர், எழுத்தாளர் என்று உயர்ந்த நிலையில் வாழ்வார்கள்.

**நன்மை கிடைக்கும் திகதிகள்**
5, 14, 23 ஆகிய திகதிகளில் புதிய முயற்சிகளை ஆரம்பித்தால் வெற்றி கிடைக்கும்.

**ஏற்றமிகு வயது காலங்கள்**
23, 32, 41, 50, 59, 68 ஆகிய வயதுகளில் நல்ல முன்னேற்றம் உண்டு.

**வளம் தரும் கிழமை வியாழன் பரிகார வழிபாடு**
புதன்கிழமை அதிகாலையில் எழுந்து நீராடி துளசி மற்றும் மருக்கொழுந்தால் ஸ்ரீமகாவிஷ்ணுவை வழிபடலாம். மேலும் விஷ்ணு சகஸ்ரநாமம், கிருஷ்ணாஷ்டகம் பாராயணம் செய்வதும் சிறப்பு. பாசிப் பயறு சுண்டல் செய்து நைவேத்தியம் செய்தல் நலம்.

**வியாழக்கிழமை**
வியாழனன்று பிறந்தவர்கள் நீதி– தர்மத்துக்கு பக்கபலமாக விளங்குவர். குறுக்கு வழியில் செல்பவரையும் திருத்தி நல்வழிப் படுத்துவதற்கு பாடுபடுவர். உற்றார்– உறவுகளுக்கு உதவிபுரிவர். எந்தத் துறையில் ஈடுபட்டாலும் முன்னேற்றம் அடைவர்.

**நன்மை கிடைக்கும் தினங்கள்**
3, 12, 21, 30 ஆகிய திகதிளில் புதிய முயற்சிகளை ஆரம்பித்தால் ஏற்றம் உண்டாகும்.

**ஏற்றம் தரும் வயது காலங்கள்**
21, 30, 48, 57, 66, 75, 84 ஆகிய வயதுகளில் வாழ்க்கையில் முன்னேற்றம் (வீடு, மனை, வண்டி, வாகனம்) வசதி ஏற்படும்.

**வளம் தரும் கிழமை வெள்ளி பரிகார வழிபாடு**
வியாழக்கிழமைகளில் சூரிய உதயத்திற்கு முன் ஸ்ரீதட்சிணா மூர்த்தி அஷ்டகத்தைப் பாராயணம் செய்து வழிபடுவது சிறப்பு. தேவகுரு பிரகஸ்பதியை வழிபடுவதால் வளம் பெருகும். மஞ்சள் பூக்களால் அர்ச்சனை செய்ய வேண்டும். கொண்டைக் கடலை சுண்டல் செய்து நைவேத்தியம் செய்தல் நலம். கருட தரிசனம் செய்வது மிக நன்று.

**வெள்ளிக்கிழமை**
இந்தக் கிழமையில் பிறந்தவர்கள், பிறக்கும்போதே 'சமர்த்துப் பிள்ளை' என்று பெயரெடுப்பார்கள். பேச்சாலேயே மற்றவர்களை தன் வயப்படுத்துவார். தமது பேச்சைக் கேட்காதவர்களைப் புறக்கணித்து விடுவார்கள். எந்த வேலையையும் சிரமம் இல்லாமல் மற்றவர்களின் துணையுடன் பூர்த்தி செய்வார்கள். கணவன் அல்லது மனைவியின் அளவற்ற அன்பிலும் பாசத்திலும் மூழ்கித் திளைப்பர்.

**நன்மை கிடைக்கும் திகதிகள்**
4, 8, 13, 17, 26, 31 ஆகிய திகதிகள் நலம் பயக்கும்.

**ஏற்றம் தரும் வயது காலங்கள்**
22, 26, 31, 35, 44, 53, 62, 66, 71 வயதுகளில் குடும்பம் பல நன்மைகளைச் சந்திக்கும்.

**வளம் தரும் கிழமை திங்கள் பரிகார வழிபாடு**
வெள்ளிக்கிழமை அதிகாலையில் எழுந்து நீராடி மல்லிகைப் பூக்களால் ஸ்ரீராஜராஜேஸ்வர அஷ்டகம், ஸ்ரீலலிதாதிரிசதி ஆகியவற்றை பாராயணம் செய்வது சிறப்பு. பால், பழம், கற்கண்டு, தேன் ஆகிய வற்றை நைவேத்தியம் செய்து வழிபடு வது விசேஷம்.

**சனிக்கிழமை**
இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் பொறுமைசாலிகள். வேலை என்று வந்து விட்டால் அதை முடித்துவிட்டே மற்ற வேலைகளைத் துவங்குவர். சான்றோரிடமும் ஆன்றோரிடமும் மிகுந்த பக்தி உள்ளவர். எப்போதும் தான் உண்டு தன்வேலை உண்டு என நினைப்பவர்

**நன்மை கிடைக்கும் தினங்கள்**
8, 17, 26 ஆகிய திகதிகளில் சிறப்பான நன்மைகள் பல பெற்றிடுவர்.

**ஏற்றம் தரும் வயது காலங்கள்**
22, 26, 31, 35, 41, 50, 53, 58, 62, 67 ஆகிய வயதுகளில் வாழ்வில் இன்பம் சேரும்.

**வளம் தரும் கிழமை வியாழன் பரிகார வழிபாடு**
சனிக்கிழமை காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து, நல்லெண்ணெய் தேய்த்துக் குளித்து, நீலாம்பரம், நீல சங்குபூ, வில்வம் சாற்றி சிவனாரை வழிபடுவது சிறப்பு. சிவாலயங்களில் நல்லெண்ணெய் ஊற்றி விளக்கேற்றி வழிபட்டு வந்தால் தோஷங்கள் நீங்கும். வீட்டில் பூஜைக்கு பிறகு காகத்துக்கு எள் கலந்த நெய்சாதம் இடவேண்டும். கருட தரிசனமும் நலம்பயக்கும்.

# தொலைபேசி விபரீதம் பெண்கள் ஜாக்கிரதை

நாணயத்துக்கு இருபக்கம் இருப்பது போல் தொழில்நுட்பத்துக்கும் உண்டு. அதற்கு உதாரணம் தொலைபேசி. கூலித் தொழிலாளி முதல் தொழிலதிபர் வரை இன்று அனைவரின் கைகளிலும் தவழ்கிறது தொலைபேசி. உலகின் எந்த மூலையில் இருந்தாலும் மகள் சாப்பிட்டாளா? தாத்தாவுக்கு உடம்பு எப்படி இருக்கு? என்று பேச, ஆபத்தான நிலையில் இருப்பவர்களுக்கு சிறிதும் தாமதிக்காமல் உதவிட என்று அனைத்து தரப்பினருக்கும் ஆபத்பாந்தவனாக இருக்கிறது. ஆனாலும் இந்த செல்போன்கள் எதிர்விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. இதில் பாதிக்கப்படுபவர்கள் குறிப்பாகப் பெண்கள் தான். எஸ்.எம்.எஸ், அறிவியலின் அற்புத தொழில்நுட்பம் என்பதை யாராலும் மறுக்கமுடியாது. ஆனால், சில விஷமிகள் தோழிகளாக பழகும் பெண்களை ஆபாச படம் பிடிக்கவும், பயமுறுத்தவும் இதைப் பயன்படுத்துகின்றனர். இதனால், பல பெண்களின் வாழ்க்கை சீரழிவது தொழில் நுட்பக் கொடுமை. ஆண்களை விட இளம் பெண்கள் அதிகம் தொலைபேசி வசம் அடிமையாகிக் கிடக்கின்றனர் என்கிறது ஒரு ஆய்வு.
ஓயாத பேச்சு, எந்நேரமும் மெசேஜ் எனத் திரியும் பெண்கள் அதனாலே பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். 'ஹாய்' என்று ஒரு சின்னஞ்சிறு குறுஞ் செய்தியில் ஆரம்பிக்கும் ஆண் பெண் தொடர்பு தற்கொலை, கொலை போன்ற அசாதாரண சம்பவங்களில் முடி வதில் பெரும்பங்கு செல்லுக்குத் தான். செல்லில் இருக்கும் மிஸ்டு காலை பார்த்து பேச ஆரம்பித்து பிறகு அந்த அறிமுகம் இல்லாத நபரிடமிருந்து தொடர் குறுஞ் செய் திகள், போன் கோல்கள் என வம்பில் மாட்டிக் கொள்கிறார்கள் பல பெண்கள். பெற்றோர்கள் கவனமின்மையும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். அதீத செல்போன் பழக்கத்தினால் தூக்கமின்மை, மன அழுத்தம் போன்ற பிரச்சினைகளுக்கு பெண்கள் ஆளாகின்றனர். காதலன் தானே, பாய் பிரண்ட் தானே என்று அலட்சியப் பேச்சும் வேண்டாம். உங்களுக்குள் பிரிவு ஏற்படும் போது அது உங்களை படுகுழியில் தள்ளி விடும். பெண்களுக்கு பெரும் பாதிப்புகளை உண்டாக்கும் இத்தகைய பேச்சுகளை பெண்கள் தவிர்க்க வேண்டும். அறிமுகம் இல்லாத நபர்களிடம் உங்கள் செல்போன் எண்ணை பகிர்ந்துகொள்வதை தவிர்த்துவிடுங்கள். தேவையற்ற நபர்களிடம் தேவையற்ற பேச்சுக்கள் அறவே வேண்டாம். அறிமுகம் இல்லாத, அவ்வளவாக பழக்கமில்லாத நபர்களிடம் சொந்த தகவல்களைப் பகிர்வது, வீட்டுக்குள் அனுமதிப்பது போன்ற செயல்களையும் பெண்கள் கட்டாயம் தவிர்க்க வேண்டும். விக்கிறவனுக்கு ஒரு கண் போதும், வாங்குகிறவனுக்குத் தான் ஆயிரம் கண்கள் வேண்டும் என்றொரு பழமொழி தமிழில் உண்டு. அது போல ஆண்களை விட பெண் கள் எப்போதும் ஒரு படி மேலே ஜாக்கிரதை உணர்வோடு செயல் பட்டால் இது போன்ற சுய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படும் நிலைமையிருந்தும், சமூக நெருக் கடிகளில் இருந்தும், பல இழப்புகளிலிருந்தும் தங்களை காப் பாற்றிக் கொள்ளமுடியும்.






# மனைவிக்கு மதிப்பளியுங்கள்



பெண்களைப்பற்றி சரியாகப் புரிந்து கொள்ளாமலேயே பெரும்பாலான ஆண்கள் 'பெண்கள் ஒரு புதிர், அகம்பாவம் பிடித்தவர்கள்...' என, அவர்களை ஒதுக்கித் தள்ளுகின்றனர். ஆனால் பெண்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல, அவர்கள் புறக்கணிக்கப்படுவதாலேயே வெறுப்படைகின்றனர். பெண்கள் உற்சாகமாக இருந்தாலே குடும்பம் உற்சாகமாக இருக்கும். பெரும்பாலான பெண்களின் மனதை வாட்டும் விடயம் குண்டாக இருப்பது. ஏனெனில; உடலில் சதை போடுவது பெண்களுக்கு பிடிக்கவே பிடிக்காது. கொழுப்பு, சதையை குறைக்க ஒரு மருந்துகிடைத்தால் போதும். கணவர் அதை வாங்கிக் கொடுத்தால் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.
மனைவி என்பவள் வேலைக்காரி அல்ல, அதேபோல் சம்பாதித்து கொடுக்கும் மிசினும் அல்ல. அவளும் உணர்வுபூர்வமானவள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். சரிசமமாக நடத்த வேண்டும் என்பதையே ஒரு பெண் எதிர்பார்ப்பாள். அம்மா போல யாராலும் சமைக்க முடியாது தான். ஆனால் மனைவியின் சமையலை ஆகா, ஓகோ என்று பாராட்டுங்கள். அவர்கள் உச்சிக் குளிர்ந்து போவார்கள்.
விடுமுறை நாள்களில் விரும்பிய படி ஓய்வு எடுக்க அனுமதிக்க வேண்டும். அன்றும் விசேடமாக சமையல் செய்ய வேண்டும் என வற்புறுத்தக் கூடாது. சமையல் அறையில் மனைவிக்கு கணவரும் உதவ வேண்டும். எல்லாவற்றையும் அவசர, அவசரமாக செய்ய வேண்டும் எனத் தொந்தரவு செய்யக் கூடாது. குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்றால் மனைவியைத் திட்டக் கூடாது. குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்பு இருவருக்கும் உண்டு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மனைவி உடுத்தும் உடைகளைப் பார்த்து இந்த உடை உனக்கு நன்றாக இருக்கிறது...' எனப் பாராட்ட வேண்டும்.
வருமானம் முழுவதும் கணவனிடமே இருந்தால், மனைவியை மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள் என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும். தினமும் ஒருமுறையாவது இரண்டு பேரும் சேர்ந்து விவாதித்து, நல்ல முடிவை எடுக்க வேண்டும்.
நன்றாக, சிரித்த முகத்துடன் குழந்தைகள் படுக்கைக்குச் செல்ல வேண்டும். குழந்தைகளை அடிமை போல் நடத்தக் கூடாது. இதில் கணவர்களின் பங்கு முக்கியம். படுக்கை அறையில் போர் அடிக்கும் வகையில் கணவர் நடந்து கொள்ளக் கூடாது.
– பெண்கள் விரும்புவது இவ்வளவு தான். இவற்றை கணவர் நிறைவேற்றினால் போதும். அந்தக் குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம் தான்.



## தெரிந்து கொள்வோம்


கங்காருக்களால் பின்னோக்கி நடக்க முடியாது.

எலித்தொல்லை அமெரிக்காவில் பெருந்தொல்லையாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 24 ஆயிரம் பேர் அங்கே எலியால் கடிபடுகிறார்கள்.

பெண் ஒட்டகச்சிவிங்கி குட்டியை ஈன்றெடுக்கும் போது 6 அடி கீழ் நோக்கி விழுகின்றன. ஆனாலும் குட்டிகளுக்கு எந்தக் காயமும் ஏற்படுவதில்லை.

சுறாமீன்கள் எதிரே வரும் மீன்களை அறிந்து வேட்டையாடுவது எப்படி என்பது தெரியுமா?... வெகு தூரத்தில் இருக்கும் மீனின் இதயத்துடிப்பைக் கூட சுறா மீன்களால் கேட்க முடியும். இதனால் சுறாமீனிடமிருந்து எந்த மீனாலும் தப்பிக்க முடியாமல் போகிறது.

## கிணற்றைத்தானே விற்றேன்!!



ஒருவன் தனது கிணற்றை ஒரு விவசாயிக்கு விற்றான். வாங்கிய விவசாயி அடுத்த நாள் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க ஆவலுடன் கிணற்றுக்கு வந்தான். அப்போது விற்றவன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

விவசாயியைத் தண்ணீர் எடுக்க விடாமல் தடுத்தான். விவசாயிக்குக் கோபம் வந்தது. 'எனக்குக் கிணற்றை விற்று விட்டு அதிலிருந்து தண்ணீர் எடுக்க விடாமல் செய்கிறாயே?' என்று விற்றவனைக் கோபத்துடன் கேட்டான். விற்றவன் 'ஐயா! உமக்கு நான் கிணற்றை மட்டும்தான் விற்றேன். அதிலிருக்கும் தண்ணீரை அல்லவே!!' என்று தர்க்கம் செய்தான். விவசாயி குழப்பத்துடனும் கோபத்துடனும் நீதிபதியிடம் சென்று முறையிட்டான். நீதிபதி இருவரையும் அழைத்து இருவர் பக்கத்து நியாயத்தையும் விசாரித்தார். பின்னர் கிணற்றை விற்றவனிடம் 'நீ கிணற்றை விற்றுவிட்ட படியால் அது உன்னுடையதல்ல. அதில் உனது தண்ணீரை இன்னமும் வைத்திருப்பது தவறு. உனக்கு அதில்தான் தண்ணீரை சேமித்து வைக்க வேண்டுமென்றால் விவசாயிக்கு அதற்கான வாடகையைத் தினமும் கொடுத்து விடு. இல்லையென்றால் கிணற்றிலிருந்து உனது தண்ணீரை எடுத்துக் கொண்டு உடனே வெளியேறு' என்று தீர்ப்புக் கூறினார். விற்றவன் தலையைக் குனிந்து கொண்டே, தனது தவறுக்கு மன்னிப்புக் கோரி விட்டு, விவசாயியைக் கிணற்றின் முழுப் பயனையும் அனுபவிக்கச் சொல்லிவிட்டு, அங்கிருந்து சென்று விட்டான்.






## ஏனோ கோபம்?

அண்ணா, அண்ணா
ஓடிவா
அருமை அண்ணா
ஓடிவா
அண்ணா நீயும்
நில்லாமல்,
அருகில் கொஞ்சம் ஓடிவா.
என்னுடன் ஆடிப் பாடவே
எங்கும் சுற்றிப் பார்க்கவே
உன்னை நானும்
அழைக்கிறேன்,
உள்ளம் கொண்டு ஓடிவா.
சின்ன வீடு கட்டிடுவோம்
சிறிய பொம்மை
செய்திடுவோம்
என்ன அண்ணா
நீயங்கே எழுதிக் கொண்டு
இருக்கிறாய்?
தங்கை மனமும்
நோகுதே
தயவாய் இங்கே ஓடிவா
எங்கே இன்னும்
வரவில்லை,
ஏனோ கோபம் என்மீதே!

## விதியா? மதியா?

ஒருவன் ஒரு ஞானியிடம் சென்று கேட்டான். 'மனித வாழ்க்கையில் எல்லாவற்றையும் தீர்மானிப்பது அவன் விதியா அல்லது அவன் மதியா?'.

ஞானி சொன்னார். 'ஒரு காலை உயர்த்தி மறு காலால் நில்'



கேள்வி கேட்டவனுக்கு ஒன்றும்விளங்கவில்லை. ஆனாலும் இடது காலை உயர்த்தி வலது காலால் நின்றான். ஞானி சொன்னார். 'சரி அந்த இன்னொரு காலையும் உயர்த்து' அவனுக்குக் கோபம் வந்து விட்டது. நம் நடிகர் வடிவேலு மாதிரி 'என்ன சின்ன பிள்ளைத்தனமாக இருக்கு' என்று சீறினான். 'இரண்டு காலையும் உயர்த்தி எப்படி ஐயா நிற்பது?' ஞானி அமைதியாகச் சொன்னார். 'நான் காலைத் தூக்கச் சொன்ன போது எந்தக் காலைத் தூக்குவது என்று தீர்மானம் செய்தது உன் மதி. ஒரு முறை தீர்மானித்த பிறகு மறு காலையும் ஒருசேரத் தூக்கி நிற்க முடியாது என்பது விதி. பாதியை உன் மதி தீர்மானிக்கிறது. மீதியை உன் விதி தீர்மானிக்கிறது' அந்த ஞானியின் வார்த்தைகளில் சூட்சுமமான இன்னொரு உண்மையும் இருக்கிறது. விதி என்பதே முன்பு நாம் மதி கொண்டு தீர்மானித்ததன் பின் விளைவாகவே பெரும்பாலான நேரங்களில் இருக்கின்றது. விதியையும் மதியையும் விளக்க இன்னொரு உதாரணமும் மிகப் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

வாழ்க்கை ஒரு விதத்தில் சீட்டாட்டத்தைப் போல. குலுக்கிப் போடும் போது எந்தச் சீட்டுகள் வருகின்றன என்பது விதி. கையில் வந்த சீட்டுக்களை வைத்து எப்படி நீங்கள் ஆடுகின்றீர்கள் என்பது மதி. எந்தச் சீட்டு வர வேண்டும் என்பதை நம்மால் தீர்மானிக்க முடியாது. ஆனால் சீட்டுக்கள் கைக்கு வந்த பின் ஆடுவது நம் மதியிடம் உள்ளது.

நல்ல சீட்டுக்கள் வந்தும் ஆட்டத்தைக் கோட்டை விடுபவர்கள் உண்டு. மோசமான சீட்டுக்கள் வந்தாலும் கவனமாகவும், புத்திசாலித்தனமாகவும் ஆடி வெற்றி பெறுபவர்களும் உண்டு. சிந்திக்கையில் வாழ்க்கையை விதியும் மதியும் சேர்ந்தே தீர்மானிக் கிறது என்பதே உண்மையாகத் தோன்றுகிறது. ஆனால் மன உறுதியும், கடின உழைப்பும் மதியுடன் சேரும் போது அது விதியைத் தோற்கடித்து விடுகின்றது.

விதி நமக்குத் தருவதை அப்படியே ஏற்றுக் கொண்டு முடங்கிக் கிடக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அதையே மூலதனமாக எடுத்துக் கொண்டு மதியால் எத்தனையோ செய்ய முடியும். கால நேர சூழ்நிலைகளைக் கணக்கில் கொண்டு மதி கொண்டு உழைத்தால் அந்த விதியும் வளைந்து கொடுக்கும்.

# ஒழுக்கக்கோவை அடங்கிய பிரகடனம் ஜனாதிபதியிடம்

## இரு வாரங்களில் கையளிக்க நடவடிக்கை என்கிறது பவ்ரல் அமைப்பு

கொழும்பு, மார்ச் 23

நாடாளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளுக்கு இருக்கவேண்டிய பண்புகள், தகைமைகள், பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் முதலான முக்கிய விடயங்களை உள்ளடக்கிய ஆரோக்கியமான அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவிப்பதற்கான மார்ச் 12 பிரகடனத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்க பவ்ரல் அமைப்பு தீர்மானித்துள்ளது.

இன்னும் 2 வாரங்களில் இந்தப் பிரகடனத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்து, அவரின் ஆதரவைப் பெற எதிர்பார்ப்பதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்தப் பிரகடனம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, இந்தப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் அரசமைப்பில் உள்வாங்கப்பட்டு, தேர்தல் சட்டமாக்கப்பட்டால் மாத்திரமே அது குறித்து தான் அவதானம் செலுத்தமுடியும் என்று தெரிவித்திருந்தார். தேர்தல் ஆணையாளரின் மேற்படி கருத்துத் தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மார்ச் 12 பிரகடனத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கைச்சாத்திட்டுள்ளார். ஐ.தே.க. தலைவராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுஸில் பிரேமஜயந்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சம்பந்தன் , சிறிலங்கா முஸ் லிம் காங்கிரஸ் சார்பில் இராஜாங்க அமைச்சர் ஹஸன் அலி, ஜனநாயக மக்கள் முன்னணி சார்பில் மனோ கணேசன், ஜாதிக ஹெல உறுமய சார்பில் அத்துரலிய ரத்னதேரர் ஆகியோர் உள்ளிட்ட 15 அரசியல் கட்சிகள் இதில் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-சி)

# யானை தூக்கி வீசி குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யானையும் குட்டியும் வயலுக் குள் வருவதனைக் கண்ட குடும் பஸ்தர் அங்கிருந்து தப்பியோடினார். ஆனாலும் அவரைத் துரத்திச்சென்றும் பிள்ளையால் தூக்கி எறிந்தது யானை. அதனால் விலா என்புமுறிந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சை பயனளிக் காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

மன்னார் முருங்கன் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி இந்தச் சம்ப வம் இடம்பெற்றது. அதே இடத் தைச் சேர்ந்த பிலிப்குட்டி அந் தோனி (வயது 67) என்ற குடும் பஸ்தரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தரும் அவரது மகனும் அங்குளக்கர் கணக்கில் நெற் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு இரண்டு கொட்டில் அமைத்து இருவரும் தங்கியிருந்து பயிருக்குப் பாதுகாப்புக்கு இருப்பது வழமை. கடந்த 7 ஆம் திகதி வழமைபோன்று இரு வரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அதன்போது தாய் யானை தனது குட்டியுடன் வயலுக்குள் நுழைந்தது.

அதைக் கண்ட குறித்த குடும்பஸ்தர் பயத்தில் அங் கிருந்து தப்பியோடியுள்ளார். அவர் ஓடுவதனைக் கண்ட தாய் யானை அவரைத் துரத்திச் சென்றுள் ளது. ஒரு கட்டத்தில் குடும்பஸ்தர் தவறி நிலத்தில் விழுந்து விட்டார். அதன்போதே குறித்த குடும்பஸ் தரைத் தாய் யானை தனது தும்பிக்கையால் தூக்கி தூரத்தே வீசியது. வீசிவிட்டு உடனேயே தனது குட்டி நின்ற இடத்துக்கு ஓடிச் சென்றுவிட்டது. தூக்கி வீசப்பட்டவருக்கு பலமாக அடிபட்டுள்ளது. அவரை அங்கு நின்றிருந்த அவரது மகன் ஓட்டோ ஒன்றில் உடனடியாக முருங்கன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மறுநாள் அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டார். எனினும் விலா எலும்பில் பலமான அடிபட்டதனால் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் இறப்பு விசாரணை மேற்கொண் டார். விசாரணை மற்றும் பரிசோதனையின் பின்னர் உடல் உறவினர்களிடம் நேற்று ஒப் படைக்கப்பட்டது. (ற-4)

# விபத்தில் சிக்கிய மாணவன் சாவு

தென்மராட்சி, மார்ச் 23

பாடசாலை செல்லும் வழியில் மோட்டார் சைக்கிளால் மோதுண்டு காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த எட்டு வயது மாணவன் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தான். மீசாலை கிழக்கைச் சேர்ந்த வீரபத்திர சர்மா சதுர்சன் (வயது – 8) என்னும் மாணவனே உயிரிழந்துள்ளான்.

கடந்த புதன்கிழமை காலை சகோதரனின் சைக்கிளில் வந்த சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் பெரிய அரசடிச் சந்தியில் இறங்கி நடந்து சென்ற வேளையில் மோட்டார் சைக்கிளால் மோதுண்டு காயமடைந்தான்.

மாணவன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், நான்கு தினங்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளான்.(ற–131–9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 | 21 |
| 04 | 02 |
| 1928 | 2015 |



### அமரர் வைத்தி முத்தையா

எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆன்மா ஆண்டவனின் திருவடி நிழலில் ஆனந்தமுடன் அமைதி பெற அன்பு மனைவி, அருமைப்பிள்ளைகள் அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று 23.03.2015 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக் கின்றோம்.

மனைவி (பார்வதி), சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் சக்திவடிவேல் பிரதீபன் அவர்களின் அன்புத் தந்தை

### பொன்னையா சக்திவடிவேல்

18.03.2015 புதன்கிழமை அமரத்துவம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள்,
HNDA 2001-2004

(51691)
(10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பூமியின் மடியில்
03.09.1916



இறைவன் அடியில்
22. 02. 2015

### அமரர் தம்பு தங்கம்மா

22.02.2015 ஞாயிறு அன்று எமது குடும்ப குல விளக்கு அமரர் தம்பு தங்கம்மா இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மற்றும் பிற வழிகளிலும் இரங்கல் செய்தி அனுப்பியோருக்கும், இறுதி நிகழ்வில் பல்வேறு ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டி நிகழ்வு நாளை (24.03.2015) செய்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியம் அன்னாரின் நெற்கொழு வைரவர் கோவிலடி கொம்மந்தறையில் அமைந்திருக் கும் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியை நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அழைக்கிறோம்.

குடும்பத்தினர்
தகவல்: கோபி (பேரன்)

(சி/17178) (45.3.7)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி நாகேந்திரம் (செந்தில்)

(வர்த்தகர்-கொழும்பு)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி நாகேந்திரம் நேற்று (22.03.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், அம்பிகை, யோகாம்பிகை (பிரான்ஸ்), கண்ணன் (நோர்வே), காலஞ்சென்ற அஞ்சலாதேவி மற்றும் ரதிதேவி (ஆசிரியர்-யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியால யம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னார் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு, சுழிபுரம்.
தகவல்:
குடும்பத்தினர்.

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 19 |
| 07 | 02 |
| 1937 | 2015 |



### அமரர் ரோகிணியம்மா குமாரு

கடந்த 19.02.2015 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் ஆத்மசாந்திப் பிராத்தனை இன்று (23. 03.2015) திங்கட்கிழமை நீராவியடியில் அமைந் துள்ள 'இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடை பெறும். அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுத்துயரில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

19/2 , றெயில் றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



கடந்த 22.02.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் வேலுப்பிள்ளை கோபாலுகிருஸ்ணன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (24.03.2015) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்று, சமுத்திரத்தில் அஸ்தி கரைக்கப்படும்.

தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வல்லிபுரம், புலோலி.
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

### அமரர் பாக்கியலட்சுமி யோகன்

(புளியங்கூடல், ஊர்காவற்றுறை)

நிகழும் ஜயவருடம் 21.02.2015 சனிக்கிழமை சிவபதம்டைந்த எமது அன்புத்தாயாரின் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் பின்வருமாறு இடம்பெறும்.

- **அந்தியேட்டி: இன்று (23.03.2015) திங்கட்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் காலை 8.00 மணி தொடக்கம் இடம்பெறும்.**
- **சபிண்டீகரணம்: நாளை (24.03.2015) செவ்வாய்க்கிழமை புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் மு.ப 11 மணி தொடக்கம் இடம்பெறும்.**

இந்த நிகழ்வுகளில் உற்றார். உறவினர்கள். நண்பர்கள். அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். மதியபோசனத்திலும் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

இல.70/71, சென் பெனடிக் மாவத்தை,
கொழும்பு- 13
குடும்பத்தினர்.

(51683)(3.7.8)

# நிபுணர் குழு அறிக்கை தெளிவாக இல்லை

## சுன்னாகத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 23

சுன்னாகம் நிலத்தடி நீர் மாசு குறித்து வடக்கு மாகாண சபையினர் துறை சார்ந்த நிபுணத்துவம் வாய்ந்த அறிஞர்களை உள்ளடக்கிய நிபுணர் குழுவின் அறிக்கையை வெளியிட்டுள்ளனர். இருந்த போதும் அது தெளிவாக வெளியிடப்படவில்லை. அந்த அறிக்கையை தெளிவாக ஒரு சமூகத்தினருக்கு மட்டும் விளங்கக் கூடியவாறல்லாமல் சகலருக்கும் விளங்கும் வகையில் வெளியிட வேண்டும்– இவ்வாறு கோரிக்கை விடுத் துள்ளது தூய நீருக்கான பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்றியம்.

அந்த ஒன்றியத்தின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

"நிபுணர்குழு வெளியிட்டஅறிக்கை சார்பாக மக்களிடம் குழப்பங்களும் சந்தேகங்களும் ஏற்பட்டுள்ளன. குறித்த பிரதேசத்தில் தற்போதும் ஒயில் படை கண்ணுக்கு புலப்படுகின்றமையால் மக்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள நியாயமானதாகும். மக்கள் பயன்படுத்தும் நீரில் பீரெக்ஸ் இல்லை என கூறும் நிபுணர் குழு அந்த நீரை மக்கள் பயன்படுத்தமுடியுமா?. அதில் ஒயில் மற்றும் கிறீஸ் என்பவற்றின் அளவு நியமத்தை விட குறைவாக உள்ளதா? போன்றவற்றை உறுதியாகத் தெரிவிக்கவேண்டும்.

மக்களது அபிப்பிராயத்தின்படி நிலத்தினுள் ஒயில் கலப்பதற்கு காரணமாக இருக்கும் மின்சார நிலைய வளாகத்தில் இருந்து வடக்குத் திசை நோக்கிய நீரோட்டப் பாதையிலே அதிகளவான தாக்கம் காணப்பட்டது. தற்போது ஆய்வுக்கு தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் நிலையத்தைச் சுற்றி வட்ட வடிவில் அமைந்துள்ளதால் மாதிரிகளின் பிரதிபலிப்பிற்கான நிகழ்தகவு மிகவும் குறைவாக இருக்கக்கூடும். மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டபிரதேசத்தில் தற்போதும் ஒயில்படைகண்ணுக்குபுலப்படும் அதேநேரத்தில் இவ்வாறான அறிக்கைகள்.மக்கள் மத்தியில் அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

மாதிரிகள் தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினது உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கையின்படி கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒயில் கலந்துள்ளமை தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. ஆனால் அவை தற்போது திடீரென மாயமாக மறைந்துள்ளமை மக்கள் மத்தியில் மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏற்கனவே தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையால் ஆய்வு செய்யப்பட்ட 400க்கும் மேற்பட்ட கிணறுகளில் 80 வீதமான முடிவுகள் ஒயில் கலந்துள்ளமையை உறுதிப்படுத்தியிருந்தது. ஆனால் தற்போது 40 கிணறுகளில் மட்டும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு நீர் மாசு படவில்லை என அறிவிக்கப்படுகின்றது. அவ்வாறாயின் சுன்னாகம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் அனைத்துமக்களும் தங்களுடைய குடிநீர்மற்றும் அனைத்து நீர்த் தேவைகளுக்கும் பிரதேச கிணறுகளை பயன்படுத்தலாமா?

முற்றுமுழுதாக உறுதிப்படுத்தப்படாது அறிக்கையிடுவதன் நோக்கம் என்னவென்று விளங்கவில்லை. பிரதேச கிணற்று நீரைப் பயன்படுத்துவதால் எதிர்காலத்தில் வரும் விளைவுகளுக்கு இவர்கள் பொறுப்புக் கூறுவார்களா? என மக்கள் எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர். வெளிப்படைத் தன்மையில்லாது மேற்கொள்ளப்பட்ட ஆய்வினது வினைத்திறன் தொடர்பில் மக்களுக்கு திருப்தியற்ற நிலை காணப்படுகின்றது.

மத்திய அரசுடன் தொடர்பினை ஏற்படுத்தி இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிக்கு இவ்வாறான உறுதிப்படுத்தப்படாத அறிக்கைகள் இடையூறாக இருக்கும். இந்த விடயங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட விசேட செயலணியானது பொறுப்புடன் தெளிவான பதிலை வெளியிடாவிடின் மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படும்'' – என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–10)

## மரண அறிவித்தல்கள்

மலர்வு 1934 - 07 - 13



உதிர்வு 2015 - 03 - 21

### அம்புறோஸ் நித்தியானந்தராசா (நித்தி)

(ஓய்வு பெற்ற அதிபர்)

கரவெட்டி, கரணவாயைப் பிறப்பிடமாகவும் அடம்பன் கன்னாட்டியை வதிவிடமாகவும் தற்போது குழந்தையேசுபுரம், மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட அம்புறோஸ் நித்தியானந்தராசா (ஓய்வுபெற்ற அதிபர்) 21.03.2015 சனிக்கிழமை இறைபதமெய்தியுள்ளார்.

அன்னார் மெற்றலீனின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அம்புறோஸ் - அக்னேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை சூசையானா தம்பதியரின் (செல்லம்மா) பாசமிகு மருமகனும், பெலிசிற்றி இன்பராணி, வின்சன் இன்பராஜன் (லண்டன்), அருள்நேசன் (ஆசிரியர்-மன்/புனித வளனார் றோ.க.த.வி), காமலித்றாராஜினி (லண்டன்), யேசுநவநீதன் (அதிபர் - மன்/அந்தோனியார்புரம் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், செல்வரெட்ணம், மேரிலின்டா(பமிலா), மேரிஎலிசபேத்(றோகினி), கோடீஸ்வரன் (கோடீ), திவ்யாயாழினி ஆகியோரின் மாமனாரும், அபிசன்ராஜ், பிரதிஸ்கா, கிறிஸ்ரிக்கா, சன்ஸ்ரிக்கா, பிறின்சிக்கா, தர்மிக்கா, யூட்லிதுஷன், பற்றிக், டோமினிக்கா, சந்தோஷ், கெவின், சினுஸ்ரிக்கா, வோஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து 23.03.2015 திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு மன்னார் குழந்தையேசு ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் மன்னார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன் - நவநீதன் (நவம்) 077 212 4349, 023 222 2066

### சோமசுந்தரம் பரமசாமி

(ஓய்வுபெற்ற அரச மொழிபெயர்ப்பாளர்)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் புங்குடுதீவு கிழக்கு 11ஆம் வட்டாரத்தை புகுந்த இடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பரமசாமி 20.03.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-சரஸ்வதி தம்பதியரின் பெறாமகனும், காலஞ்சென்ற மருதாம்பாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி (சைவம்)-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், தமயந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் விளையாட்டுத் திணைக்களம் வடமாகாணம்), சிவானந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபாகரன் (சுபமங்களா ஸ்ரோர்ஸ்-மல்லாகம்), தேவதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ஈஸ்வரி, நித்தியானந்தன், சதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பஞ்சாட்சரம் (ஆசிரியமணி), மனோன்மணி, சுசீலா, முத்துலிங்கம், காலஞ்சென்ற விஜயரத்தினம் மற்றும் கருணாகரன் (ஜேர்மனி), சிவபாக்கியம் (ஆதி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2015) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

துரை வீதி, இணுவில் தெற்கு.

தகவல்: குடும்பத்தினர்.



### சதாசிவம் கருணானந்த சிவம்

சரவணை, வேலணையைப் பிறப்பிடமாகவும் தொண்டமான் நகர் கிளிநொச்சியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் கருணானந்த சிவம் 22.03.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இரஞ்சித மலரின் அன்புக் கணவரும், மகிந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - கரைச்சி) காலஞ் சென்ற பிறெமியா விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சங்கீதா (UNHCR - கிளிநொச்சி) கிசோக் கண்ணா (சுதன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகுல், கௌதம் ஆகியோரின் அன்புப் பேரனும், காலம் சென்றவர்களான சச்சிதானந்தசிவம், யோகானந்தசிவம் மற்றும் பரமானந்த சிவம், தர்மானந்தசிவம், சீதாதேவி, அருளானந்தசிவம், சதானந்தசிவம், மகானந்தசிவம், தேவானந்தசிவம், இராமானந்தசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமிர்தலிங்கம், நாகேஸ்வரி, மகாலிங்கம், நடேச மூர்த்தி, காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி மற்றும் சுந்தரமூர்த்தி காலஞ்சென்ற தேம்பாமலர் தெய்வேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.03.2015 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் தற்காலிக வதிவிடமாகிய தொண்டமான் நகர், கிளிநொச்சியில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(51394)

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை பற்றிக் இம்மானுவேல்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் இளவாலை அகத்தர் ஒழுங்கையையும் வவுனியா 162, கோயில் குளத்தையும் வசிப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை பற்றிக் இம்மானுவேல் 20.03.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை-அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அந்தோனிப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மரியமலரின் அன்புக் கணவரும், தங்கராணியின் அன்புச் சகோதரனும், மரியராணி யின் மைத்துனரும், சாந்தி (ஜேர்மன்), அன்ரன், செல்வராஜ் (பிரான்ஸ்), ஜெயந்தினி, அன்ரன் ஜோர்ஜ், அன்ரன் ஜெயக்குமார் (ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்), குமாரி, வசந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரொபின்சன் (ஜேர்மனி), தாசன் (ஆஸ்திரேலியா), அன்ரனி, ஜெகன் (பிரான்ஸ்), அனுஷா (பிரான்ஸ்), ராணி, அருள்ஸ்ரெலா ஆகியோரின் மாமனாரும், டன்யா, சிறோமி, டிலுக்சன், அனுஜன், லத்திக்கா, தர்சிகா, யூயின், ஜெரால்ட், டெலான், நிந்துஷா, கனிஸ்டன், போல்ராஜ், டிலுக்சிகா, கிருஷாந்தன், ரிசானி, சாரு, கரிஷ், அர்ஜின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி ஆராதனை நிகழ்வுக்காக நாளை (24.03.2015) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, புனித அந்தோனியார் ஆலயத்தில் மு.ப. 11.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டு, இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். 077 325 6853, 077 160 3352, 076 640 7721

இல.162, கோயில் குளம், வவுனியா.

(56238)(4.3.7)

### குலசேகரம்பிள்ளை இரவீந்திரநாதன்



ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறென்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம்பிள்ளை இரவீந்திரநாதன் 21.03.2015 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலசேகரம்பிள்ளை - செல்லபாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகம்மா மற்றும் நாகம்மா (மட்டுவில்) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-நல்லம்மா தம்பதியரின் மருமகனும், கணேஸ்வரியின் அன்புக் கணவரும், குமரேஸ்வரி, இரகுநாதன், மகேஸ்வரி, இராமச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும், கணநாதன், இந்திரா, கணேசலிங்கம், புஷ்பவதி ஆகியோரின் மைத்துனரும், சுதர்சன், சுரேசன், சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகப்பிரியா, கிஷாந்தி, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு மாமனும், நிதர்சி, டினேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.


தகவல்: குடும்பத்தினர். 021 221 3412

### கந்தையா பாலசுப்பிரமணியம்

(சாத்திரியார்)

(பிரபல புகையிலை வியாபாரி, சங்கானை)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் நேற்று (22.03.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான இராசலிங்கம்- நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், தவமணியின்அன்புக் கணவரும், பிரதீபன், கல்யாணி, கலையரசி, கவிதா, காண்டீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாமா, அருட்குமரன், விஜயரூபன் ஆகியோரின் அன்பு மாமனும், பாவனா, றேணுகன், ஜிவிஸ்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2015) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(51690)(4.3.7)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## கடந்த ஆண்டில் 229 பேருக்கு எச்.ஐ.வி. தொற்று

கொழும்பு, மார்ச் 23
இலங்கையில் கடந்த ஆண்டில் மாத்திரம் 229 பேர் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தேசிய பாலியல் நோய் பிரிவு தெரிவிக்கின்றது.
இவர்களில் அதிகளவானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர் என்றும் அந்த பிரிவு குறிப்பிடுகின்றது.
கொழும்பு மாவட்டத்தில் கடந்த ஆண்டில் மாத்திரம் 77 எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்கள் அடையாளம்காணப்பட்டுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 41 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதாக அந்த பதிவு சுட்டிக்காட்டுகின்றது.
இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்கள் என 2 ஆயிரத்து 073 பேர் பதிவாகியுள்ளனர் என்று அந்த பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே குறிப்பிடுகின்றார்.
கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட எச்.ஐ.வி பரிசோதனைகளில் 9 கர்ப்பிணி தாய்மார்களும் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.
இவர்கள் 6 பேருக்கு சிசு பிரசவம் இடம்பெற்றுள்ளதுடன், அந்த சிசுக்கள் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# சிகிரியாவில் பெயர் எழுதிய யுவதிக்கு மன்னிப்பு வழங்குக

பொதுபல சேனா கோருகின்றது

கொழும்பு, மார்ச் 23
சிகிரியா குன்றின் சுவர்களில் பெயர் எழுதியமைக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் யுவதிக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று பொதுபலசேனா கோரிக்கை விடுத்துள்ளது.
பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இனங்களுக்கு இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.
இதன் அடிப்படையிலேயே அவர் தேசிய கீதம் தமிழில் பாடப்படலாம் என்றும் என்ற அறிவிப்பையும் விடுத்துள்ளார். இந்த நிலையில் இனக்குரோத மனப்பான்மையை தவிர்க்கும் முகமாக மட்டக்களப்பு யுவதிக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## பொலிஸாரின் இடமாற்றங்கள் இரத்து

அனைத்து பொலிஸ் அதிகாரி களினதும் இடமாற்றங்களையும், உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.
இனிவரும் காலங்களில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளடங்கலான மூவரடங்கிய குழுவே, பொலிஸாரின் இடமாற் றங்கள் குறித்து தீர்மானிக்குமென ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்திருந்தது.

## 'போட் சிற்றி' நிறுத்தத்தால் 60 மில். டொலர் நட்டம்

கொழும்பு, மார்ச் 23
கொழும்பு துறைமுக நகர நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டதால், இதுவரை 60.8 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றுமதிப்பிடப்பட்டுள் ளது.
இந்த நிர்மாணப் பணியை தற்காலிகமாக நிறுத்த கடந்த 6ஆம் திகதி அமைச்சரவை தீர்மானம் எடுத்தது.
இந்தநிலையில் நிர்மாண அமைப்புக்கள் நிறுத்தப்பட்டமையால், நீர் தடுப்புகளில் ஏற்படும் கடல் அரிப்பு உட்பட்ட சேதங்களை பாதுகாக்க அனுமதிக்க வேண்டும் என்று, கட்டுமான சீன நிறுவனம், இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தது. அதற்கு இலங்கை அரசாங்கமும் அனுமதியை அளித்துள்ளது.
இதன்படி நீர்தடுப்பு சேதப்புனரமைப்புக்கள் கடந்த வெள்ளிக்கிழமைமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக சீனாவில் இருந்து மூன்று கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன. பணிகள் முடிவடைந்ததும் அவை சீனாவுக்கு திரும்பிவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் குறித்த கப்பல்களில் ஒரு கப்பலுக்கு நாளொன்றுக்கு 83 ஆயிரம் டொலர் வாடகையாக வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மைத்திரிக்கே வாக்களித்தனர் ஐ.தே.கவினருக்கு அல்ல

மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 23
மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கே வாக்களித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு அல்ல என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு மக்கள் வாக்களிக்கவில்லை. நான் தற்போது ஓய்வுபெற்று வருவதாகவும், அரசியலிலிருந்து முற்றுமுழுதாக ஒதுங்கிவிடவில்லை – என்றும் அவர் கூறியுள்ளார்.
விரைவில் மீண்டும் செயற்பாட்டு அரசியலில் களமிறங்க உள்ளேன். மக்களை சரியாக புரிந்து கொண்ட அரசியல் தலைவர் நானே – என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# மஹிந்த விரும்பினால் களமிறங்க முடியும்

ஐ.ம.சு.கூ. பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 23
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில் எவ்வித சிக்கல்களும் கிடையாது என கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட விரும்பினால் போட்டியிட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் பொதுத் தேர்தலில் அனைத்து கூட்டணி கட்சிகளும் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்படத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ செயற்பாட்டு அரசியலில் ஈடுபட விரும்பினால் அவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிட முடியும் எனவும் அதில் எவ்வித சிக்கல்களும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## சிங்கள மொழியிலேதான் தேசியகீதம் பாட வேண்டும்

சரத் வீரசேகர எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 23
தற்போதைய அரசின் செயற்பாடுகள் தொடர்பில் எவ்வித விளக்கமும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.
வானொலி நிகழ்வொன்றில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
தேசிய கீதம் சிங்கள மொழியில் மாத்திரம் பாடுவதால் தமிழ் மக்களுக்கு தேசிய கீதம் தொடர்பான உணர்வு இல்லாமல் போய்விடும். இதனால் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடினால் நாடு குறித்தும் தமிழ் மக்களுக்கு ஒரு உணர்வு ஏற்படுமென தெரிவிக்கிறார்கள். அது உண்மையா என அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.
அதற்கு பதிலளித்த அவர்,
தமிழ் மக்களுக்கு நாடு, தேசிய கீதம் தொடர்பாக உணர்வு வர வேண்டுமென்றால் அவர்கள் தேசிய கீதத்தின் அர்த்தங்களை புரிந்து கொள்ள வேண்டும். சிங்கள மொழியில் பல முக்கியமான வார்த்தைகள் கொண்டு தேசிய கீதம் எழுதப்பட்டுள்ளது. எனவே அதனை வேறு மொழியில் மொழிபெயர்ப்பு செய்வது தவறாகும்.
தேசிய கீதத்தை தமிழில் பாட அனுமதிக்க முடியாதென் முதலில் எதிர்ப்பு தெரிவித்தவர் மக்கள் விடுதலை முன்னணியின் சுனில் ஹதுன்நெத்தி, அவரின் பெயரை நாங்கள் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பு செய்தால் சென்ட்ல் வுட் நெட்டி என எழுத முடியாது.
அதேபோல் தான் சிறிலங்கா மாத்தா என்பதை ஸ்ரீலங்கா தாயே என்று எப்படி கூற முடியும். சிறிலங்கா மாத்தா என்று தான் தமிழிலும் பாட வேண்டும். தேசிய கீதத்தை தமிழில் எழுதினாலும் அதன் உச்சரிப்பு சிங்கள மொழியில் தான் இருக்க வேண்டும். எனவே தேசிய கீதம் சிங்களத்தில் தான் பாடவேண்டும்– என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## 50 ரூபாவுக்கு சோற்றுப் பார்சல்

### செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாம்

கொழும்பு, மார்ச் 23
சோற்றுப் பார்சலொன்றை, 50 ரூபாவுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக, உணவு பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.
இந்த செயற்றிட்டமானது எதிர்வரும் வாரத்திலிருந்து முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் இதன் முதலாவது கட்டம் கொழும்பு நகரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
சோற்றுப் பார்சலொன்றை 50 ரூபாவுக்கு விற்பனை செய்வதன் மூலம் அதன் உற்பத்தியாளர்கள் 8 ரூபாயை இலாபமாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ற)

## ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் ஆயுத விற்பனையில் ஈடுபட்டார்?

குற்றஞ்சாட்டுகின்றது உக்ரேய்ன்

கொழும்பு, மார்ச் 23
ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஆயுத விற்பனையில் ஈடுபட்டதாக உக்ரெய்ன் குற்றம் சுமத்தியுள்ளது. ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் உதயாங்க வீரதுங்கவிற்கு எதிராகவே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
உக்ரெய்ன் பிரிவினைவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்கியுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். துப்பாக்கிகள் மற்றும் ஏனைய ஆயுதங்களை முன்னாள் தூதுவர் விற்பனை செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
முன்னாள் தூதுவர் விரதுங்க உக்ரெய்னில் வசித்து வருகின்றார் என்பதுடன், உக்ரெய்னில் இலங்கை உணவு விடுதி ஒன்றை வீரதுங்க நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மிக நெருங்கிய உறவினரான வீரதுங்க, கடந்த அரசின் காலத்தில் தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார். மிக் ரக விமான கொள்வனவு உள்ளிட்ட பல்வேறு ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களுடன் வீரதுங்கவுக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## இலங்கை வந்து லாமா அரசியல் பேசக்கூடாது

பந்துல ஜெயசேகர கூறுகின்றார்

இலங்கைக்கு தலாய்லாமா வருவதாக இருந்தால் அவர் ஒரு பௌத்த மத வழிபாட்டாளராக மாத்திரம் கருதப்பட வேண்டும். இதனை விடுத்து அரசியல் பேசுவதற்கு அனுமதிக்கக் கூடாது – இவ்வாறு தெரிவித்துள்ளார் சிட்னியின் முன்னாள் கொன்சோல் ஜெனரல் பந்துல ஜெயசேகர
கண்டி தலதா மாளிகை மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களுக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்ட பின்னர், உடனடியாகவே இலங்கையில் இருந்து அனுப்பப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
ஏற்கனவே தலாய்லாமா இலங்கைக்கு வருகைத் தரவிருந்த போதும் சீனாவின் அழுத்தம் காரணமாக அது கைவிடப்பட்டது. திபெத்திய ஆன்மீக தலைவர் தலாய் லாமா சீனாவின் எதிரியாக கருதப்படுகிறார். அதனையடுத்தே அவர் இந்தியாவில் அஞ்ஞாதவாசம் இருந்து வருகிறார். இந்தநிலையில் அவரை இலங்கைக்கு அழைப்பதற்காக இரண்டு பௌத்த பிக்குகள் இந்தியாவுக்கு சென்றுள்ள நிலையிலேயே பந்துல ஜெயசேகரவின் கருத்து வெளியாகியுள்ளது. (ற)

## உருவானது

பதவிகளும், 10 பேருக்கு பிரதி அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட்டு புதிய தேசிய அரசு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய புதிய தேசிய அரசில் அமைச்சர்களின் எண்ணிக்கை 71 ஆக அதிகரித்துள்ளது.

**அமைச்சர்கள்**

அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக ஏ.எச்.எம். பௌசி, தொழில் அமைச்சராக எஸ்.பி.நாவின்ன, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சராக பி.கமகே, உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை அமைச்சராக கலாநிதி சரத் அமுனுகம, கிராம பொருளாதார அலுவல்கள் அமைச்சராக எஸ்.பி. திஸாநாயக்க, மாகாண மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சராக ஜனக பண்டார தென்னகோன், விசேட திட்ட அமைச்சராக பீலிக்ஸ் பெரேரா, நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சராக மஹிந்த யாப்பா அபேவர்தன, விமானசேவைகள் அமைச்சராக ரெஜினோல்ட் குரே, நீர்வளங்கள் அமைச்சராக விஜித் வீ.சொய்சா, மீன்பிடித்துறை அமைச்சராக மஹிந்த அமரவீர ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.

**இராஜாங்க அமைச்சர்கள்**

சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக பவித்ரா வன்னியாராச்சி, தொழில் இராஜாங்க அமைச்சராக ஜீவன் குமாரதுங்க, நிதி இராஜாங்க அமைச்சராக மஹிந்த சமரசிங்க, அரச நிர்வாக மற்றும் ஜனநாயக ஆட்சி இராஜாங்க அமைச்சராக சி.பி.ரட்ணாயக்க, வீடமைப்பு மற்றும் சமுர்த்தி இராஜாங்க அமைச்சராக டிலான் பெரேரா ஆகியோரும் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

**பிரதியமைச்சர்கள்**

பௌத்த சாசன மற்றும் ஜனநாயக ஆட்சி தொடர்பான பிரதியமைச்சராக திஸ்ஸ கரலியத்த, மீன்பிடித்துறை பிரதியமைச்சராக தயாஸ்ரீ திசேரா, உள்நாட்டு அலுவல்கள் பிரதியமைச்சராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய, அனர்த்த முகாமைத்து பிரதியமைச் சராக லக்ஷ்மன் செனவிரத்ன, விமான சேவைகள் பிரதி யமைச்சராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, நீர்வழங்கல் பிரதியமைச்சராக லலித் திஸாநாயக்க, பெருந்தோட்டத்துறை பிரதியமைச்சராக ஜெகத் புஷ்பகுமார, கிராம பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சராக லசந்த அழகியவன்ன, உயர்கல்வி மற்றும் ஆய்வுத்துறை பிரதியமைச்சராக சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே, ஊடகத்துறை பிரதியமைச்சராக சாந்த பண்டார ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

45 அமைச்சர்களை மட்டுமே கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசில் தற்போது 26 புதிய அமைச்சர்கள் அடங்கலாக புதிய தேசிய அரசாக மாற்றமடைந்துள்ளது. இதற்கமைய 27 ஆக இருந்த அமைச்சர்களின் எண்ணிக்கை 11 ஆல் அதிகரித்து 38 ஆகவும், 10 ஆக இருந்த இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 5 ஆல் அதிகரித்து 15 ஆகவும், 8 ஆக இருந்த பிரதிய மைச்சர்களின் எண்ணிக்கை 10 ஆல் அதிகரித்து 18 ஆகவும் உயர்த் தப்பட்டுள்ளன.

இலங்கை வரலாற்றில் 2ஆவது தேசிய அரசாக இது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 1965ஆம் ஆண்டு முதல் 1968ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அப்போதைய பிரதமர் டட்லி சேனாநாயக்க தலைமையில் இலங்கையின் முதலாவது தேசிய அரசு அமைக்கப்பட்டது. ஐக்கிய தேசியக்கட்சி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற குழு ஆகியவை இணைந்து இந்தத் தேசிய அரசு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், தற்போதைய தேசிய அரசில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய தொழிலாளர் முன்னணி, மலையக மக்கள் முன்னணி முதலான 7 கட்சிகள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தேசிய அரசு ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையானது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமர் வேட்பாளராகக் களமிறக்க முயற்சிக்கும் தரப்பினருக்கும், ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என எதிர்பார்த்த தரப்பின ருக்கும் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற–சி)

## இந்திய

மித்த கடற்பரப்பில் 5 படகுகளு டன் 21 மீனவர்களும், தலைமன் னார் கடற்பரப்பில் 5 படகு களுடன் 33 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மன்னாரில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீதிவானின் இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் நாளை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

அதேவேளை நாளைமறுதினம் இருநாட்டு மீனவர்களுக்கிடையில் பேச்சு சென்னையில் நடைபெறவுள்ளது. தற்போது மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதால் பேச்சைப் புறக்கணிக்கப்போவதாக இந்திய மீனவர்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ற–14,56)

## முதலமைச்சர்

போது அவ ருக்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்து திருப்பி யனுப்பியுள்ளனர். மஹிந்த அரசின் ஆட்சிக் காலத்தி லும், வடக்கு முதலமைச்சர் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் செல்ல முற்பட்ட போது, மாவிட்டபுரத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டிருந்தார். தற்போது மைத் திரி அரசின் ஆட்சிக் காலத்திலும், முதலமைச்சருக்கு வடக்கு மாகாணத்தின் எல்லைப் பரப்புக்கு உட்பட்ட பிரதேசத்துக்குள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வயாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு நேற்று மாலை வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சென்றிருந்தார். அங்கு மக்களுடன் கலந்துரையா டிய பின்னர், வயாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட, தோலகட்டிக்குச் செல்வதற்கு முதலமைச்சர் முயற்சி செய்தார்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியை முதலமைச்சர் தாண்டிச் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. அங்கு கடமையிலிருந்த இராணுவத்தினர் முதலமைச்சருக்கு மரியாதை செலுத்தினர். மேலிடத்து அனுமதியின்றி உள்ளே செல்ல முடியாது என்று அங்கு கடமையிலிருந்த இராணுவத்தினர் முதலமைச்சருக்குத் தெரிவித்தனர்.

மேலிடத்து இராணுவ அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதாக தெரிவித்த இராணுவத்தினர், அதனால் உள்ளே செல்ல முடியாது என்று தெரிவித்து, முதலமைச்சரை திருப்பியனுப்பினர். (ற–5,ரி)

## வடமாகாண

மிகவும் நல்லவர். அவரை எனக்குத் தனிப்பட்ட முறையிலும் நன்கு தெரியும். கொழும்பில் உயர் நீதிமன்றத்தில் நீதியரச ராகப் பணியாற்றியவர். அவருக்கு நாட்டின் சகல விதமான சட்டவரை யறைகள் பற்றியும் நன்கு தெரியும்.

எனவே அவர் வடக்கு மாகாண சபையின் தலைமைப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவராகக் காணப்படுகிறார். அவருடனோ அல்லது வடக்கு மாகாண சபையுடனோ எந்தவிதமான முரண்பாடுகளையும் ஏற்படுத்திக் கொள்ள அரசு தயாராக இல்லை."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"அவருடன் கலந்துரையாடி வடக்கு மாகாணசபையின் நிர்வாகத்திலுள்ள குறைபாடுகளைக் களைய வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்தில் அங்கே சில நிர்வாக முறைகேடுகள் இருந்தமை உண்மையாக இருக்கலாம். அவற்றை இனியும் தொடரவிடாது மத்திய அரசும், மாகாண அரசும் இணைந்து பணியாற்றுவது தொடர்பாகச் சிந்திக்க வேண்டும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் பேச்சு நடத்தி மத்திய மற்றும் மாகாண அரசுகளின் செற்பாடுகளை வரையறுத்து செயற்படுவதற்கான வேலைத்திட்டத்தை நாம் முன்னெடுக்க வேண்டும். மத்திய அரசும் மாகாண அரசும் ஒன்றையொன்று குற்றம் சாட்டுவதனால் இரு தரப்புக்குமே பாதிப்பு. அதனால் மக்களும் பாதிப்படைவர். பரஸ்பரம் விட்டுக்கொடுப்பு மூலமாக அடுத்தகட்ட நகர்வை நோக்கி நாம் செல்ல வேண்டும். இது புதிய அரசு. எம்மிடம் புதிய கொள்கைகள் உள்ளன."– என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ற–5)

## நிறைவேற்று

என்று அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் தெரிவித்திருந்தார். அந்த வாக்குறுதிகளை நம்பி மீள்குடியேற்றம் நடைபெறும் என்று மக்க ளிடம் நல்ல செய்தியை தெரிவித் தேன்.

ஆனால் தற்பொழுது என்னுடன் சேர்த்து மக்களும் ஏமாற்றப்பட்டு விட்டனர். மீள்குடியேற்றத்திற்கான சாதகமான கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஆனால் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில் இராணுவம் முட்டுக்கட்டையாக உள்ளது."– என்று அவர் கூறினார்.

"இவ்வாறான நடவடிக்கை, இந்த நாட்டில் இராணுவத்திற்கு அரசு கட்டுப்பட்டுள்ளதா அல்லது அரசுக்கு இராணுவம் கட்டுப்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தை பலமாக எழுப்புகின்றது."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு நின்ற மக்கள் முதலமைச்சரிடம் தங்களுடைய ஆதங்கங்களை முன்வைத்தனர். "இராணுவத்தினரை நம்பி 21 குடும்பங்கள் மாத்திரம் இங்கு எப்படி குடியமர முடியும்?. 1990 ஆம் ஆண்டு நாங்கள் இடம்பெயர்வதற்கு முதல் இருந்தவாறு இராணுவத்தை இருக்கப் பணியுங்கள். நாங்கள் தோட்டம் செய்த நிலங்களில் இராணுவத்தினர் இப்போது தோட்டம் செய்கின்றனர். பாதுகாப் புக்கும் தோட்டம் செய்வதற்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது?"– என்றும் மக்கள் கேள்வியெழுப்பினர். (ற–5,ரி)

## 'பீல்ட் மார்ஷல்'

30 வருட போரை நிறைவுக் குக் கொண்டுவந்த இராணுவத் தளபதி என்பதை கௌரவிக்கும் வகையிலேயே இப்பதவி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சரத் பொன்சேகா விசேட சலுகைகளையும் பெறுகின்றார்.

பாதுகாப்புப் பிரிவொன்றுக்கு வழங்கப்படும் அதியுயர் கௌரவ பதவியாக பீல்ட் மார்ஷல் பதவி கருதப்படுவதுடன், இதற்கு முன்னர் இலங்கையில் எந்தவொரு இராணுவ அதிகாரிக்கும் இப்பதவி வழங்கப்படவில்லை என்பது விசேட அம்சமாகும். அந்தவகையில் முதன்முறையாக இலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க பதவிப்பிரமாணமாக இது அமைந்துள்ளது.

உலக மட்டத்தில் இராணுவத்தினர் அடைந்துகொள்வதற்கு முயற்சிக்கும் அதியுயர்நிலையாக பீல்ட் மார்ஷல் பதவி கருதப்படுவதுடன், இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல் தடவை.

உலகின் பலம் வாய்ந்த இராணுவத்தைக் கொண்ட அமெரிக்காவில் கூட இப்பதவி இதுவரையில் அறிமுகப்படுத்தப்பட்டதில்லை. எனினும், இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்க இராணுவத் தளபதியான ஜெனரல் மக் ஆர்தர் என்பவருக்கு பிலிப்பைன்ஸ் இந்த உயரிய விருதை வழங்கியது. அது மட்டுமல்லாது, இந்தியாவில் இப்பதவி அறிமுகப்படுத்தப்படுள்ளபோதிலும் இரண்டு பேருக்கு அது வழங்கப்பட்டுள்ளதுடன் உலகள வில் இதுவரையில் இப்பதவிக்கு 25 இராணுவ அதிகாரிகளே நிய மிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற–சி)

## விசாரணை

தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் தற்போது ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதன் பக்க நிகழ்வாக, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நடத்தப்பட்ட மூடிய அறை கலந்துரையாடலில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே, சயிட் அல் ஹுசைன் இவ்வாறு கூறியுள்ளார்.

"போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா.வின் விசாரணை அறிக்கையை பிற்போடுமாறு மீண்டும் புதிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டாலும் கூட, விசாரணை அறிக் கையை செப்ரெம்பர் மாதம் வெளியிடுவேன். ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செப்ரெம்பர் அமர்வு ஆரம்பமாவதற்கு இரண்டு வாரங்கள் முன்னதாக, இந்த அறிக்கை வெளியிடப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. இந்த அறிக்கையை இப்போதும் கூட வெளியிட முடியும். ஆனாலும் செப்ரெம்பர் வரை பிற்போடப்பட்டுள்ளது"– என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமை கள் சபையின் 30 ஆவது அமர்வு, செப்ரெம்பர் 14 ஆம் திகதி தொடக் கம், ஒக்ரோபர் 02 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ற–5)

## விக்கி

அண்மையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வளலாயில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில், மீள்குடியமர்வு தொடர்பிலான உத்தியோகபூர்வ நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் வைத்து, வளலாயில் குடியமர்ந்த 30 பேருக்கும், வயாவிளான் மற்றும் பலாலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் குடியமர்ந்த 30 பேருக்குமாக 60 பேருக்கு மீள்குடியமர்வுக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் வளலாய், வயாவிளான் கிழக்கு, பலாலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவுகளின் ஒரு பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்வுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பையும் ஜனாதிபதி இங்கு வைத்து வெளியிடவுள்ளார். மேலும், மயிலிட்டி கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பங்கெடுக்கவுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் அறிக்கைப் போர் நடந்து கொண்டிருக்கின்றது. இந்தியாவின் தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணத்துக்குச் சென்று வடக்கு முதலமைச்சரை சந்திக்க மாட்டேன் என்று தெரிவித்திருந்தார். அத்துடன் வடக்கு முதலமைச்சர் பொய்யர் என்றும் குறிப்பிட்டிருந்தார். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் வடக்கு முதலமைச்சர், மாகாணசபை அமர்வில் வைத்து, ரணில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரிக்கப் பார்க்கின்றார் என்று தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், இரு வரும் இன்று நேருக்கு நேர் சந்திக்கவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ற–5)

## நாளை

கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் களுக்கு இடமாற்ற உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்டது. இருப்பினும், சில வேலைத் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதன் காரணமாக, அவை முடிவடைந்த பின்னர் புதிய நிலையங்களில் பதவியேற்பதற்கு மூன்று அரச அதிபர்களும் தீர்மானித்திருந்தனர்.

இன்று யாழ்.மாவட்ட அரச அதிபராக ந.வேதநாயகன் பொறுப்பேற்பார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஜனாதிபதி மைத்திரி தலைமையில் வலி. வடக்கு மீள்குடியமர்வு உத்தியோகபூர்வ நடவடிக்கை இன்று வளலாயில் இடம்பெறுகின்றது. இதன் காரணமாக புதிய அரச அதிபர் பதவியேற்பு பிற்போடப்பட்டது.

நாளை மறுதினம் புதன் கிழமை, யாழ்.மாவட்டச்செயலகத்தில் வைத்து யாழ்.மாவட்ட அரச அதிப ராக ந.வேதநாயகன் பொறுப்பேற் கவுள்ளார். இதேவேளை, யாழ்.மாவட்ட அரச அதிபராக இருந்த சுந்தரம் அருமைநாயகம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராகவும், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்த திருமதி ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராகவும் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற–5)


**காணி விற்பனைக்கு**

அல்லப்பிட்டியில் அமைந்துள்ள 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பெரிய Farm போன்ற நிறுவனங்களுக்கு உகந்தது.

தொ.பே: 077 835 0478

(57960) (4.3.7)



**சரவணா ரெக்ஸ்**

**SARAVANA TEX**

**வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்**

இல.770, 772, கே.கே.எஸ். வீதி (தட்டாதெருச் சந்தி) எனும் முகவரியில் இயங்கி வந்த சரவணா ரெக்ஸ், 526, 529 பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

மேற் கூறியதுபோல் இல.770,772 கே.கே.எஸ். வீதி எனும் முகவரியில் கணபதிப்பிள்ளை விமலதாசன் ஆகிய எனக்கு சொந்தமான சரவணா ரெக்ஸ் ஸ்தாபனத்தில் நீண்டகாலமாக காசாளராகக் கடமையாற்றிய சூரியகுமார் சுஜருபன் மற்றும் ஸ்தாபனத்தின் வங்கி சார்ந்த விடயங்களின் உதவியாளராகவும், வெளிக்கள உதவியாளராகவும் கடமையாற்றிய மகாலிங்கம் அந்திவண்ணன் ஆகிய இரண்டு ஊழியர்களும் எனது வியாபார ஸ்தாபனத்தில் இருந்து விலகிவிட்டார்கள். எனவே எனது வியாபார நிலையத்தின் நீண்டகால வாடிக்கையாளர்கள் சரவணா ரெக்ஸ் ஸ்தாபனத்துக்கு தரவேண்டிய கொடுப்பனவுகளை நல்லூரில் உள்ள எனது ஸ்தாபனத்தில் நேரடியாகக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் மேலே பெயர் குறிப்பிட்ட இந்த இரண்டு நபர்களிடமும் சரவணா ரெக்ஸ் சார்ந்த எந்தவொரு கொடுப்பனவு களையும் மேற்கொள்ள வேண்டாம். மேற்கொள்ளும் பட்சத்தில் எனது ஸ்தாபனம் அதற்கு பொறுப்பு அல்ல என் பதை உறுதிப்பட தெரிவித்து கொள்கின்றேன்.

உரிமையாளர்.

## திருத்தப்படுமா உதயபுரி கிராம வீதிகள்

திருகோணமலை, மார்ச் 23
திருகோணமலை, செல்வநாயகபுரம்பகுதியில்அமைந்துள்ள உதயபுரி கிராமம் செங்குத்தான மலைப்பாங்கான இடமாகும். நூற்றுக்கு மேற்பட்ட ஏழைக்குடும்பங்கள் வசிக்கின்றன. எனவே அங்குள்ளவீதிகளைத்திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுஉதயபுரி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர்சு.மு.கோணாமலை கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் தொவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குறித்த கிராமத்தின் வீதிகள் மிகவும் மோசமான நிலையில் பாதிப்படைந்துள்ளன. மழைகாலங்களில் வெள்ள நீரினால் பாதைகள் சிதைவடைந்து வருகின்றன. அத்துடன் பெரிய குழிகளும், பள்ளங்களும் வீதிகளில் ஏற்பட்டு வருகின்றன. இதன் காரணமாகபாடசாலைசெல்லும் மாணவர்கள் தொடக்கம் வயதானவர்கள் வரை தினமும் வீதிகளில் விழுந்து காயங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். எமது சங்கத்தின் மூலம் இவ்விடயத்தை முன்னாள் முதலமைச்சர், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர், உப்புவெளி பிரதேசசபை போன்ற பல உயர் அதிகாரிகளுக்கு பல முறை கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் முறையிட்டும் இதுவரை எந்த பயனும் கிடைக்கவில்லைஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.(வ-40)

# சம்பூரில் விரைவில் மக்கள் குடியமர்வு

## ஏப்.30 இற்கு முன் அவர்களின் நிலங்களைக் கையளிக்க ஏற்பாடு

திருகோணமலை, மார்ச் 23
சம்பூர் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நிலங்களை எதிர் வரும் ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னர் மீள கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'சம்பூர் உயர் பாதுகாப்பு வலயமாக கடந்த 9 வருடங்களாக கடற்படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்த 234 ஏக்கர் நிலமும் கேற்வே நிறுவனத்துக்கு அரசால் கையளிக்கப்பட்ட நிலையில் பொருளாதார அபிவிருத்தி வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட 818 ஏக்கர் நிலமுமே இவ்வாறு ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னர் சம்பூர் மக்களிடம் கையளிக்கப்படும் என்று புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

சம்பூர் மீள்குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடல் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ தலைமையில் அவரது அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோதே, அமைச்சர் உத்தியோகபூர்வமாக இந்தத்தகவலை வெளியிட்டார்.

இந்தச்சந்திப்பு தொடர்பில் அமைச்சர்சுவாமிநாதன்தெரிவிக்கையில்:

"கடந்த 9 வருடங்களுக்கு மேலாக சம்பூர் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குச்சென்று மீளக் குடியேற போராடி வருகின்றனர். அதற்கு நல்லதொரு தீர்வு தற்போது கிடைத்துள்ளது.

சம்பூர் குடியேற்றம் தொடர்பாக நல்லதொரு தீர்வை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது வழங்கியுள்ளனர். அமைச்சரவையும் சம்பூர் மக்கள் உடனடியாக மீளக் குடியேற் றப்பட வேண்டும் என்றே அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. அதற்கமைவாக இரண்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று முதலீட்டு வலயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 818 ஏக்கர் காணியையும்–உடனடியாக உரிய சம்பூர் மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுப்பதாகும். இரண்டாவது, கடந்த 9 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாக கடற்படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்த சுமார் 234 ஏக்கர் நிலமும் உ னடியாக விடுவிக்கப்படவுள்ளது.

கடற்படை உயர் அதிகாரி ள் இதற்குரிய ஒப்புதலைஅளித்துள்ளார்கள். கடற்படையினருக்கு வேறு ஒரு இடத்தில் படை முகாம் அமைக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன. அத்துடன்மீளக்குடியேற்றப்பட உள்ளவர்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க ஐக்கிய நாடுகள் நிறுவனம் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் உதவிகளை பெற பேச்சு நடத்தி வருகின்றோம்" என்று குறிப்பிட்டார்.

இந்தக்கலந்துரையாடலில் கிழக்கு முதலமைச்சர் அல்ஹாஜ் ஹாபீஸ் நஸீர் –கிழக்குமாகாணகல்விஅமைச்சர் சி.தண்டாயுதபாணி, உள்ளூர் போக்குவரத்து பிரதியமைச்சர் எம்.எஸ்.தௌபீக், மீள்குடியேற்ற அதிகார சபை தலைவர் ஹரீம் பீரிஸ், மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சனி நடராஜபிள்ளை மற்றும் பலர் கலந்துகொண்டனர். (வ)



வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் ஓமந்தை இணைப்பாளர் திவாகரன் ஒழுங்கமைப்பில் மாபெரும் குருதிக்கொடை முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது குருதிக்கொடையில் ஈடுபட்டோர்.. (வ-402)

## கனகராயன்குளம் மேற்கில் சட்டவிரோத மணல் அகழ்வு

கனகராயன்குளம், மார்ச் 23
கனகராயன்குளம் மேற்கு பகுதியில் புத்தூர்,புது விளாங்குளம் ஊடறுத்துச் செல்லும் வவுனிக்குளம் ஆற்று மணல் சட்டவிரோதமாக அகழப்படுவதற்கு அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் காணப்படும் பாவிலாற்று மணலை இராணுவத்தினரும் கடற்படையினரும் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்களும் மணலை வெட்டி எடுப்பதாக அந்தப்பகுதி மக்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

அங்கு மணல் அகழ்வு பெரியளவில் இடம்பெறுவதால் ஆறு ஆழப்படுத்தப்பட்டுள்ளதுடன், மண் அரிப்பு ஏற்பட்டு பல மரங்கள் முறிந்தும் விழுகின்றன.

இதுதொடர்பில் கனகராயன் பொலிஸார் கண்டுகொள்ளாமல் இருப்பதால் அந்தப் பகுதி மக்கள் வேதனையில் உள்ளனர். அத்துடன் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலதடவை அறிவித்தல் விடுத்தும் பயன் ஏதும் கிடைக்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-422)



## வீதிச் சந்தியில் பெரிய குழி சீர்செய்யுமாறு கோரிக்கை

கொழும்புத்துறை, மார்ச் 23
பாஷையூர் சென் செபஸ்ரியன் வீதி – முதலாம் குறுக்குச் சந்தியில் பெரிய குழி ஒன்று நீண்டகாலமாக சீர்செய்யப்படாது காணப்படுவதால் விபத்துக்கள் இடம்பெற்று வருவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்திப் பகுதியில் வீதியை ஊடறுத்துச் செல்லும் கழிவு நீர் கால்வாயின் மேற்பகுதி உடைந்தமையாலேயே அந்தக் குழி ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதியால் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் பயணிப்போர் பலமுறை அந்தக் குழியில் விழுந்து காயமடைந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடிசனச்செறிவு மிகுந்த பகுதியில் பாடசாலைக்கு அண்மையில் பொறிக்கிடங்கு போன்று காணப்படும் குழி ஆபத்து நிறைந்ததாகக் காணப்படுகிறது.

எனவே இதனைக் கவனத்தில் எடுத்து சீர்செய்ய யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-135)

## கஞ்சா கடத்திய இருவர் கைது

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு மரக்கறிகளைக் கொண்டு செல்லும் லொறியில்கஞ்சாகடத்தி, பல்வேறு பிரதேசங் களுக்கு விநியோகம்செய்த 2 சந்தேக நபர்களை தம்புள்ள பொலிஸார் கைது செய்துள்ளனர். இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து 2கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.(வ)

## பனம் கைப்பணிப் பயிற்சி இமையாணன ல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 23
பனை அபிவிருத்தி சபை உடுப்பிட்டி, இமையாணன் பகுதியில் பனம் கைப்பணி பயிற்சி ஒன்றை இன்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கவுள்ளது.

இந்தக் கைப்பணி பயிற்சிக்கு வறு மைக்கோட்டின் கீழ் உள்ள 25 பெண்கள் இணைக்கப்படுவார்கள். அவர்களுக்கு தொடர்ந்து ஆறு மாதகாலத்துக்கான பனம் கைப்பணி பயிற்சி வழங்கப்படும். பயிற்சி முடிவில் அவர்களுக்கு சுய தொழிலுக்கான உபகரணங்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பயிற்சியின்ஆரம்பநிகழ்வுசபையின் இணைப்பாளர் கியூ பெட்அன்ரனி தலைமையில்இடம்பெறும். பனை அபிவிருத்திச் சபைத் தலைவர், பணிப்பாளர் முகாமையாளர் ஆகியோர்கலந்து கொள்வர். (வ-17)

## பயிரழிவுக்கான விவசாயக் காப்புறுதி நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 23
சாவகச்சேரி கமநல சேவை நிலையப் பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு பயிர் அழிவு தொடர்பான விவசாயக் காப்புறுதி நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் தற்போது கொழும்பு தேசிய காப்புறுதி நம்பிக்கை தொழில் நிதியத்தினரால் காசோலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற பயிர் அழிவு தொடர்பில் விவசாயிகள் தமது பிரிவு விவசாய சம்மேளனங்களின் ஊடாக விண்ணப்பித்திருந்த நிலையில் தற்போது உரிய நட்ட ஈடுகள் விவசாயிகள் சிலருக்கு கடந்த வாரம் கிடைத்துள்ளன.

சகல விவசாயிகளுக்கும் இந்தக் கொடுப்பனவுக் கடிதங்கள் கிடைக்காத நிலையில் படிப்படியாக அவை கிடைக்கும் என்று கூறப்படுகின்றது.

மேலும் காசோலைகள் அனுப்பும் கடிதப் பிரதியில் எதிர்காலத் தில் இவ்வாறான விண்ணப்பங்களை அனுப்பும்போது உரிய விண்ணப்பித்ததுடன் வங்கிக் கணக்கு இலக்கம் கொண்ட பக்க பகுதியை தெளிவான நிழற்பிரதியாக அனுப்ப வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நட்ட ஈட்டுக்கொடுப்பனவுகள் தாமதம் இன்றிக் கிடைக்க வழி ஏற்படும்.

அதுமட்டுமல்லாது கிராமிய வங்கிக் கணக்குத் தொடர்பில் இவ்வாறான காசோலைகள் வைப்பில் இட்டுபணமாக்கமுடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-122)

# மருத்துவமனையில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல்

தென்மராட்சி, மார்ச் 23

சாவகச்சேரி மருத்துவமனையில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தரைத் தள்ளி வீழ்த்தி தாக்க முற்பட்ட எழுதுமட்டுவாழ், ஒட்டுவெளி வாசியை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த நபரால் தள்ளி விடப்பட்டுக் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் மிருசுவில் ஒட்டுவெளிப் பகுதியைச் சேர்ந்த 31 வயது குடும்பப் பெண்ணொருவர் நச்சுத் திராவகம் அருந்தியதாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளித்தனர். அவ்வேளையில் அங்கே வந்த பெண்ணின் கணவர் மனைவியைப் பார்க்க அவசர சிகிச்சைப் பிரிவினுள் செல்ல முயற்சித்துள்ளார். அப்போது அங்கு கடமையிலிருந்த மருத்துவர்கள் மது போதையில் காணப்பட்ட அவரை உள்ளே விட அனுமதிக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த கணவர் மருத்துவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். அவ்வேளையில் மருத்துவமனை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் அங்கு வந்து குறித்த நபரைச் சமாதானப்படுத்தும் நோக்கில் வெளியே அழைத்து வந்துள்ளார். கையில் பிள்ளையுடன் வந்த அவர் திடீரென பொலிஸ் உத்தியோகத்தரைத் தள்ளி வீழ்த்தி விட்டுத் தாக்க முயற்சித்துள்ளார்.

அங்கு நின்ற மருத்துவமனை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவரைப் பிடிக்க முற்பட்ட வேளையில் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்தினர் சாவகச் சேரி பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கவே அங்கிருந்து வந்த பொலிஸார் குறித்த நபரை நாலாபக்கமும் தேடினர். நபரைக் காணாததால் அவர் வசிக்கும் ஒட்டுவெளிப் பிரிவு கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டதென்பதால் அங்கு முறைப்பாடு செய்துள்ளனர். அதனையடுத்து அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். அவரது மனைவி சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அ.சிவானந்தம் என்பவரை சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்நேற்று முன்தினம் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வருட நடுப்பகுதியில் மருத்துவமனை வளாகத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தை அடுத்து பொலிஸார் மருத்துவமனையில் கடமையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

# சிறுமியை திருமணம் செய்த சந்தேகநபர் கைது



நெல்லியடி, மார்ச் 23

15 வயதுச் சிறுமியைத் திருமணம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த 21 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் சிறுமியைத் திருமணம் செய்து மூன்று மாத காலம் குடும்பம் நடத்தியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி மருத்துவப் பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-109)



பாஷையூர் கடலில் நேற்றுக்காலை மீனவர் ஒருவரின் வலையில் சுமார் பத்தடி நீளமான சுறா மீன் ஒன்று சிக்கியது. இந்த சுறா கரைக்குக் கொண்டுவரப்பட்டு எழுபத்திரண்டாயிரம் ரூபா விலைக்கு விற்கப்பட்டது. (வ-17)

# அமைதி பேரணி

## காணாமற்போனோரின் உறவுகளால் வடக்கு,கிழக்கில் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 23

காணாமற்போனோரின் உறவுகளால் வடக்கு, கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலும் இன்று திங்கட்கிழமை அமைதிப் பேரணி நடத்தப்படவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு காணாமற்போனோரின் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு இந்த அழைப்பை விடுத்துள்ளது.

அவர்களுடன் தமிழ் சிவில் சமூகம், மன்னார் பிரஜைகள் குழு உள்ளிட்ட பல அமைப்புக்கள் இந்த அழைப்பை விடுத்து பேரணியில் இணைந்துள்ளன.

காணாமற்போனோர் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவால் நடத்தப்படும் விசாரணையில் எதுவித நம்பிக்கையும் இல்லை என்பதனை வலியுறுத்தியே இந்தப் பேரணியை ஒழுங்கு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், அரசியல்வாதிகள் அனைவரையும் இதில் இணைந்து கொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

1983 ஆம் ஆண்டிலிருந்து வடக்கு, கிழக்கில் காணாமற்போன உறவுகள் தொடர்பாக தற்போது நடைபெற்று வரும் ஆணைக் குழு விசாரணைகள் போன்று 10 இற்கும் மேற்பட்ட விசாரணைகள் நடைபெற்று விட்டன. ஆனால் இன்னும் தீர்வு இல்லை. அதனால் காணாமற்போனோரின் உறவுகள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

தவிர முன்னைய ஜனாதிபதி ஆணைக் குழுவில் இருந்த அதிகாரிகளே தற்போதும் விசாரணை செய்வது நம்பிக்கை இல்லை. எனவே நல்ல முடிவைக் கொடுக்கக் கூடிய அமைப்பு தேவை. பேரணி முடிவில் மாவட்டங்களின் உயர் அதிகாரியிடம் மனுக் கையளிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-4)

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு சிறை

தென்மராட்சி,மார்ச் 23

போதைப் பொருளான கஞ்சா வைத்திருந்த வரணி வடக்கு வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் வெள்ளிக்கிழமை 5 வருடங்களுக்கு ஒத்திவைக் கப்பட்ட 3 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

வரணி மருத்துவமனைக்கு எதிராக உள்ள வணிக நிலையத்தில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் 500 மில்லிகிராம் கஞ்சாவைக் கைப்பற்றியதுடன் அதனை வைத்திருந்த நபருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட மூன்று மாத சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது. (வ-9)

# உப பொலிஸ் நிலையம் சுண்டிக்குளத்தில் திறப்பு

பளை, மார்ச் 23

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பிரிவுக்கான பொலிஸ் நிலைய உப அலுவலகம் பொலிஸ் போஸ்ட் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கின் எல்லையை அண்டிய பகுதியில் காணப்படும் சுண்டிக்குளம் பகுதியில் வெளியூர் பிரதேச கடற்றொழிலாளர்கள் அத்துமீறி தொழிலில் ஈடுபடுவது தொடர்பாக அண்மையில் அந்தப் பகுதி மக்கள் போராட்டம் நடத்தியதை அடுத்து வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பிரகாரம் பளைப் பொலிஸாரால் அங்கு பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் நிலைய உப அலுவலகத்தில் பொலிஸார் தொடர்ந்து கடமையில் இருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வடமராட்சி கிழக்கு பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து மருதங்கேணி சந்தியில் ஏற்கனவே பொலிஸ் உப நிலையம் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசம் பளைப் பொலிஸ் பிரிவுக்குள் அடங்குவதால் அந்தப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத செயல்கள் இடம் பெறுவது தொடர்பாக அறிவித்தல் கிடைத்தால் பளையிலிருந்து 30 கிலோ மீற்றர் இற்கு மேற்பட்ட தூரத்தில் உள்ள பகுதிகளுக்கு பொலிஸார் செல்வதற்கு இடையில் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் அங்கிருந்து தப்பிச் சென்றுவிடுகின்றனர். இதனால் பொலிஸார் நடமாடும் சேவை மாதாந்தம், நடத்தியபோதும் மருதங்கேணிச் சந்தியில் பொலிஸ் உப நிலையம் அமைத்து செயற்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது. (வ-9)

# போதையில் விபத்து; பெண்ணுக்கு இழப்பீடு

யாழ்ப்பாணம், மார்ச் 23

மதுபோதையில் - தலைக் கவசமின்றி அதிக வேகத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி, எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணை மோதிக் காயப்படுத்திய நபருக்கு பதினாறாயிரத்து ஐந்நூறு ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்ட யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ரூபா 35 ஆயிரத்தை இழப்பீடாகவும் செலுத்துமாறு உத்தரவிட்டது.

கடந்த வியாழக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கெதிராக கோப்பாய் பொலிஸாரால் ஐந்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. இந்த ஐந்து குற்றச் சாட்டுக்களுக்கும் மேற்குறித்த தொகைப் பணத்தை அபராதமாகச் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. தண்டப் பணத்தை செலுத்த தவறினால் இரண்டு மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.



அதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலையில் மயக்க மருந்து நிபுணராக கடமையாற்றும் பெண் மருத்துவரின் காரை முச்சக்கர வண்டியால் மோதி சேதப்படுத்திய நபர் ஒருவரையும் கோப்பாய் பொலிஸார் அதேதினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

குறித்த நபருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இருக்கவில்லை. அத்துடன் அவருக்கு எதிராக விபத்தை தடுக்க தவறியதாகவும் பொலிஸாரால் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு நான்காயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் மோட்டார் வாகனத்துக்கு ஏற்பட்ட இழப்பீட்டுக்காக இருபதாயிரம் ரூபா செலுத்துமாறும் நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். (ற-103)

# தென்மராட்சி தெற்கில் சிறுதானிய செய்கை ஆரம்பம்

சாவகச்சேரி,மார்ச் 23

தென்மராட்சியின் தெற்குப் பகுதியான மறவன்புலவு தனங்கிளப்பு, தச்சன்தோப்பு ஆகிய பகுதிகளில் உள்ள வயல்களில் விவசாயிகள் சிறுதானியச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகளுக்குவிவசாயத்திணைக்கள அதிகாரிகளால் தெரிவித்த அறிவுறுத்தலுக்கு அமைவாக காலபோக நெல் அறுவடை செய்த பின்னர் பயறு, கௌபி, உழுந்து, சணல், எள் என்பவற்றை விதைத்தனர்.

அவை பயிராகி வளர்ந்திருந்தன. ஆனால் அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் தமது கால்நடைகளைக் கட்டாக்காலிகளாக விட்டிருப்பதால் இவை வயலில் பயிராக இருந்தவற்றை மேய்ந்து வருவதாக விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்பட்டது. எனவே இவ்விடயம் தொடர்பாக விவசாயத் திணைக்களம் விவசாய சம்மேளனம் என்பன நடவடிக்கைமேற்கொள்ளவேண்டும். அவர்களின் சிறு தானியச் செய்கைக்கு ஏற்ற நிலைக்கு ஏற்ப தற்போது மழை பெய்துள்ளதால் விவசாயிகளின் சிறு தானிய விதைப்புக்கு விவசாயத் திணைக்களம் ஒத்துழைப்பு வழங்குவதுடன் கட்டாக்காலி உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. (வ-131)

# கூராய் பகுதியில் மணல் கொள்ளை

## விசனம் தெரிவிக்கும் பிரதேச மக்கள்

மன்னார், மார்ச் 23
மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உபட்ட, மீள் குடியேற்றம் செய்யப்பட்ட கூராய் கிராமத்தில் சட்டவிரோதமான முறையில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாகவும், தென்பகுதியை சேர்ந்த தனி நபர் ஒருவர் பொலிஸாரின் செல்வாக்குடன் மண் அகழ்வில் ஈடுபட்டு வருவதாகவும் அந்தக் கிராம மக்கள் மன்னார் பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

இந்த நிலையில் மன்னார் பிரஜைகள் குழுவின் உப தலைவரும், மன்னார் பிரதேச சபையின் உப தலைவருமான அந்தோனி சகாயம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கூராய் கிராமத்துக்குச் சென்று மணல் மண் அகழ்வு செய்யப்படும் இடத்தைப் பார்வையிட்டார்.

தென்பகுதியைச் சேர்ந்த சிங்களவர் ஒருவர் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மணல் மண் அகழ்வில் ஈடுபட்டு வருவதாகவும் இவருக்கு அந்தப் பகுதிப் பொலிஸார் ஆதரவு வழங்கி வருவதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த தென்பகுதியைச் சேர்ந்த நபர் இலுப்பக்கடவை பொலிஸாரைப் பயன்படுத்திக் கூராய் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரையும் அச்சுறுத்துவதாகவும் தெரி வித்துள்ளனர்.

குறிப்பாக கூராய் கிராமத்தில் உள்ள மக்களும் உரிய ஆவணங்களுடன் ஒதுக்கப்பட்ட இடங்களில் மணல் மண் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் தென்பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் தற்போது கூராய் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குச் சொந்தமான இடத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றார்.

ஏற்கனவே அந்தப்பகுதியில் மணல் மண் சட்டவிரோதமான முறையில் அகழ்வு இடம் பெற்று வருகின்றமை தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம் பெற்று வருகின்றது.



பட்டு வருவதாக கூராய் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் தலைவர் எஸ்.சந்திரமோகன் தெரிவித்தார்.

குறித்த மணல் அகழ்வை கிராம மக்களின் உதவியுடன் நிறுத்திய போது இனிமேல் இவ்விடத்தில் மணல் அகழ்வில் ஈடுபடமாட்டேன் என்று தெரிவித்த குறித்த தென் பகுதியைச் சேர்ந்த நபர் வேறு பாதை ஊடாக மீண்டும் அவ்விடத்தில் மண் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றார்.

இதன் போது குறித்த பகுதியில் மணல் மண் அகழ்வு செய்ய நீதிமன்றம் தடை விதித்திருந்தது. எனினும் குறித்த நபர் சட்ட விரோதமான முறையில் அவ்விடத்திலேயே மீண்டும் மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றார்.

தற்போது அளவுக்கு அதிகமாக மணல் அகழ்வு செய்யப்பட்டுள்ளமையினால் கடல் நீர் கூராய் கிராமத்திற்குள் செல்லும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமின்றி ஆற்று நீர் உப்பு நீராக மாறும் நிலை ஏற்படுவதால் விவசாயம் மற்றும் தோட்டம் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இன்னும் இரு மாதங்களில் இப்பகுதி முழுவதும் உவர் நீராக மாறி விடும்.எனவே இக்கிராம மக்களின் நலனை கருத்தில் கொண்டு இப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கூராய் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் இவ்விடயத்தில் தொடர்ந்தும் அசமந்தப் போக்குடன் செயற்பட்டு வருவதாக கிராம மக்கள் சுட்டிக் காட்டினர்.

கூராய் கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். 2010 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப் பகுதியில் 30 குடும்பங்களைக் கொண்ட 115 நபர்கள் மீள்குடியேற்றப்பட்டனர்.

இது வரையில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கோ அல்லது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் கிராம மக்கள் தெரிவித்தனர். (வ-56)

## கணினித் திருடர்கள் சிக்கினர்

பளை,மார்ச் 23
வடமராட்சி கிழக்கு மாமுனை அ.த.க. பாடசாலையில் திருடப்பட்ட கணினிகளை பளைப் பொலிஸார் கிளிநொச்சி, அச்சுவேலி, பளை ஆகிய இடங்களில் மீட்டதுடன் திருட்டுடன் தொடர்புடைய இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

பாடசாலைக் கதவை உடைத்து மூன்று தடவைகளில் திருடப்பட்ட கணினிகளே மீட்கப்பட்டுள்ளன. பொது மக்கள் கொடுத்த இரகசியத் தகவலை அடுத்து திருட்டுடன் தொடர்புடைய ஒருவரைக் கைதுசெய்து விசாரணையின் பின்னர் மேலும் ஒருவரைக் கைது செய்ததுடன் கணினிகளை மூன்று வர்த்தக நிலையங்களில் மீட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)

## 100 நாள் வேலைத்திட்டம் தென்மராட்சியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 23
அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் தலா ஒரு மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் ஆரம்ப நடவடிக்கைகள் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுகளில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதன்பிரகாரம் கிராமங்கள் தோறும் செயற்பாட்டுக் குழுக்கள் அமைக்கும் வேலைகள் பிரிவுக்கிராம அலுவலர்களால் இந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த செயல்பாட்டுக் குழுவின் தலைவராக பிரதேச கிராம அலுவலரும் செயலாளராக பிரிவு பொருளாதார அபிவிருத்தி உத்தி உத்தியோகத்தரும் செயற்படுவர் என்றும் உபதலைவர், உப செயலாளர், பொருளார் உட்பட மேலும் 7 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாக கூட்டத்தில் கலந்து கொள்ளும் அங்கத்தவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவர் என்றும் கூறப்பட்டது.

இந்த செயற்றிட்டம் தொடர்பான ஆரம்பக்கூட்டம் கடந்த வியாழன் மாசேரி கிராம அலுவலர் பிரிவிர் கிராம அலுவலர் தலைமையில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-122)



மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவன் வீதியில், திருக்கேதீஸ்வர கோயில் நிர்வாக சபையால் அங்குள்ள 40 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அந்த மக்களை நேற்று முன்தினம் மாலை நேரில் சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் அந்த மக்களது தேவைகள் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடினார். (வ-56)

## உள்ளூராட்சி சபை அலுவலர்களுக்கு மோ.சைக்கிள்கள்

வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் துணைத்தூதர்கள், உறுப்பினர்களுக்கு இன்று மோட்டார் சைக்கிள்கள் வழங்கப் படவுள்ளன.

தமக்கு மக்கள் பணியில் ஈடுபட மோட்டார் சைக்கிள்கள் வழங்க வேண்டும் என்று உள்ளூராட்சி சபைகளின் உறுப் பினர்கள் நீண்ட நாள்களாக விடுத்த கோரிக்கையை அடுத்து மோட்டார் சைக்கிள்கள் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கட்டணமாக 50 ஆயிரம் ரூபா செலுத்தி இன்று மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்களுக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## மக்கள் நலனைக் கவனித்து சேவையாற்ற வேண்டும்

### மன்னார் நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 23
மக்கள்நலனைக்கவனத்தில்கொண்டு மன்னார் நகர சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் தொடர்ந்து மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்று மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ். ரெட்ணசிங்கம்குமரேஸ்தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் 48 ஆவது சபை அமர்வு கடந்த 17 ஆம் திகதி எஸ். ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. அதன்போது கலந்து கொண்டு நகர சபை உறுப்பினர் உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய நாள் எமது உள்ளூராட்சி மன்ற தேர்தல் நான்கு வருடங்களுக்கு முன் நடைபெற்ற நாளாகவும், இது எமது கடைசிக் கூட்டமாகவும் இருக்கக்கூடும். எவ்வாறாயினும் மக்கள்நலனைக்கவனத்தில்கொண்டு நாம் ஒவ்வொரு உறுப்பினரும் தொடர்ந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்.

எமது பதவிக்காலம் முடிந்து விட்டது என்று ஒதுங்கியிருக்க முடியாது. எமது சபையால் தீர்மானிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்புக்கள் தொடர்ந்தும் வழங்க வேண்டும். சபை இல்லாமல் போகும் காலங்களில் இந்த நிர்வாகத்துக்கும் செயலாளருக்கும் ஏற்படுகின்ற அரசியல் மற்றும் ஏனைய நெருக்கடிகளுக்கு நாம் அனைவரும் முன்வந்து ஒத்துழைப்புச் செய்து இந்த நிர்வாகத்தைப் பலப்படுத்தி வழி நடத்த வேண்டும். எனக் கூறிய அவர், சில முக்கிய தீர்மானங்களையும் சபையில் முன்மொழிந்தார். (வ-56)

# திருக்குடும்ப கன்னியர் மடம் மற்றும் ஏஞ்சல் அணிகள் இந்துவின் கிண்ணத்தை ஏந்திச் சென்றன




யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்.இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆணடு நிறைவை முன்னிட்டு யாழ்.இந்துக்கல்லூரி கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்திய யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப் பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் கடந்த சனிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது.
இதில் பெண்கள் பிரிவில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணியும், ஆண்களுக்கான பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் வெற்றி பெற்று யாழ்.இந்துக்கல்லூரி வெற்றிக்கிண்ணத்தைதமதாக்கிக்கொண்டன.
முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட அணி 45:43 என்ற புள்ளிகளின்அடிப்படையில்வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் பலத்த போட்டியின் பின்னர் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 54:48 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதில் சிறந்த வீரனாக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி வீரன் சயிந்திரா தெரிவானர்.
(ரி,23)

## மூத்த பிரஜைகளின் 10 லட்சத்துக்கு 15 வீத வட்டி

கொழும்பு,மார்ச் 23
மூத்த பிரஜைகளின் நிலையான வங்கி வைப்புக் கணக்குகளில் 10 லட்சத்துக்கு மேற்பட்ட தொகை இருந்தாலும், 10 லட்சம் ரூபாவுக்கு மட்டும் 15சத வீத வட்டியை வழங்குமாறு நிதிஅமைச்சு இலங்கை மத்திய வங்கிக்கு பணிப்புரை விடுத்துள்ளது என பிரதி நிதியமைச்சர் ஹர்ஷ் டி சில்வா தெரிவித்துள்ளார்.
மூத்த பிரஜைகளின் 10 லட்சத்துக்கு மேற்பட்ட நிலையான வைப்புக்கள் தொடர்பாக அவர்க ளுக்கு நூற்றுக்கு 15 வீத வட்டியை வழங்க வேண்டாமென சம்பந்தப் பட்ட வங்கிகளுக்கு மத்திய வங்கியில் சுற்றறிக்கையொன்றில் மூலம் பணிப்புரைவிடுக்கப்பட்டிருந்தமை தாமதத்தினால் ஏற்பட்டிருந்த தவறு எனவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.
(ற)

# தெல்லிப்பழை யூனியன், அராலி சரஸ்வதி வலிகாமத்தில் வலுவான ஆதிக்கம்




யாழ்ப்பாணம், மார்ச் 23
வலிகாமம் வலயமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் 17வயது, மற்றும் 19வயதுப் பிரிவுகளில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணிகளும் வெற்றிபெற்று கிண்ணத்தை தமதாக்கின.
கடந்த வெள்ளிக்கிழமை அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற 15 வயதுப்பிரிவு அணிகளிற்கான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனயன் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு ஆணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா 12 புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரண்டு அணியினருக்கும் மேலதிகமாக இரண்டரை நிமிடங்கள் வழங்கப்பட்டது. மேலதிக நிமிடங்களை கச்சிதமாகப் பயன்படுத்திய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 4:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. 17வயதுப்பிரிவு அணியினருக்கான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 23:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. 19வயதுப்பிரிவு அணியினருக்கான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 28:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியின் ஆனது. (ரி,23)

# சென்.அன்ரனிஸ், சென்.மேரிஸ் அபாரம்



யாழ்ப்பாணம், மார்ச் 23
நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
கடந்த வெள்ளிக்கிழமை மின்னொளியில் இடம்பெறும் சூப்பர் 8 அணிகளுக்கான ஆட்டத்தில் மாலை 6மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ரி,23)

SPOKEN ENGLISH
O/L,A/L எழுதியோர், தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர், யுவதிகள் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 29.03.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
இலங்கையெங்கும் 7600 ஆசிரியர்கள், 20000 மாணவர்கள் கற்றுப் பயன்பெற்ற பயிற்சிப்பாசறை.
பயிற்சிநெறி முடிவில் "DIPLOMA CERTIFICATE"
எமது கிளைகள்
சங்கானை 021 567 41 33
நெல்லியடி 021 3200 607
SAAMSON LANGUAGE SCHOOL
யாழ்நகர். 077 621 4567 021 320 3313

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்
சிவராமலிங்கம் ஞாபகார்த்த நூலகம் திறப்பு விழா
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின்
நிதியுதவியுடனும்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம் பழைய மாணவர் சங்கத்தின்
அனுசரணையுடனும்
உட்கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்பட்ட
சிவராமலிங்கம் ஞாபகார்த்த நூலகத்தின் திறப்பு விழா
இன்று(23.03.2015) திங்கட்கிழமை,
முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது.
இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு
அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

JOB VACANCY
British College of Higher Studies requires teacher staff (Age below 50) for the post below
1. Post of English Lecturer (Male/ Female) - Full Time / Part Time
2. Post of Sinhala Lecturer (Male/ Female) - Full Time / Part Time
* Attractive Salary package will be offered
* Suitable candidates are required to apply in person/ by post/ through e-mail on or before 31/03/2015
* Short listed candidates will be called for an interview
British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. E-mail :info@bchs.lk
Tel : 021-2224550, Hotline(s) : 0777585913, 0777222422

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.